Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :295 புரட்டாதி 04ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 20 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



## இராணுவ சர்வாதிகாரமே 20ஆவது திருத்த வரைவு

### எச்சரிக்கிறார் சரவணபவன்

யாழ்ப்பாணம், செப். 20
ஜனநாயகத்தைப் பாது காப்பதற்காக கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப் படும் 19ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போதே தமிழர் கள் மிகப் பெரும் ஆபத் து க் க ளை எதிர்கொண்

27 ➤

## தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவு என்றும் நீடித்து நிலைக்கவேண்டும்

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 20
தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவை நான் மனதார வரவேற்கின்றேன். இந்த ஒன்றிணைவு என்றும் நீடித்து நிலைக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் 'உதயன் பத்திரிகைக்குத்'

28 ➤

### முச்சந்தி முரளி

" நாங்கள் ஒன்டாச் சேர்ந்தவுடன எப்பிடி இறங்கி வருகினம் என்டு பாத்தியளோ ? "



# நினைவேந்தலுக்கு அரசு தடைவிதிக்கவில்லை

## நீதிமன்ற விவகாரத்தில் ஒருபோதும் ஜனாதிபதி தலையிடமாட்டாராம்



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 20

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை முன்னெடுப்பதற்கு அரசு தடைவிதிக்கவில்லை. அங்குள்ள நீதிமன்றங்கள்தான் அதற்கான தடை உத்தரவுகளை வழங்கியுள்ளன. நீதிமன்றங்களின் உத்தரவுகளை யாரும் சவாலுக்கு உட்படுத்த முடியாது. ஜனாதிபதியும் இந்த விவகாரத்தில் தலையிடமாட்டார். இவ்வாறு இலங்கை அரசின் பேச்சாளர், அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

28 ➤

## மாகாணசபை முறைமையை நீக்குமாறு சொல்லவில்லை

### சரத் வீரசேகர 'பல்டி'



கொழும்பு, செப். 20
மாகாணசபை முறைமை முற்றாக ஒழிக்கப்படுமென நான் கூறவில்லை. இவ்வாறு உள்ளூராட்சி மற் றும் மாகாணசபைகள் இரா

28 ➤

## தமிழருக்கு நினைவுகூரலுக்கான உரிமையை வழங்கவேண்டும்

### தென்னிலங்கை முற்போக்கு சக்திகள் வலியுறுத்துகின்றன

யாழ், செப். 20
தமிழ் மக்களின் உரி மைகளுக்காக அறவழி யில் போராடி உயிர் தியாகம் செய்தவர் களை வீரர்களாகக் கருதி அவர்களை நினைவுகூருவதற் கான உரிமை தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். இவ்வுரி மையை வென்றெடுப்ப தற்காக தமிழ்க்கட்சிகள் ஓரணியில் திரண்டு ள்ளமை வரவேற்கக் கூடிய விடயமாகும். இது விடயத்தில் தமிழ்த் தலைவர்களால் முன் னெடுக்கப்படும் அனைத்து

27 ➤

## எத்தனை நாளைக்கு போராடுவார்கள்?

### ஹெகலிய எகத்தாளம்

யாழ்ப்பாணம், செப். 20
நினைவேந்தலுக்கான தடையை நீக்காவிடின் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் போராடுவதாயி னும் பொலிஸாரின் அனு மதியைப் பெற்றால்தான் அதனையும் செய்ய முடியும். அவர்கள் கடை யடைப்பு - ஹர்தாலை முன்னெடுப்பதானால் எத்தனை நாளைக்கு அதனைச் செய்வார்கள்? இவ்வாறு கேள்வி எழுப் பியுள்ளார் இலங்கை அரசின் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சரு மான ஹெகலிய ரம்புக் வெல.
தியாக தீபம்

27 ➤

## ஜே.வி.பியினருக்கு ஒரு சட்டம் தமிழர்களுக்கு இன்னொன்றா?

### இதுதான் ஒரு நாடு ஒரு சட்டமா? அரசிடம் கேள்வி எழுப்புகிறார் மனோ



யாழ்ப்பாணம், செப். 20
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் சவிடம் ஒரு விடயத்தைக் கூற விரும்புகின்றேன். நினைவேந் தல் நிகழ்வுகளை எந்தச் சட்டத்தையும் கொண்டு

26 ➤

## சாத்வீகப் போராட்டங்களுக்கு முஸ்லிம் சமூகம் நேசக்கரம்



யாழ்ப்பாணம், செப். 20
நினைவேந்தலுக்கான உரிமையை வலியுறுத்தி ஒன்றிணைந்துள்ள தமிழ்க் கட்சிகள் முன்

27 ➤

### நினைவேந்தல் உரிமையை வலியுறுத்தி

## தமிழ் தலைவர்கள் கூட்டாக கடிதத்தில் கையெழுத்திட்டனர்



யாழ்ப்பாணம், செப். 20
தியாக தீபம் திலீபனின் நினை வேந்தலை தமிழ் மக்கள் கடைப் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் அனைத்துக் கட்சிக ளும் இணைந்து

26 ➤

### மக்கள் முன்னணி

## இறுதி நேரத்தில் இறங்கி வந்தது

யாழ்ப்பாணம், செப். 20
தியாக தீபம் திலீபனின் நினை வேந்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்க்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் முயற்சியில் இறுதி நேரத்தில் இணைந்து கொண்டது தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி. இதனடிப்படை யில் தமிழ்த் தேசியத்தை வலியு றுத்தும் கட்சிகள் அனைத்தும் ஓரணியாக - ஒரே

26 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
011 200 88 88
செலான் வங்கி



# சிங்கள அரசுகளையே சரித்தவர்கள் தமிழர்கள்

## சிங்களவர்களுக்கு உள்ள பயத்தை போக்கவேண்டும் என்கிறார் சுரேன்

**கொழும்பு, செப். 20**
**வரலாற்றின் அடிப்படையில் இலங்கை அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் ஏனைய அரசுகளை தென்னிந்தியாவிலிருந்து தமிழ் அரசர்கள் ஆக்கிரமித்தார்கள் என்றுதான் உள்ளன. இதுதான் வரலாறு. இந்திய வரலாறும் அதுதான். இங்கிருக்கும் தமிழர்கள் அங்கு படையெடுக்கவில்லை. தேரவாத பௌத்தத்தில் கூறப்பட்டுள்ளது. தமிழர்கள் இந்த தேசத்தை ஆக்கிரமித்தார்கள். அநுராதபுர அரசை வீழ்த்தினார்கள். பொலனறுவை நாகரிகத்தை வீழ்த்தினார்கள். அந்த பயம் இன்னும் சிங்களவர்களிடம் ஆழமாக உள்ளது. 21ஆம் நூற்றாண்டில் வாழும் தமிழர்கள் ஆக்கிரமிக்கும் தமிழர்கள் அல்ல, அவர்கள் உங்களோடு சமமாக வாழ்ந்து, இந்த நாட்டை கட்டியெழுப்ப விரும்பும் இலங்கைக்குடிகள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.**

தனியார் வானொலி நிகழ்வில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத்தில் அனைவருக்கும் தமது கருத்தைச் சொல்ல உரிமையுள்ளது. நீங்கள் நாடாளுமன்றத்துக்குச் சென்று சைவர்கள் அரக்கர்கள் எனலாம். அப்படியான ஜனநாயக கட்டமைப்பு நாடாளுமன்றத்தில் உள்ளது. ஆனால், ஹன்சார்டில் எழுதப்பட்ட படியால் அது நீதியா காது. அது உண்மையாகாது. தமிழ் மொழியின் தொன்மையை கூறிய விக்னேஸ்வரன் அதை ஆக்கிரமிப்பு மொழியான ஆங்கிலத்திலேயே கூறினார்.

தமிழ் தொன்மையானது. உலகத்தின் பழமையான 10 மொழிகளில் தமிழும் ஒன்று. என்ன விடயமென்றால், தமிழ் மொழியின் பழைமையைச் சொல்லியே 21ஆம் நூற்றாண்டின் அரசியலைச் செய்ய முடியாது என்பதை அவர்கள் உணர வேண்டும். 50 ஆயிரம் வருடங்களின் முன் தமிழ் மொழி இருந்ததென்றால், அது தமிழுக்கு பெருமை. ஆனால் நாம் அங்கிருந்து 21ஆம் நூற்றாண்டிற்கு நாம் வர வேண்டும். அதுவும் இலங்கைக்கு வர வேண்டும். இலங்கையில் உள்ள அரசியலைப் பார்க்க வேண்டும். ஆகவே பழைமையின் உரிமையை சொல்வது இப்போதைய பேச்சுக்கு சாதகமாக உள்ளதா, பாதகமாக உள்ளதா என்பதை பார்ப்பதே அவசியம். ஆனால், அதனால் தமிழ் மக்கள் மீது சிங்களவர்களுக்கு உள்ள வைராக்கியம் எப்படி அதிகரிக்கிறது என்பதை பார்க்க வேண்டும். அமைதியாக இருக்கும் குளத்தில் கல்லெறிவது எனது விருப்பமாக இருக்கலாம். எறிந்த பின் என்ன நடக்கிறது என்பதை யோசிக்க வேண்டும். சுதந்திரத்துக்கு பிந்தைய தமிழ் அரசியல் என்னவென்பது, இரண்டு சனசமூகங்கள் தங்களுடைய உரிமையை பற்றி, பாரம்பரியத்தை பற்றி பேசுகிறார்கள். ஒருவரையொருவர் குற்றம்சாட்டாமல் இலங்கையென்ற அரசை கட்டியெழுப்புவது குறைவாகவே உள்ளது. தற்போது தேவையானது சிங்களவர்கள் மத்தியில் ஆணித்தரமாக சொல்ல வேண்டியது, தமிழினம் ஒரு தேசிய இனம். நாட்டை பிரிக்காமல், சம அந்தஸ்துடன் வாழ விரும்பும் இனம் என்பதை. ஆகவே சமனான இனத்துக்கு கொடுக்கும் வாய்ப்பைக் கொடுப்பது சிங்களவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த தமிழர்கள் இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதை சிங்களவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். 21ஆம் நூற்றாண்டில் வாழும் தமிழர்கள் ஆக்கிரமிக்கும் தமிழர்கள் அல்ல, அவர்கள் உங்களோடு சமமாக வாழ்ந்து, இந்த நாட்டை கட்டியெழுப்ப விரும்பும் இலங்கைக்குடிகள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். ஆனால் அதற்கு முரணான விடயங்களை செய்து கொண்டு; சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

சிங்களவர்கள் ஒன்றை உணர வேண்டும். தமிழர்கள் என்ற வரலாற்று பழைமையான இனம் இல்லாமல் இலங்கை ஜனநாயகமாக மாறாது.

ஜனாதிபதியோ, பிரதமரோ மகாநாயகர்களுக்கு சமமாக உட்கார முடியாது. விக்னேஸ்வரனை மகாநாயக்கர்கள் அவமதித்தார்கள் என்பது, சிங்கள கலாசாரத்தை அறிந்து கொண்டு அவர் அங்கு சென்றிருக்க வேண்டும். விக்னேஸ்வரன் தரையில் அமர வைக்கப்பட்டாரோ தெரியவில்லை. ஆனால், மகாநாயக்கர்களுக்கு சமமாக யாரும் உட்கார முடியாதென்பதே வரலாறு. இலங்கையின் அரசியலும் ஆன்மிகமும் ஒன்று. அது புரியாமல் நடக்கிறோம், என்றார். (ஒ.இ)

# நான் தவறிழைக்கவில்லை; ஆளுநர்தான் பிழைவிட்டார்

## விக்கி பிடிவாதம்



யாழ்ப்பாணம், செப். 20
டெனிஸ்வரன் விவகாரத்தில் அப்போதைய வடக்கு ஆளுநராக இருந்த ரெஜினோல்ட் குரேயே தவறிழைத்தார். நான் எந்தப் பிழையும் செய்யவில்லை. ஆளுநரின் பிழை என்னை அவதிக்குள்ளாக்கி விட்டது. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கேள்வி, பதில் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கேள்வி: நடைபெற்று முடிந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் வட மாகாண முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் நடந்து கொண்ட விதம் உங்களுக்குத் திருப்தி அளித்ததா? அத்துடன் இந்த வழக்கு பற்றி உங்கள் கருத்தென்ன? நீங்கள் பிழை செய்தீர்களா?

### டெனீஸ் மறுப்பு

பதில்: நான் மாகாண சபையில் எடுத்த நடவடிக்கையானது எனது தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் பால் எடுக்கப்பட்ட நடவடிக்கையன்று. அமைச்சரவையின் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அந்த அமைச்சர்கள் பதவி விலகி தம்மீதான விசாரணையை எதிர் கொண்டு அதனூடாகத் தம்மை நிரபராதிகள் என்று நிரூபிப்பதன் மூலமாக மாகாண சபை நிர்வாகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவே விரும்பியிருந்தேன். அதில் டெனீஸ்வரன் தாம் குற்றமற்றவர் என்ற வகையில் தான் பதவி விலக முடியாது என்று மறுத்தார். ஆனால் அவர் குற்றமுடையவர் என்ற கணிப்பில் நான் அவரை விலகச் சொல்லவில்லை. அவர் மீது குற்றம் சாட்டிய ஒருவர் புதிய அமைச்சர் அவையில் இருந்த காரணத்தினால் குற்றஞ் சாட்டியவரும் குற்றம் சாட்டப்பட்டவரும் ஒருமித்து அமைச்சர் அவையில் இடம் பெறுவது உசிதமில்லை என்று நினைத்தே அவரைப் பதவி துறக்கச் சொன்னேன்.

### சொற்கேட்கவில்லை

குற்றம் சாட்டியவர் விசாரணைத் தினத்தில் ஜெனிவா செல்ல வேண்டியிருந்ததால் அவரால் சாட்சியம் அளிக்க முடியவில்லை. கால நீடிப்பு வழங்க ஆணைக்குழு உறுப்பினர்கள் சம்மதிக்கவில்லை. ஆகவே இரு அமைச்சர்கள் மீதான விசாரணை நடைபெறவில்லை. டெனீஸ்வரன் தவிர்ந்த மற்றைய அமைச்சர்கள் எனது கோரிக்கைக்கு உடன்பட்டு தமது பதவிகளைத் துறந்தார்கள். மேற்கண்ட காரணங்கள் நிமித்தம் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும் என்ற கடப்பாட்டில் நான் அவரைப் பதவி விலக்கியிருந்தேன். அவர் அதற்கு எதிராக நீதிமன்றை நாடியிருந்தார். டெனீஸ்வரனைப் பொறுத்தவரையில் இது அவருக்கு ஒரு மானப்பிரச்சினையாக இருந்தது என்பதைப் புரிந்துகொள்கின்றேன்.

### எனக்கெதிரான பொறி

ஆனால், இந்த விவகாரத்தை வேறு சிலர் எனக்கு எதிரான பொறியாகப்பாவிப்பதற்கு திரைமறைவில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். உதாரணத்துக்கு ஒரு கட்சிக்காரர் எந்தக் காலத்திலும் மன்றுக்கு வராது இருக்க அவரின் சட்டத்தரணி மட்டும் முழு மூச்சில் நடவடிக்கைகளில் பங்கு பற்றினார். தோகை விரித்தாடும் மயில் போல் அங்கும் இங்கும் திரிந்து தமது முக்கியத்துவத்தை வெளிக்காட்டினார். கட்சிக்காரருக்கு மன்றில் என்ன நடந்ததென்று தெரிந்திருந்ததோ எனக்குத்; தெரியாது. எனக்கு எதிரான வழக்கைத் தொடர்ந்து நடத்துமாறு சிலர் டெனீஸ்வரனுக்கு அழுத்தங்களை பிரயோகித்திருந்திருக்கலாம் என்று உணர்கின்றேன். ஆனால், எத்தகைய அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் இறுதி நிமிடத்தில் டெனீஸ்வரன் சுதாகரித்து நல்லதொரு முடிவை எடுத்திருக்கின்றார். இன உணர்வு சார்ந்த அவரின் இந்த செயலை நான் பாராட்டுகின்றேன். அவரின் செயல் சுயநல சிந்தனையுடனும் மற்றும் இன ரீதியாகச் சிந்தித்த சிலரினதும் வாயில் மண் அள்ளிப் போடச் செய்துள்ளது.

### ஆளுநரின் தவறு

டெனீஸ்வரனைப் பதவி நீக்கம் செய்த விடயத்தை வர்த்தமானியில் ஆளுநரோ அவரின் செயலரோ பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த வழக்கே பதிந்திருக்க முடியாது. டெனீஸ்வரனின் வெற்றிடத்துக்குப் பதில் அமைச்சர்களை நியமித்து வர்த்தமானியில் பிரசுரித்த ஆளுநர் டெனீஸ்வரனின் பதவி நீக்கத்தை வர்த்தமானியில் பிரசுரிக்காது இருந்தமை வியப்பை ஊட்டுகின்றது. ஆளுநருக்கு இருந்த அவரது அதிகாரத்தை நான் ஏற்றே உத்தியோகபூர்வ அறிவித்தல் டெனீஸ்வரனுக்கு விரைவில் கிடைக்கும் என்று டெனீஸ்வரனுக்கு அறிவித்தல் செய்திருந்தேன்.

உத்தியோகபூர்வ அறிவித்தல் என்பது வர்த்தமானிப் பிரசுரிப்பையே. ஏன் அவ்வாறு பிரசுரிக்கவில்லை என்று ஆளுநரிடம் கேட்கப்பட்டிருந்தால் அல்லது பிரசுரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தால் இவ்வளவு அமர்க்களங்கள் ஏற்பட்டிருக்காது. நான் ஏற்கனவே ஆளுநரின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டிருந்தேன். அதனால்த் தான் உத்தியோகபூர்வ அறிவித்தல் வரும் என்று குறிப்பிட்டிருந்தேன். அப்படியிருந்தும் ஆளுநரிடம் எதுவும் கேட்கப்படவில்லை. அவரும் நீதிமன்றம் வந்ததில்லை. அதனால்த் தான் இதனை ஒரு துன்பியல் நிகழ்வென்றேன். நான் எந்தப் பிழையும் செய்யவில்லை. ஆளுநரின் பிழை என்னை அவதிக்குள்ளாக்கி விட்டது, என்றுள்ளது. (ஒ,5)

# இலங்கை பேரவையிலிருந்து அன்றி தீர்மானத்திலிருந்தே விலகுகிறதாம்

## குறிப்பிடுகின்றது அரச தகவல் திணைக்களம்

**கொழும்பு, செப். 20**
**ஐ.நா. மனித உரிமை பேரவையிலிருந்து விலகுவது குறித்து எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை என்று அரசு அறிவித்துள்ளது. அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்த விடயத்தை ஊடகங்கள் தவறாக அர்த்தப்படுத்தியுள்ளன என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

செய்தியாளர் மாநாடு ஒன்றின்போது அமைச்சர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலிருந்து இலங்கை விலகவுள்ளதாக குறிப்பிடவில்லை, மனித உரிமை பேரவையின் தீர்மானத்திலிருந்து விலகுவதற்கான அவசியமான நடவடிக்கைகளையே அரசு எடுத்துள்ளது என்றே அமைச்சர் குறிப்பிட்டார் என்றும் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (கு-இ)

# ஒலிபெருக்கி பாவனைக்கும் நீதிமன்றை நாடும் நிலைமை!

## சப்பாத்துக் கால்களுடன் பொலிஸாரால் ஆதிலிங்கேஸ்வரர் கோவிலில் உபத்திரவம்

வவுனியா, செப். 20



வவுனியா வடக்கு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் கோவில் மகோற்சவத்தில் ஒலிபெருக்கி பாவனைக்கு தடைவிதித்துள்ள விடயம் தொடர்பாக நீதிமன்றத்தை நாடவுள்ளோம் என்று கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் கு.திலீபன்தலைமையில்நேற்றுமுன்தினம்நடைபெற்றது. அங்கு மேற்கண்டவாறு கூறினர்.

திருவிழா நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில் ஒலிபெருக்கி பாவனைக்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

இது எமது மக்களின் மத சுதந்திரத்தைச் சீர்குலைப்பதற்கான செயற்பாடுதான்.

கோவிலுக்கு சிவில் உடையில் வரும் பொலிஸார் வழிபாட்டில் ஈடுபடுபவர்களை அலைபேசியில் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றனர். கோவிலை அவமதிக்கும் விதமாக காலில் பாதணிகளுடனேயே கோவிலுக்குள் வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் திருவிழாவில் கலந்துகொள்ளும் மக்களின் தொகை வெகுவாக குறைந்துகாணப்படுகின்றது. என்றனர்.

தொல்பொருள் திணைக்களத்திடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்றுவந்தால் தாம் ஒலிபெருக்கி பாவனைக்கு அனுமதி வழங்குவோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சப்பாத்து கால்களுடன் கோவிலுக்குள் நுழைவது மற்றும் ஒளிப்படம் எடுக்கும் விடயங்களை நிறுத்துமாறு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஏற்கனவே நீதிமன்றம் ஓர் உத்தரவு வழங்கியுள்ளமையால் ஒலிபெருக்கி பாவனை விடயத்துக்கு நீதிமன்றமூடாக தீர்வு பெறுமாறு தெரிவித்திருந்தார். இந்தநிலையில் நீதிமன்றமூடாக இந்த விடயத்தை அணுகவுள்ளோம் என்று கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (கு-110)

# இரட்டைக் குடியுரிமையால் பிரிவினையே வலுவாகிறது

## நீக்குமாறு ஞானசார தேரர் கோரிக்கை



கொழும்பு, செப். 20

விடுதலைப் புலிகள் அமைப்பு நாட்டில் இல்லாதொழிக்கப்பட்டாலும் அவர்களின் பிரிவினைவாத கொள்கை உலகம் முழுவதும் வியாபித்துள்ளது. புலம்பெயர் தமிழர் அமைப்புகள் இரட்டை குடியுரிமை விவகாரத்தை பிரிவினைவாத கொள்கையை செயற்படுத்த பயன்படுத்திக் கொள்வார்கள். ஆகவே இரட்டை குடியுரிமை விவகாரத்தை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார், பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இரண்டாம் குடியரசு யாப்பு இதுவரை காலமும் 20 சீர்திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது. பிரதான இரு கட்சிகளும் ஆட்சியமைக்கும் போது தங்களுக்குத் தேவையான விதத்தில் அரசமைப்பை திருத்தம் செய்து கொள்கின்றன. இதனால் அரசுக்கு நன்மை ஏற்பட்டுள்ளதே தவிர நாட்டுக்கு எவ்வித அபிவிருத்திகளும், மாற்றங்களும் ஏற்படவில்லை. அரசமைப்பின் 17 ஆவது திருத்துக்கு ஆதரவு வழங்கிய அரசியல்வாதிகள் 18 ஆவது திருத்துக்கும் 19 ஆவது திருத்தத்துக்கும் ஆதரவு வழங்கினார்கள். அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் கடந்த காலங்களில் அரச மற்றும் சமூக மட்டத்தில் பிரதான பேசுபொருளாக காணப்பட்டது. 19ஆவது திருத்தத்தை ஆதரித்த அரசியல்வாதிகள் அரசியல் தேவைகளுக்காக அதனை எதிர்க்கவும் ஆரம்பித்தார்கள். அது அரசியல்வாதிகளுக்கே உரித்தான தனித்துவ இயல்பு. அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இரத்து செய்து புதிய அரசமைப்பை உருவாக்குவதாக ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். தற்போது அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தத்திருத்தில் இரட்டைக் குடியுரிமையை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சீனர்கள், இந்தியர்கள் ஆகியோர் எதிர்காலத்தில் இலங்கை நாடாளுமன்றில் உறுப்பினராகச் செயற்படுவார்கள் என்பதில் எவ்வித ஆச்சரியமும் கிடையாது. ஆகவே அரசு இரட்டைக் குடியுரிமை விவகாரத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றார். (கு)

# 3 கொள்கலன்களில் மீட்பு சுங்க அதிகாரிகள் இருவர் கைது

கொழும்பு, செப். 20

33 ஆயிரம் கிலோகிராம் மஞ்சள் சுங்க திணைக்களத்திலிருந்து சட்டவிரோதமான முறையில் வெளியேற்றப்பட்டது தொடர்பில் சுங்க அதிகாரிகள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 33 ஆயிரம் கிலோ மஞ்சளுடன் மூன்று கொள்கலன்களும் மூன்றாயிரம் கிலோ உளுந்துடன் 7 லொறிகளும் நேற்றுமுன்தினம் புளுமென்டல் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தன. வாகன தரிப்பிடம் ஒன்றில் சுமார் 40 அடி நீளம் கொண்ட மூன்று கொள்கலன்களில் மஞ்சள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை மீட்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் 10 பேர் புளுமென்டல் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சட்டவிரோத மஞ்சள் மற்றும் ஏனைய பொருள்கள் டுபாயிலிருந்து சில தினங்களுக்கு முன்னர் இந்நாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. மட்டக்குளி பிரதேசத்தின் வர்த்தகர் ஒருவரால் குறித்த பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (கு)

# நோர்வே பல்கலையுடன் இணைந்து தூயசக்தித் தொழிநுட்ப முதுமாணி

யாழ்ப்பாணம், செப். 20

மேற்கு நோர்வே பல்கலைக்கழகமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இணைந்து தூயசக்தித் தொழிநுட்பத்திற்கான முதுமாணிக் கற்கைகளை ஆரம்பித்துள்ளன.

எதிர்காலத்தை இலங்கை எதிர்நோக்கியிருக்கையில் இந்தக் கற்கைநெறியின் தொடக்கமானது இலங்கையில் தூய சக்தி உற்பத்தியையும் பயன்பாட்டையும் அதிகரிப்பதற்கு வலுச்சேர்க்கும். தேர்ச்சியும் வினைத்திறனும் அறிவும் கொண்ட பணியாளர்கள் தூயசக்தி தொழிநுட்பத்தின் பரவலுக்கு அவசியமாகும். அந்தத்தேவையை அறிந்து அதைப்பூர்த்திசெய்து கேள்விச்சந்தைக் குரிய மனிதவளங்களை தரத்துடன் வழங்குவதும் இந்தக் கற்கைநெறியின் நோக்கமாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் மேற்கு நோர்வே பல்கலைக்கழகமும் இணைந்து இதற்கான பாடத்திட்டத்தைத் தயாரித்துள்ளன. இலங்கை, இந்தியா, அமெரிக்கா, சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த வளவாளர்கள் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளார்கள். இந்தக்கற்கையில் சிறப்பாகச் செயற்படும் மாணவர்களுக்கு தொடர்ச்சியாக முதுதத்துவமாணி / கலாநிதிப் பட்ட ஆய்வுகளை மேற்கொள்ள வாய்ப்புக்கள் வழங்கப்படும். அந்த வாய்ப்புக்களைப் பெறும் மாணவர்கள் நோர்வேஜியப் பல்கலைக்கழகங்களில் ஆய்வுக்காலங்களைப் பெறுவார்கள்.



இந்த முதுமாணிக்கற்கை நெறியானது இரண்டு வகைப்பட்டது. ஒன்று ஓராண்டுகால கற்கைகளை மட்டும் கொண்ட தூயசக்தித் தொழிநுட்ப முதுமாணி (Master of Clean Energy Technologies) மற்றையது, கற்கைகளுடன் ஆய்வும் இணைந்த இரண்டாண்டுகால தூயசக்தித் தொழிநுட்ப விஞ்ஞான முதுமாணி (Master of Science in Clean Energy Technologies). மேற்கு நோர்வே பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்துடன் இணைந்து உலகளாவிய கல்வி ஒத்துழைப்புக்கான நோர்வேஜிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகவும் இலங்கையில் உள்ள நோர்வேஜியத் தூதராலயத்தின்; ஊடாகவும் பெற்றுக்கொண்ட நிதியுதவியிலேயே இந்த கற்கைநெறிகள் உருவாக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு http://project.jfn.ac.lk/hrncet/ என்னும் இணையதளத்தைப் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# இலங்கைக்கு வெளியில் இயங்கும் கட்டமைப்பை ஏற்கப்போவதில்லை!

## ஜெனீவாவில் அரசு அறிவிப்பு

**கொழும்பு, செப். 20**
**இலங்கையின் நல்லிணக்கத்துக்காக இலங்கைக்கு வெளியில் இருந்து இயக்கும் கட்டமைப்பை ஏற்கப் போவதில்லை என இலங்கை அரசு அறிவித்துள்ளது. ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையில் இந்த அறிவிப்பை இலங்கை அரசு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.**

இலங்கையின் உண்மையான நல்லிணக்கத்துக்காக நான்கரை வருடங்களாக வெளிக்கட்டமைப்பின் மூலம் எவ்வித நன்மையையும் பெற முடியவில்லை. எனவே வெளியில் இருந்து இயக்கப்படும் ஒரு கட்டமைப்பைத் தொடர்வதற்கு பதிலாக, இலங்கையின் நலனுக்காக, மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் நல்லிணக்க நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. ஜெனீ வாவில் நேற்று நடைபெற்ற ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 45ஆவது அமர்வில் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாத உத்தரவாதங்களை மேம்படுத்துவது குறித்த சிறப்பு அறிக்கையாளருடனான கலந்துரையாடலின்போதே இலங்கை தமது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது.

தனி மற்றும் கூட்டு உரிமைகளை மேம்படுத்துவது, நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்வது மற்றும் சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட 20-30 நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுவதாக இலங்கை அரசு மேலும் தெரிவித்துள்ளது. (ம-இ)

# 18 இலங்கையர்களை அமெ. நாடு கடத்தல்!

## விரைவில் தாயகம் திரும்புகின்றனர்

கொழும்பு, செப். 20
விசா விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் அமெரிக்க பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட 18 இலங்கையர்கள் நாடு திரும்பவுள்ளனர். இவர்களுக்கு கொரோனாத் தொற்றை கண்டறியும் பி.சி.ஆர் சோதனைகள் செய்யப்பட்டு பின்னர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.
21 நாள்கள் தனிமைப்படுத்தல் முடித்தவுடன், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவர்களிடம் வாக்குமூலத்தை பதிவுசெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# இலங்கையில் பணியாற்ற மீண்டும் சீன நாட்டவர்

கொழும்பு,செப்.20
இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களில் பணியாற்றுவதற்காக சீன நாட்டவர் 53 பேர் நேற்றுமுன்தினம் வருகை தந்தனர்.
சீனா ஈஸ்டர்ன் விமான சேவையின் விசேட விமானம் நேற்று இரவு சீனாவின் ஷாங்காய் விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.
அதில் 53 சீனர்கள் வருகை தந்துள்ளனர்.
அத்துடன் இதே விமானத்தில், இலங்கையில் பணிபுரியும் 206 சீனர்கள் நேற்று இரவு சீனாவின் ஷங்காய்க்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (க-இ)



# தேங்காய் விலையை கட்டுப்படுத்த திட்டம்

## அமைச்சரவையில் பரிசீலனை

கொழும்பு, செப். 20
சடுதியாக விலை உயர்ந்து வரும் தேங்காய்க்கான விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் அமைச்சரவையில் கலந்தாலோசிக்கப்பட்டது என்று இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்ணான்டோ தெரிவித்தார்.
தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் இது தொடர்பான பரிசீலனைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-இ)

# சர்வதேசத்தை பகைக்காதீர்கள்!

## அரசுக்கு பொன்சேகா எச்சரிக்கை

கொழும்பு, செப். 20
சர்வதேச நாடுகளை பகைத்துக்கொண்டு அரசால் தனித்துச் செயற்பட முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
'அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை எதிர்தரப்பினரால் நாடாளுமன்றில் தோற்கடிக்க முடியாது. நாட்டு மக்கள் துரதிஷ்டவசமாக அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை வழங்கியுள்ளார்கள். ஆகவே 20ஆவது திருத்தத்துக்கு எதிராக மக்களின் எதிர்ப்பைப் பலப்படுத்தவே முயற்சிக்கிறோம். சர்வதேச நாடுகளை பகைத்துக்கொண்டு தனித்து அரசால் செயற்பட முடியாது. அரசமைப்பின் 20ஆவதுதிருத்தத்தினால் ஜனநாயக நாடுகள் இலங்கையைப் புறக்கணிக்கும் நிலை ஏற்படலாம்.
அரசமைப்பின் 20ஆவது திருத்தம் சர்வாதிகாரமான ஆட்சிக்குச் செல்லும் மார்க்கத்தை காண்பித்துள்ளது. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வரைவு தொடர்பில் பல்வேறு தரப்பினர் விமர்சனங்களை முன்வைத்தார்கள். பிரதமர் மஹிந்த ராஜபக்ச வெளியான திருத்தத்தை மீளாய்வு செய்ய 9 பேர் அடங்கிய குழுவை நியமித்தார். 20ஆவது திருத்தத்தின் குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டு குழுவினர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.
பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஜனாதிபதி பொருட்படுத்தவில்லை. வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 20ஆவது திருத்தம் எவ்வித மாற்றங்களுமின்றி நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியாக குறிப்பிட்டுள்ளார்.
தவறைத் தைரியமாகச் சுட்டிக்காட்ட முடியாத நெருக்கடியான நிலைக்குள் ஆளும் தரப்பினர் தள்ளப்பட்டுள்ளார்கள்.
அரசமைப்பின் 20ஆவது திருத்தை எதிர்த்தரப்பினரால் நாடாளுமன்றில் தோற்கடிக்க முடியாது. துரதிஷ்டவசமாக அரசின் வசம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் காணப்படுகிறது. மக்களும் போலியான வாக்குறுதிகளுக்கு ஏமாற்றமடைந்து அரசை ஆதரித்தார்கள். இதன் விளைவுகளை தற்போது உணர்ந்து கொண்டுள்ளார்கள்.
ஜனநாயகத்தை பாதுகாக்கும் பல ஏற்பாடுகள் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளபோதும் அரசு பொறுப்பற்றவிதமாக கருத்துரைக்கிறது. சர்வதேசத்தை பகைத்துக்கொண்டு நாடு என்ற ரீதியில் தனித்துச் செயற்பட முடியாது. அரச வருமானம், செலவினங்களை ஜனாதிபதியால் எவ்வாறு நிர்வகிக்க முடியும். முறையற்ற செயற்பாடுகளுக்காகவே கணக்காளர் நாயகம், ஆணைக்குழு என்பன இரத்து செய்யப்பட்டுள்ளன. 20ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் ஜனநாயக நாடுகள் இலங்கையை புறக்கணிக்கும் நிலை ஏற்படும், ஆகவே நாட்டு மக்கள் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் முதலில் தெளிவு பெற்று அரசியல்கட்சி ஆதரவை புறம்தள்ளி நாட்டுக்காக ஒன்றுபட வேண்டும்' என்றார். (ம-இ)

# தென்னை மரத்தில் ஊடக சந்திப்பு

## அமைச்சர் பெர்னாண்டோ புதுக்கூத்து

கொழும்பு, செப்.20
தெங்கு, கித்துல், பனை மற்றும் இறப்பர் செய்கை ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தேங்காய் பறிக்கும் உபகரணத்தைப் பயன்படுத்தி தங்கொட்டுவையிலுள்ள தனது வீட்டுத் தோட்டத்திலுள்ள தேங்காய்களை நேற்றுமுன்தினம் பறித்துள்ளார். அதன்போது தென்னை மரத்தில் இருந்தபடி ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்துள்ளதாவது:
இலங்கையில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் உள்ளூர் நுகர்வோருக்கு தேங்காயின் தேவை அதிகமாகக் காணப்படுவதே நாட்டில் தேங்காய்க்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படக் காரணம்.



வருடத்தில் 2.8 மில்லியன் தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் 700 மில்லியன் தேங்காய்களை தொழிற்சாலைகள் கொள்வனவு செய்கின்றன. 1.8 மில்லியன் தேங்காய்களையே நுகர்வோர் கொள்வனவு செய்கின்றனர். எனவேதான் தென்னை மரக் கன்றுகளை அதிகளவில் நடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்-என்றார் . (வ-இ)

# பொறியா திறவுகோலா?

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகும் வாய்ப்பை புதிய அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக வழங்குவதன் மூலம் விரைவில் சீனர்களும் இலங்கையின் இரட்டை குடியுரிமையைப் பெற்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பர் என்று தெரிவித்துள்ளார் பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டதும் ஆகப்பெரும் மகிழ்ச்சியை வெளியிட்டவர்தான் இந்தக் கலகொட அத்தே ஞானசாரதேரர். 'இலங்கைக்கு சிறந்த தலைமைத்துவம் கிடைத்துள்ளது. இனி பொதுபலசேனா அமைப்புத் தேவையில்லை' என்று தெரிவிக்கும் அளவுக்கு அப்போது அவரின் மகிழ்ச்சிப் பிரவாகம் அமைந்திருந்தது. ஆனால் இன்று நிலமை அப்படியே தலைகீழாக மாறியுள்ளது. அரசின் கடும் ஆதரவாளர்களுக்குக்கூட 20ஆவது திருத்தம் சரியாகப்படவில்லை என்பதற்கு ஞானசாரதேரர் மிகச்சிறந்ததொரு எடுத்துக்காட்டு.

13ஆவது திருத்தத்துக்கு முழுவதுமாகச் சாவுமணி அடிக்கும் வகையில்தான் இந்த 20ஆவது திருத்தம் கொண்டு வரப்படுகின்றது என்பது வெள்ளிடைமலை. எனினும் தாம்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருகின்றோம் என்று தற்துணிவுடன் ஏற்பவர்கள் எவரும் இல்லை. நீண்ட நாள்களின் பின்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ முன்வந்து 20க்கான அனைத்துப் பொறுப்புக்களையும் அண்மையில் ஏற்றார். என்றபோதிலும் சீனாவே பின்னணியில் இருந்து 20ஆவது திருத்தத்தை நடத்தி முடிக்கின்றது என்பதே பலரினதும் நிலைப்பாடு. 'விரைவில் சீனர்களும் இலங்கையின் இரட்டை குடியுரிமையைப் பெற்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பர்' என்று ஞானசாரதேரர் தெரிவித்த கூற்றும் கூட இதையே கட்டியம் சொல்கின்றது.

இருபதாவது திருத்தத்தின் மூலம் தனிநபரின் ஆதிக்கம் மேலோங்கும், ஜனநாயகப் பண்பும் விழுமியங்களும் இறப்பைச் சந்திக்கும் என்பனவெல்லாம் ஒருமுனையில் இருக்கட்டும். ஆனால், பலரும் குற்றஞ்சாட்டுவதைப் போன்று சீனாதான் இந்தத் திருத்தத்தை வழிநடத்தி அரங்கேற்றுகின்றது என்றால் அதைவிட ஆபத்தானது இலங்கைக்கு ஒன்றுமில்லை.

சீனாவை இறுக்கப் பிடிப்பதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையில் தனக்கு எதிரான தீர்மானங்களில் இருந்து இலங்கை தப்பித்துக்கொள்ள முடியும். ஏனெனில் எந்தத் தீர்மானத்தையும் தவிடுபொடியாக்கும் 'வீட்டோ' அதிகாரம் கொண்ட நாடுகளில் சீனாவும் ஒன்று. சீனாவிடம் உள்ள அந்த அதிகாரத்தை வைத்து இலங்கை ஐ.நாவின் பிடியில் இருந்து லாபகமாகத் தப்பித்துக்கொள்ளும். எனினும் இந்தியா மற்றும் அமெரிக்காவின் மறைமுக அழுத்தங்களில் இருந்து தப்புவதென்பது பெரும்பாடாகத்தான் முடியும்.


வடகொரியாவுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா கொண்டுவந்த பல முக்கிய தீர்மானங் களை சீனாவும் ரஷ்யாவும் தத்தமது வீட்டோவால் எதிர்த்தன. எனினும் அமெரிக்காவின் தனிப்பட்ட தடைகளில் இருந்து வடகொரியா இன்னமும் மீளமுடியாத நிலையில்தான் உள்ளது. இதேபோன்ற நிலை இலங்கைக்கும் வரலாம். சீனாவுக்கு ஆதரவான மனோநிலையால் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் தனிப்பட்ட தடைகளையும் அழுத்தங்களையும் இலங்கை பெரியளவில் சந்திக்கத்தான் போகின்றது. சுற்றுலாவிகள் விடயம் உள்ளிட்ட பல விடயங்களில் இலங்கைக்குத் தலைவலி இனிவரும் காலங்களில் வரலாம். ஆக, 20ஆவது திருத்தம் கோத்தாபய தலைமையிலான அரசுக்குப் பெரும் பொறியே தவிர திறவுகோல் அல்ல.

# சிலாபத்தில் ஒருவருக்கு கொரோனா உறுதியானது

## சமூகத் தொற்றாகுமா என அச்சம்

கொழும்பு, செப். 20

**சிலாபம் பொதுமருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவர் இரணவில கொரோனா சிகிச்சை மையத்திற்கு அனுப்பப்பட்டார்.**



பாதிக்கப்பட்டவர் ஆனமடுவ பகுதியில் வசிக்கும் 23 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது. அவர் கடந்த மாதம் 16ஆம் திகதி டுபாயிலிருந்து இலங்கைக்கு வந்தார். இவருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மூன்று தடவைகள் செய்யப்பட்டன. அவற்றில் குறித்த நபர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படவில்லை என்று வெளிப்பட்டது. அத்துடன் எதிர்வரும் 24ஆம் திகதி வரை சுய தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. எனினும் திடீர் சுகவீனம் காரணமாக அவர் கடந்த 17ஆம் திகதி சிலாபம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த நபர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரியவந்தது. இதையடுத்து அவர் இரணவில கொரோனா சிகிச்சை மையத்திற்கு அனுப்பப்பட்டார்.

இதையடுத்து குறித்த நபரின் தாயார் பி.சி.ஆர் பரிசோதனைக்காக சிலாபம் பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சுய தனிமைப்படுத்தல் காலத்தில் குறித்த நபரினதும் அவரின் தாயாரினதும் சமூகத் தொடர்புகள் பற்றி தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(ம-இ)

# சிறை ஆணையாளரை கொலை செய்யத்திட்டம்

## சார்ஜன் கைது

இரத்தினபுரி, செப்.20

இரத்தினபுரி குருவிட்ட சிறைச்சாலை ஆணையாளரை பாதாளக் குழுவினரின் உதவியுடன் கொலை செய்ய முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அந்தச் சிறைச்சாலையின் சார்ஜன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தச் சார்ஜன் சிறைச்சாலைக்குள் செய்துள்ள விஷமத்தனமான செயற்பாடுகளை முறியடிக்கும் நோக்கில் அவரை வெளிக் களப் பணிகளில் அமர்த்துவதற்கு சிறைச்சாலை ஆணையாளர் தீர்மானித்திருந்தார் எனவும், அதன் காரணமாக ஆணையாளரைக் கொலைச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

அதன்படி பாதாளக் குழு உறுப்பினரும் போதைப் பொருள் வியாபாரியுமான 'ராமநாயக்க சுத்தா' என்பவரின் உதவியுடனேயே இந்தக் கொலை முயற்சியை மேற்கொள்ளத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை 'ராமநாயக்க சுத்தா' என்பவர் தனது அடியாள்கள் இருவரிடத்தில் அலைபேசி மூலம் கூறிய பதிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ப)

# மீண்டனர் 10 பேர்

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 10 பேர் பூரணமாகக் குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பூரணமாகக் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 70 ஆக அதிகரித்துள்ளது. மேலும் தொற்று உறுதியானவர்களில் 198 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 28 பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது. இலங்கையில் இதுவரை 3 ஆயிரத்து 281 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ப-இ)

# முட்டையின் விலை நாட்டில் சரிவு

யாழ்ப்பாணம், செப். 20



இலங்கையில் முட்டை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய தற்பொழுது 16 ரூபா முதல் 20 ரூபாய் வரையில் முட்டை விற்பனை செய்யப்படுகின்றது.

15 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை கடந்த தினங்களில் 20-25 வரை அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. எனினும் தற்போது அதன் விலை வழமைக்குத் திரும்பி யுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-இ)

# 20ஆவது திருத்தம் அவசியம் அற்றது!

## குணவங்ச தேரர் சுட்டிக்காட்டல்

நாட்டின் தற்போதைய தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை வைத்து 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவது பொருத்தமற்றது என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் தலைவராக வரப்போவது யார் என்பது தெரியாமல் தற்போதுள்ள தலைவருக்கு பொருத்தமாக அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருவது உகந்தது அல்ல. நாட்டுக்கு பொருத்தமான புதிய அரசமைப்புச் சட்டமே உருவாக்கப்பட வேண்டும். 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு இணங்க முடியாது. அது அவசியமற்றது. அரசின் தற்போதைய செயற்பாடுகள் குறித்து மிகவும் வருத்தப்படுகின்றேன் - என்றார்.

(ம-இ)

# குண்டுத் தாக்குதலை ஏற்று பதவி விலகினால் சலுகை

*மைத்திரி கூறினார் என்று சாட்சியம்*

கொழும்பு, செப்.20
பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு பதவியில் இருந்து விலகினால் சலுகைகளை வழங்குவதாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிரி பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் மூன்றாவது நாளாகவும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கினார். இதன் போதே, ஓய்வூதியம் மற்றும் பூஜித ஜயசுந்தர பணியாற்ற விரும்பும் எந்த நாட்டிலும் தூதுவராகப் பணியாற்ற ஒரு பதவி என்ற சலுகை வழங்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவின் இந்த அறிவிப்பின் பின்னர், முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜயசுந்தர இது தொடர்பாகத் தனது ஆலோசனையைப் பெற வந்தார் எனவும் சுட்டிக்காட்டினார். இருப்பினும் தன்னால் முன்னாள் பொலிஸ்மா அதிபரின் விடயத்தில் கலந்து கொள்ள முடியவில்லை என்றும் இது ஒரு தீவிரமான பிரச்சினை என்பதனால் அவரது குடும்ப உறுப்பினர்களுடன் விவாதிக்குமாறு தான் கேட்டுக்கொண்டேன் எனவும் ஹேமசிரி பெர்னாண்டோ குறிப்பிட்டார். அத்தோடு பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான காரணங்கள் மற்றும் பின்னணியை ஆராய்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல்கொட தலைமையிலான ஆணைக்குழுவில் இருந்து விடுவிக்க முடியும் என்றும் முன்னாள் ஜனாதிபதி ஜயசுந்தரவுக்கு தெரிவித்திருந்தேன் எனவும் ஹேமசிரி பெர்னாண்டோ கூறினார். (ப-இ)

# ஒரு தொகுதி மஞ்சள் கட்டிகள் மன்னார் கடற்பகுதியில் மீட்பு

மன்னார், செப்.20
படகு ஒன்றின் வலைகளுக்குள் மறைத்துக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகுதி மஞ்சள் கட்டிகளை, மன்னார் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர். மன்னார் பிரதான பாலத்துக்கு அருகாமையிலுள்ள கடற்பகுதியில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை இரவு இந்த மஞ்சள் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மன்னார் எழுத்தூர் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரும் (வயது50) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டிகள் சுமார் 305 கிலோ 400 கிராம் எடை கொண்டவை என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;
புலனாய்வுத் தகவலுக்கமைவாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல்ல வீரசிங்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கிருசாந்தனின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் விரைந்து செயற்பட்ட மன்னார் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினர் இந்த மஞ்சள் கட்டிகளை மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, கைதுசெய்யப்பட்ட நபரை தனிமைப் படுத்தவும் உள்ளனர். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ற-56)

# குழந்தைகள் நலனில் இலங்கை முன்னிலை

கொழும்பு, செப்.20

**இலங்கையில் பிறந்த ஒரு குழந்தையின் முழுமையான கல்வி மற்றும் முழு ஆரோக்கியம், தெற்காசிய மற்றும் குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுடன் ஒப்பிடும்போது 60 வீத வளர்ச்சியைக் கொண்டது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.**

உலக வங்கியால் நேற்று வெளியிடப்பட்டுள்ள 2020 மனித மூலதன அட்டவணையில் இந்தத் தகவல் கூறப்பட்டுள்ளது.

மனித மூலதனத்தில் முதலீடுகள் மக்கள் தங்கள் வாழ்க்கையில் சேர்த்துக் கொள்ளும் அறிவு, திறன்கள் மற்றும் ஆரோக்கியம் என்பன முக்கியமானவை.

அதிலும் குழந்தைகளின் திறன் என்பது ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு முக்கியமான பங்கை ஆற்றுகிறது என்று உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பில் உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பாரிஸ் எச்.ஹதாத்செர்வோஸ் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் தொற்றின் பின்னர் இலங்கை மக்கள், குழந்தை திறன் விருத்தி செயற்பாடுகளில் முதலீடு செய்வது முன்னெப்போதையும் விட மிக முக்கியமானது.

நீண்டகால ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் உயர்தரமான கற்றல் தேவை ஆகியவற்றின் காரணமாக தடுமாற்றம் என்பது மனித மூலதன குறியீட்டின் இரண்டு பகுதிகள் ஆகும்.

இதில் இலங்கைக்கு முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கான வாய்ப்பு உள்ளது எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# இடியன் துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

கிளிநொச்சி, செப்.20
உள்நாட்டுத் தயாரிப்பான இடியன் துப்பாக்கியை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் தருமபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பகுதியில், இடியன் துப்பாக்கி ஒன்றை வைத்திருக்கிறார் எனப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற



இரகசியத் தகவலை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் இடியன் துப்பாக்கியை மீட்டுள்ளதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவரை மேலதிக விசாரணையின் பின்னர், நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-6)



# வெடிபொருள்கள் சம்பந்தமான விழிப்புணர்வு முன்னெடுப்பு

கிளிநொச்சி, செப்.20
கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் வெடிபொருள்கள், மிதிவெடிகள் சம்பந்தமான விழிப்புணர்வு ஒன்று நடத்தப்பட்டது.

தேசிய மிதிவெடி செயல்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி வேம்பொடுகேணி இலங்கை திருச்சபை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இந்த விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முகமாலை இராணுவத்தினர் உட்பட கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், பொதுமக்கள், பாடசாலை மணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

மண் அகழ்வில் ஈடுபடுவோர் அவதானமற்ற முறையில் அபாய குறியீடுகள் பொறிக்கப்பட்ட இடங்களிலும் மண் அகழ்வை மேற்கொண்டு வருகின்றமையால் அது தொடர்பான நாடக நிகழ்வொன்றையும் நடத்தியுள்ளனர்.

மேலும் பொதுமக்கள் அபாயகரமான வெடிபொருள்களைக் கண்டால் உடனடியாக தமக்குத் தெரியப்படுத்துமாறும் இதன் போது வலியுறுத்தியுள்ளனர். (ற-6)



# அன்னை தெரேசா சிறுவர் முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள்

கொடிகாமம், செப்.20
கச்சாயிலுள்ள அன்னை தெரேசா சிறுவர் முன்பள்ளியில், கல்வி பயில்கின்ற சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

வசிகரன் சுகந்தி தம்பதிகளின் மகளின் பிறந்த நாளை முன்னிட்டே இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் விளையாட்டுத்துறை பொறுப்பாளர் வீரா, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.கஜன் ஆகியோர் கலந்துகொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கினர். (ற-159)

# மது விற்பனை ஒருவர் கைது

கிளிநொச்சி, செப்.20
அரச மது சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்த சந்தேகநபர் ஒருவர், தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே, இந்த நபர் நேற்று மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று மது ஒழிப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (ற-31)

# 20 ஆல் சிறுபான்மையின மக்களுக்கு பாதிப்பில்லை

## மு.க.வின் புலுடா இது என்கிறது உலமா கட்சி

**அம்பாறை, செப்.20**

**20 ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்று முஸ்லிம் காங்கிரஸ், அரசின் பக்கம் செல்ல முயற்சிப்பதால், சிறுபான்மையினருக்கு இச்சட்டம் பாதிப்பில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது என உலமா கட்சிததலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டம் கல்முனைப் பகுதியில் அகில இலங்கை முஸ்லிம் கட்சியின் தவிசாளர் றுஸ்தி நஸார் தலைமையில், 20 ஆவது அரசியல் திருத்தச் சட்டமும் சிறுபான்மை மக்களின் நிலைப்பாடும் என்ற தொனிப்பொருளில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

20 ஆவது திருத்தச்சட்டத்தை ஏற்று முஸ்ஸிம் காங்கிரஸ் அரசின் பக்கம் செல்ல முயற்சிக்கிறது. எனவே சிறுபான்மையினருக்கு இச்சட்டம் பாதிப்பில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. கடந்த காலங்களில் தேர்தல் பிரசாரங்களில் மக்களை உசுப்பேற்றி 20 ஆவது திருத்தச்சட்டம் சிறுபான்மையின ருக்குப் பாதிப்பானது எனக் கூறி வந்திருந்தனர். தங்களது சுயநலனுக்காகத் தற்போது நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் இச் சட்டத்திற்கு ஆதரவு வழங்கி அரசின் பக்கம் இத்தரப்பினர் இணையவுள்ளோம் எனக் கூறிவருகின்றனர். இதனால் இத்தரப்பினர் ஏற்கனவே இச்சட்டத்தைப் பற்றி சிறுபான்மையின ருக்கு பாதிப்பு எனக் கூறிய விடயம் உண்மை இல்லை என உறுதியாகின்றது. இச்சட்டம் குறித்து மக்கள் விழிப்படைய வேண்டும் முஸ்லிம் கட்சிகள் அரசுடன் திருட்டுத்தனமாக இணைந்து எத்தனை பெட்டி(பணம்) தருவீங்கள், பதவி தருவீர்கள் என்று இருக்காமல் 20 ஆவது சட்டத் திருத்தத்தை மக்கள் மத்தியில் எடுத்துச்சென்று பின்னர் அதனை உரிய தரப்பினரிடம் கூற வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் என்றார். (ப)

## ஹெரோய்னுடன் பெண் கைது

திருகோணமலை, செப். 20

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேணியடி பிரதேசத்தில் பெண் ஒருவரிடம் இருந்து 600 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டதுடன் அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

45 வயதுடைய அந்தப் பெண்ணிடம் இருந்து 55,000 ரூபா ரொக்கப் பணமும் கைப்பற்றப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட பெண் போதைப் பொருள் விற்பனையாளராக அடையாளம் காணப்பட்டதை அடுத்து, அவரின் கேணியடிப் பிரதேச வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதன் போதே 10 பக்கெட்டுக்களைக் கொண்ட 600 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது. இதனை அடுத்தே அந்தப் பெண் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

## அதிரடிப் படையினரால் 9 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், செப். 20

மானிப்பாயைச் சேர்ந்த தனுரொக் உள்ளிட்ட 9 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் மானிப்பாய் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

தனுரொக் உள்ளிட்ட 9 பேர் ஒன்று கூடியுள்ளதால் வன்முறைச் சம்பவம் இடம்பெறலாமென கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர். எனினும் சந்தேக நபர்கள் 9 பேருக்கும் எந்தவொரு வழக்கும் நீதிமன்றங்களில் நிலுவையில் இல்லை என்றும் முறைப்பாடு கள் எவையும் மானிப்பாய் பொலிஸில் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-26)

## மரக்கறி விற்பனை வீழ்ச்சி

கொழும்பு, செப்.20

அதிக மழையுடனான வானிலையால் மரக்கறி விற்பனையில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என புறக்கோட்டை மெனிங் சந்தையின் பொது வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதிக மழையால் நுகர்வோர், மரக்கறி கொள்வனவில் ஈடுபடும் வீதம் குறைவடைந்துள்ளது என்று புறக்கோட்டை மெனிங் சந்தையின் வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய நிலவரப்படி ஒரு கிலோ கரட் 100 தொடக்கம் 130 ரூபா விற்கும் லீக்ஸ் ஒரு கிலோ 50 ரூபாவுக்கும், முள்ளங்கி ஒரு கிலோ 50 தொடக்கம் 60 ரூபாவுக்கும், கோவா ஒரு கிலோ 70 தொடக்கம் 80 ரூபாவுக்கும், விற்பனை செய்யப்பட்டன என்று அவர் தெரிவித்தார். (ப)

## சபைகளின் தவிசாளர், செயலர்மீது தாக்குதல்

### சாவ. பிரதேச சபை தவிசாளர் கண்டனம்

கொடிகாமம், செப். 20

பிரதேச சபைகளின் தவிசாளர், செயலாளர் ஆகியோர் மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களை வன்மையாகக் கண்டிக்கிறேன் என சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

சாவகச்சேரிப் பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை அமர்வின் போதே அவர் இந்தக் கண்டனத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் அவரது அலுவலகத்தில் இருந்த நேரம் நபரொருவரால் அலுவலகத்திற்குள் வைத்து தாக்கப்பட்டுள்ளார் இதேவேளை கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளரும் காணிப் பிரச்சினை தொடர்பாக பார்க்கச் சென்றபோது தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளார். இவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். பிரச்சினைகள் எல்லோருக்கும் வரும். பிரச்சினைகளை அணுகும் வழிமுறைகள் உள்ளன. சட்டங்களைப் பின்பற்ற வேண்டுமே தவிர சட்டத்தை யாரும் கையில் எடுக்க முடியாது. தனிமனிதனிடம் தண்டனை வழங்கும் தீர்மானம் யாருக்கும் வழங்கப்படவில்லை. தாம் நினைத்தவாறு நடக்க முடியும் என்ற எண்ணம் எல்லா மக்களுக்கும் இருக்கக்கூடாது, இப்படியான செயற்பாடுகளுக்கு சபை சார்பாகவும் தனிப்பட்ட முறையிலும் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன்" - என்றார். (ப-159)

## சாரதியின் நெகிழ்ச்சி பலராலும் பாராட்டு

சாவகச்சேரி, செப். 20

யாரும் இல்லாதபோது சேதமாக்கப்பட்ட மதிலை, தான் தான் சேதப்படுத்தினேன் எனவும், அதைச் சீரமைத்துத் தருகிறேன் என மதிலின் உரிமையாளரிடம் தேடிச் சென்று தெரிவித்த சாரதியின் செயலை பலரும் பாராட்டினர்.

புத்தூரிலிருந்து கடந்த திங்கட்கிழமை புறப்பட்டு வந்த டிப்பர் வாகனம் நள்ளிரவு மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவிலுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டது. கோவிலுக்கு கற்பூரம் எரிப்பதற்காக சாரதி டிப்பரை வீதியோரத்தில் நிறுத்தினார். அதிலிருந்து இறங்கி மறுபக்கத்திற்குச் சென்ற அவர் கற்பூரம் எரித்து வழிபட்டுக் கொண்டிருந்தார். இதன்போது டிப்பர் உருண்டு சென்று அருகிலுள்ள பள்ளத்தில் இறங்கி மதிலுடன் மோதியது என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் மதில் 20 அடி சேதமடைந்தது. எனினும் சாரதி டிப்பரை எடுத்துக்கொண்டு புறப்பட்டுள்ளார். காலையில் வந்து பார்த்த வர்த்தகர் மதில் உடைந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். யாரால் அது சேதப்படுத்தப்பட்டது என்று தெரியாது அந்த விடையத்தை கைவிட்டுள்ளார். மதிலுடன் மோதிய. டிப்பர் வாகனம், மூன்றாவது நாள் திரும்பி வந்தது.

வர்த்தக நிலையத்திற்கு முன்னால் டிப்பரை நிறுத்திய அதன் சாரதி வர்த்தகரிடம் சென்று மதில் உடைந்தமைக்கான காரணத்தைத் தெரிவித்து சேதமடைந்த பகுதியைச் சீரமைத்துத் வழங்குகிறேன் என உறுதியளித்துள்ளார். சாரதியின் இந்தச் செயலை பலரும் பாராட்டினர். (ப-9)

## கைத்தொழில் உற்பத்திகளை சந்தைப்படுத்த ஏற்பாடு

### அமைச்சர் பிரசன்ன ரணவீர உறுதி

திருகோணமலை, செப்.20

கிராம மட்டங்களிலான கைத்தொழில் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாக பிரம்புகள், பித்தளை, மட் பாண்டங்கள், மரப்பொருள்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

திருகோணமலைக்கு நேற்றுச் சென்ற அவர், தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பத்தினிபுரம் கிராமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டார். அத்துடன், பனையோலை சார்ந்த கிராமமாக பிரகடனப்படுத்தப்பட்ட பத்தினிபுரம் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பனைசார் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட கட்டடத்தைப் பார்வையிட்டதுடன் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்களையும் வழங்கினார்.

நிகழ்வின் இறுதியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர்; கைத்தொழில் சார் மூலப்பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான போக்குவரத்துப் பிரச்சினைகளை விரைவில் நிவர்த்திசெய்து தருவதாக உறுதியளித்தார். மேலும், கிராம மட்டங்களில் முன்னெடுக்கப்படும் கைத்தொழிற்துறை உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைத் தமது அமைச்சு மேற்கொள்வதாகவும், இதன் மூலமாக கிராம மட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யமுடியும் - என்றும் தெரிவித்தார். (ப)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

நல்லூர்,செப்.20



டெங்கு ஒழிப்பு வாரத்தில் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

டெங்கு ஒழிப்பு தொடர்பில் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது சிரமதான நடவடிக்கைகள், வீடுவீடாகச் சென்று டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், உக்காத திண்மக் கழிவகற்றல், துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல், டெங்கு தொடர்பான பதாகைகள் பொது இடங்களில் மக்கள் பார்வைக்கு வைத்தல்,ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதனையடுத்து வீடுவீடாகச் சென்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை பிரதேச செயலக அலுவலர்கள் மேற்கொண்டுள்ளனர். (ஜ-17)

# முதியோருக்கு ஆன்மிகச் சுற்றுலா

கைதடி,செப்.20

கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியோர்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இதற்கான அனுமதியை மாகாண சமூக சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு வழங்கியுள்ளது.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்குப் பின்னர், முதியோர்கள் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக ஆலய வழிபாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றமை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது சுகாதார விதிகள் மற்றும் சமூக இடைவெளி போன்றவற்றை பயன்படுத்தி முதியோர்கள் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

வெளிமாவட்டங்களைத் தவிர்த்து யாழ். மாவட்டத்தில் உள்ள ஆலயங்களுக்கு முதியோர்கள் அழைத்துச் செல்லப்படுவர். முதியோர் இல்லத்தில் சுற்றுலாவுக்காகச் செல்லும் 40 இருக்கைகள் கொண்ட பஸ்ஸில், சமூக இடைவெளியைப் பயன்படுத்தி 20 பேர் வரையிலான முதியோர்கள் ஆன்மிகச் சுற்றுலாவுக்காக ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (க-17)

# கழிவகற்றலுக்கு 20 பேர் தெரிவு

சாவகச்சேரி, செப்.20

சாவகச்சேரி நகரசபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள உக்காத கழிவுகளை வீடு வீடாகச் சென்று சேகரிப்பதற்கென பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த இருபது பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு வேள்ட் விஷன் லங்கா நிறுவனமும், செனசத நிறுவனமும் இணைந்து மூன்று மாத கால பயிற்சியை வழங்கின.

உக்காத கழிவுகளை நேரில் வந்து வள நிலையத்தில் கையளிக்க முடியாதவர்கள் பயிற்றப்பட்ட 20 பேரிடமும் வழங்கினால் அந்தக் குடும்பங்களுக்கு உதவியாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது அலைபேசி இலக்கங்களை நகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர் பி. தளிர்ராஜிடம் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

# மின்சாரமின்றிப் பரிதவிக்கும் வவு.காஞ்சூரமோட்டை மக்கள்

## வன வளத் திணைக்களமே முட்டுக்கட்டை எனச் சுட்டிக்காட்டு

வவுனியா,செப்.20

**வவுனியா வடக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட காஞ்சூர மோட்டைப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு வன வளத் திணைக்களம் தடையாக இருப்பதாக கிராம மக்களால் ஒருங்கிணைப்புக் குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது.**

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது காஞ்சூரமோட்டைக்கு மின்சாரம் வழங்குவதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தானால் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கிராம மக்கள்;

"நாம் போரினால் இடம்பெயர்ந்த நிலையில் எமது காணிகளை சுவீகரித்துக்கொண்ட வனவளத் திணைக்களம் எந்தவொரு செயற்பாட்டைச் செய்வதற்கும் தடையை ஏற்படுத்தி நிற்கின்றது. பாழடைந்த வீடுகளும், கிணறுகளும், எமது காணியில் இருக்கின்றமையை அடையாளப்படுத்தியும் எமக்கான எந்த ஓர் அனுமதியையும் வனவளத் திணைக்களம் இதுவரை வழங்கவில்லை. வீடு கட்ட முடியவில்லை, விவசாயம் செய்யமுடியவில்லை. இதனால் வாழ்வதற்கான எமது உரிமைகள் நீண்டகாலமாக மறுக்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக கிராமத்திற்கான மின்சாரத்தை வழங்குவதற்கு சில மரங்கள் தடையாக இருந்தன. அவற்றை அகற்றுவதற்குக் கூட வன வளத்திணைக்களம் முட்டுக்கட்டை போட்டுவருகின்றது. இது தொடர்பாக ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டாலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை" என்றனர்.

"குறித்த கிராமத்திற்குச் செல்லும் வீதி பிரதேச சபைக்கு உட்பட்டது என்று சபை தெரிவிக்கின்றது. அப்படியானால் காடாக இருந்த பகுதிக்கு எதற்காக வீதி அமைக்கப்பட்டது. எனவே அங்கு முன்னர் மக்கள் வசித்துள்ளமையாலேயே வீதி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு முரண்பாடான நிலைமை காணப்படுகின்றது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார். இந்த விடயங்கள் தொடர்பாக எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவில் ஆராய்ந்து தீர்மானம் எடுப்பதாக ஒருங்கிணைப்புத் தலைவரால் தெரிவிக்கப்பட்டது. (ஜ-110)

# விவசாய உற்பத்தி பொருள்களை சந்தைப்படுத்த மத்திய நிலையம்

வவுனியா வடக்கில் விவசாய உற்பத்தி பொருள்களைச் சேகரிப்பதற்கு மத்திய நிலையம் ஒன்றை அமைப்பது என பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவர் கு.திலீபன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது வவுனியா வடக்கில் உள்ள மரக்கறிகள் மற்றும் பழங்களை சந்தைப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளதுடன், வவுனியா நகருக்கு எடுத்துச்சென்றே அவற்றை சந்தைப்படுத்தவேண்டிய நிலை காணப்படுகின்றது. அதற்கு கூட சரியான வாகன வசதிகள் இல்லை இதனால் பல இன்னல்களுக்கு தாம் முகம் கொடுத்து வருவதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் அடிப்படையில் வவுனியா வடக்கில் மரக்கறி மற்றும் பழங்களை சேகரிப்பதற்காக அல்லது அதனை சந்தைப்படுத்துவதற்காக மத்திய நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவும், அதற்கான இடத்தைத் தெரிவுசெய்வது தொடர்பாகவும் ஒருங்கிணைப்புக் குழுவால் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஜ-110)



சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் இணைப்புச் செயலாளர் உமாசந்திரா பிரகாஷால் தையல் இயந்திரம் ஒன்று அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (ஜ-20)

# ரயில் கடவை காப்பாளர்களுக்கு ஒரு வாரத்தில் நிரந்தர நியமனம்

## போக்குவரத்து அமைச்சர் வாக்குறுதி

வவுனியா,செப்.20

ரயில்வே திணைக்களம் மற்றும் ஜனாதிபதியுடன் பேசி ரயில் கடவைக் காப்பாளர்களுக்கான நிரந்தரத் தீர்வை ஒரு வாரத்தில் பெற்றுத் தருவதாக போக்குவத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.



ரயில் கடவைக் காப்பாளர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு அகில இலங்கை ரீதியில் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகேக்கும், வடக்கு கிழக்கு ரயில் கடவைக் காப்பாளர் சங்கத்தின் தலைவர் தலைமையிலான குழுவினருக்குமிடையில் அண்மையில் கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. சந்திப்பின் போது ரயில் கடவை ஊழியர்களின் பிரச்சினை தொடர்பான மனு ஒன்றும் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு வாக்குறுதி வழங்கினார் என்று வடக்கு கிழக்கு ரயில்க் கடவைக் காப்பாளர் சங்கத்தின் தலைவர் றொகான் ராஜ்குமார் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி விசேட அத்தியட்சகர் பந்து நிமல் வாதிஸ்டவை கடந்த 2 ஆம் திகதி அன்று சந்தித்த ரயில் கடவைக் காப்பாளர்கள் நிரந்தர நியமனம் தொடர்பான கோரிக்கையை முன்வைத்திருந்தனர். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தால், போக்குவரத்து அமைச்சர் மற்றும் ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளருக்கு ரயில் கடவைக் காப்பாளரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. (ஜ-110)

# அரிசி விலை உயராது; பதுக்கிப் பயன் இல்லை

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், செப். 20**
**சந்தையில் அரிசி விலை எந்தக் காரணத்துக்காகவும் அதிகரிக்கப்படமாட்டாது என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்றுமுன்தினம் உறுதியளித்துள்ளார்.**

அரிசி தொடர்பாக வர்த்தக சந்தையில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து உற்பத்தியாளர்கள், மொத்த வியாபாரிகள் மற்றும் விவசாய அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்புகளை அழைத்து அமைச்சர் நேற்று பேச்சு நடத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், நுகர்வோருக்கு நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை மாற்ற வேண்டாம் என்று தெரிவித்தார்.

நெல்லைப் பதுக்கி வைத்திருக்கும் அரிசி வர்த்தகர்கள் மற்றும் விலைகள் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில் அவற்றை சந்தைக்கு வெளியிடாதவர்கள் பற்றிய தகவல்கள் தங்களிடம் ஏற்கனவே உள்ளன என்றும் அவர் கூறினார்.

எனவே அரிசியை மொத்தமாக வர்த்தக சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்காதிருந்தால், எந்தவொரு விலையும் அதிகரிக்காமல் நுகர்வோரின் அன்றாட தேவையைப் பூர்த்தி செய்ய அமைச்சரவையின் ஒப்புதலுடன் வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-இ)

## மாணவியைக் காப்பாற்ற சென்றவர் மீது தாக்கு

சாவகச்சேரி, செப்.20
அலறல் குரல் எழுப்பிய மாணவியை காப்பாற்றச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் தாக்கப்பட்டார்.
தலையில் காயமடைந்த பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று மிருசுவில் தவசிக்குளத்தில் இடம்பெற்றது.
இப் பகுதியைச் சேர்ந்த மாணவி பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் வழியில் நின்ற இருவர் வித்தியாசமான முறையில் கதைத்தமையால் மாணவி உதவி கோரி சத்தமிட்டுள்ளார்.
அதனைக் கேட்டு ஓடி வந்த பெண்ணை கிளுவன் தடியை முறித்து அவர்கள் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## நெஞ்சு வலியால் சிப்பாய் இறப்பு!

முல்லைத்தீவு, செப். 20
முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள 57ஆவது படைப்பிரிவு முகாமில் கடமையாற்றும் 35 வயதுடைய சிப்பாய் நெஞ்சு வலியால் உயிரிழந்தார்.
திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டதை அடுத்து அவர் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.
எனினும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவம னைக்குக் கொண்டுசெல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார் என்று தெரியவருகின்றது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-19)

## தோட்டத்துக்கு சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், செப். 20
தோட்டவேலை செய்வதற்கு வந்த முதியவர் ஒருவர் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவாலிப் பகுதியில் உள்ள வயலொன்றில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டார்.
நேற்றையதினம் நவாலியில் உள்ள உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்து தோட்ட வேலை செய்வதற்காக வந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டார். கல்லப்பிடுங்கி மாவிட்டபுரம் தெற்கில் வசிக்கும் செல்லத்துரை கனகரத்தினம் (வயது 68) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். இவரது இறப்புத் தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)




கடற்கரை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையால், கடற்கரை பாதுகாப்பு வாரம் நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கல்கிஸை கடற்கரையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சர்வதேச கடற்கரை பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, "கழிவுகள் அற்ற கடல் தூய்மையான கடற்கரை" என்ற தொனிப்பொருளில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (ப-இ)



## செம்மணியில் புதைக்கப்பட்ட வெடிகுண்டுகள் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 20
யாழ்ப்பாணம் செம்மணி இந்து மயான வளாகத்துக்குள் புதைக்கப்பட்டிருந்த கைக்குண்டு, மிதிவெடி என்பன சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன.
கடந்த வாரம் யாழ் கல்வியங்காடு பகுதியில் நபரொருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அத்தோடு செம்மணி பகுதியில் கைக்குண்டு மற்றும் ஜொனி ரக மிதிவெடி என்பனவும் குறித்த நபரால் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று அவர்மீது பிறிதொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
அந்த வழக்கிலும் சந்தேகநபருக்கு எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது. சந்தேகநபரிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையிலேயே செம்மணிப் பகுதியில் கைக்குண்டு மற்றும் மிதிவெடி என்பன மறைத்து வைக்கப்பட்டமை தெரியவந்தது. இதையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய சிறப்பு அதிரடிப் படையினர் நேற்றுக் காலை மேற்படி வெடிபொருள்களை மீட்டனர். (ம-இ)

## ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்திய கல்வெட்டு

கொடிகாமம் செப் 20
பழுதடைந்த கிணற்றை சீரமைத்து மக்களிடம் கையளித்த நிறுவனம் அங்கு பதித்த கல்வெட்டில் தங்களுடைய பெயரைப் பொறிக்காததால் கல்வெட்டு பதித்ததற்கு சாவகச்சேரிப் பிரதேச சபையில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது.
சாவகச்சேரி பிரதேச சபையின் மறவன்புலவுப் பகுதியில் அமைந்துள்ள சபையின் பொதுக் கிணற்றை சீரமைப்புச் செய்த சீலெக்ஸ் நிறுவனம் தமது பெயரைக் குறிப்பிட்டு கல்வெட்டு ஒன்றைப் பதித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை அமர்வில் உறுப்பினர் அ. நிமலரோகன், சபையின் பொதுக் கிணற்றை சபையின் அனுமதியின்றிச் சீரமைத்து உள்ளதுடன் சபைக்குச் சொந்தமான கிணறு என கல்வெட்டில் குறிப்பிடாதது குறித்து ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். அது தொடர்பாக குறித்த நிறுவனத்துடன் கதைத்து கல்வெட்டை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என தவிசாளர் தெரிவித்தார்.
நீண்ட காலமாகப் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட இந்தக் கிணற்றை சீரமைத்துத்தருமாறு அப்பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து அந்த நிறுவனத்தினர் சீரமைப்புக்களை மேற்கொண்டு 28ஆம் திகதி பொதுமக்கள் பாவனைக்கு கையளித்தனர். (ப159, 9)

## வாள்வெட்டில் நால்வர் காயம்

### *முள்ளியவளையில் சம்பவம்*

முல்லைத்தீவு, செப். 20
முள்ளியவளை கிச்சிராபுரம் பகுதியில் இருவருக்கிடையில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி வாள்வெட்டில் முடிவடைந்துள்ளது.
அவர்களுக்கு இடையிலான கைகலப்பை தடுக்க முயன்ற மேலும் இருவர் மீதும் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
காயமடைந்த நால்வரும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)

## மாசார் பிரதான வீதியின் சீரமைப்புக்கள் ஆரம்பம்!



கிளிநொச்சி, செப். 20
மாசார் செல்லும் பிரதான வீதியைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பச்சிலைப்பள்ளி தவிசாளர் சு.சுரேன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட மாசார் கிராமத்துக்குச் செல்லும் பிரதானவீதிமிக நீண்ட நாள்களாகச்சீரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் அங்கு வசிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப தற்போது அந்த வீதியைச் சீரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மிக விரைவில் வீதி சீரமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்குக் கையளிக்கப்படும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் மேலும் தெரிவித்தார். (ம-6)

# '20'இனை சட்டரீதியாகவும் சவாலுக்குட்படுத்துவோம்

### சஜித் அணி சூளுரை



கொழும்பு, செப். 20

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தால் ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அச்சட்ட மூலத்தை எவ்வாறு சட்டரீதியாக சவாலுக்குட்படுத்தலாம் என எமது சட்டத்தரணிகள்குழு ஆராய்ந்து வருகின்றது. சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஒரு வாரத்துக்குள் அது தொடர்பில் ஆட்சேபனை வெளியிடலாம். சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கின்றோம். 'ஐக்கிய கூட்டமைப்பு' என்று அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளோம். அதில் இணையுமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். மாகாணசபைத்தேர்தலில் இணைந்து போட்டியிடுவது பற்றியும் பரிசீலிக்கப்படும்' - என்றார். (ம-44)

## குளத்தில் மண் நிரவி சுற்றுலா மையம்

### 25ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

வவுனியா, செப். 20
வவுனியாவில் உள்ள குளம் ஒன்றில் மண் நிரவி, சுற்றுலா மையம் அமைக்கப்பட்டதற்கு எதிராக குடியிருப்புக் கமக்காரர் அமைப்பால் வவுனியா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையால், குளம் ஒன்றில் மண் நிரவப்பட்டு சுற்றுலா மையம் அமைக்கப்பட்டிருந்தது. இதனை ஆட்சேபித்து அந்தக் குளத்தின் கமக்காரர் அமைப்பால் வவுனியா நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை முதற்தோற்றத்திலேயே தள்ளுபடி செய்யுமாறு நகரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பான சட்டத்தரணிகளால், இரண்டு ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றில் ஓர் ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது. மற்றைய ஆட்சேபனை தொடர்பில் 25ஆம் திகதி தெரிவிக்கப்படும் என நீதிபதியால் தெரிவிக்கப்பட்டு, அன்றையதினத்துக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அந்த வழக்கு கடந்த 14ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதி மன்றால் வழங்கப்பட்ட ஆணையாகிய "குறித்த இடத்தில் மேலதிக அபிவிருத்தி வேலைகள் எதையும் செய்யக்கூடாது" என்ற ஆணை தொடர்கிறது. வழக்கில் கமக்காரர் அமைப்பு சார்பில் சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரனும், நகரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பில் சட்டத்தரணிகளான யூஜின் ஆனந்தராஜா, திருச்செல்வம் திருவருள், ம. சுதர்சினி, யாழினி கௌதமன், மரியநிசாந்தினி தியாகரன் ஆகியோரும் முன்னிலையாகினர். (ப-110)

## கொய்கா செயற்றிட்ட முன்னேற்ற மதிப்பீடு

கொடிகாமம், செப். 20
தென்கொரிய நாட்டின் நிதி உதவியுடன் கல்வி அமைச்சால் செயற்படுத்தப்பட்ட "கொய்கா" செயற்றிட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யும் நிகழ்வு பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது இலங்கை கல்வி அமைச்சின் தமிழ் பாடசாலை அபிவிருத்திக் கிளைப் பணிப்பாளர் நளினி ஆலாலசுந்தரம் தலைமையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

13 பாடசாலைகளில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. எனினும் கடந்த வியாழக்கிழமை பளை இந்து ஆரம்பப் பாடசாலை, சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை, இயக்கச்சி அ.த.க பாடசாலை, பிரமந்தனாறு மகா வித்தியாலயம், இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை, சிவபாத கலையகம் அ.த.க பாடசாலை, கனகாம்பிகை அ.த.க பாடசாலை ஆகிய ஏழு பாடசாலைகளில் கொய்கா செயற்றிட்ட மதிப்பீடுகளை அவர்கள் மேற்கொண்டனர். மிகுதி ஆறு பாடசாலைகளில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. (ப-159)





## பொதுமக்கள் முறையிட முறைப்பாட்டுப் பெட்டிகள்

### பொலிஸ் அதிகாரிகளிடம் கையளிப்பு

பொதுமக்கள் முறைப்பாடு மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கான பெட்டிகள் பொலிஸ் பொறுப்பதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன. வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த அந்த முறைப்பாட்டுப் பெட்டிகளை மன்னார், வவுனியா பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளிடம் கையளித்தார். முன்னதாக இறம்பைக்குளம் ஈஷி மிஷன் ஆலயத்தின் அனுசரணையில் அந்தப் பெட்டிகள், வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

வன்னிப் பிராந்தியத்தில் பொதுமக்கள் அதிகளவில் நடமாடும் பகுதிகளான பஸ் நிலையங்கள், பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள், பாடசாலைகள் வைத்தியசாலைகள் போன்ற இடங்களில் இந்த முறைப்பாட்டுப் பெட்டிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமுதாயப் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளையும், ஆலோசனைகளையும் நேரடியாக பொலிஸ்மா அதிபருக்கு தமது பெயரைக் குறிப்பிட்டும், குறிப்பிடாமலும் தெரிவித்துக்கொள்ள முடியும் இவற்றை சேகரிப்பதற்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இதனை நடை முறைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-110)

## முகமாலையில் மனித எச்சம்; 22ஆம் திகதி அகழ்வு ஆரம்பம்

கிளிநொச்சி, செப் 20
கண்ணிவெடி அகற்றும்போது, மீட்கப்பட்ட எலும்புகள் தொடர்பான அகழ்வுப் பணிகள், எதிர்வரும் 22ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு இடம்பெற்று வரும் பகுதியில், அண்மையில் மனித எச்சங்களும் அடையாளம் காணப்பட்டிருந்தன. இது தொடர்பில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் நிறுவனப் பணியாளர்களால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பச்சை நிற உடையும் முழங்கால் எலும்பும் காணப்பட்ட அந்தப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் கிளிநொச்சி நீதிவான் மன்றில் பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்தனர். அதன்படி அந்தப் பகுதியை எதிர்வரும் 22 ஆம் திகதி யன்று அகழ்வு செய்யுமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. எச்சங்கள் காணப்பட்ட பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளிலும் ஈடுபட்டுள்ளனர். (ப-6)

## ஆரோக்கிய மாதா திருநாள் திருப்பலி

கிளிநொச்சி, செப். 20
முகமாலை தூய ஆரோக்கிய மாதாவின் திருநாள் திருப்பலி வழிபாடுகள் நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இந்த ஆலயம் போரின் போது முழுமையாகச் சேதமடைந்தது. அதன்பின்னர் சீரமைக்கப்பட்டு கடந்த 17 ஆம் திகதி திருவிழா ஆரம்பமாகி நேற்று திருவிழா திருப்பலி, பூசைகளுடன் நிறைவுபெற்றது. (ஐ-6)

# நாட்டின் தொழில் துறைகளை மேம்படுத்துவதற்கு கொள்கை, தொடர்பாடலில் பெரும் மாற்றம் அவசியம்

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

கொழும்பு, செப்.20
நாட்டின் தொழில் துறைகளை மேம்படுத்த வேண்டுமெனில் நாட்டிலுள்ள வங்கிகளின் கொள்கைகளிலும், சேவை பெறுநர்களுடனான தொடர்பாடல் முறையிலும் பெரும் மாற்றமொன்று அவசியமென அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர்,
நாட்டிலுள்ள தொழில் உரிமையாளர்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் எடுத்த தீர்மானங்களே காரணம். கொவிட் 19 வைரஸ் பரவலுக்கு மத்தியில் நிலைகுழைந்து நிற்கும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளைப் பார்க்கையில் இலங்கையிலுள்ளவர்கள் அதிஷ்டசாலிகள் என்றே தோன்றுகிறது. தொற்று நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய தலைமைத்துவம் ஒன்றின் கீழ் நாடு உள்ளமையே அதற்குப் பிரதான காரணம். அதனால் நாட்டின் அரச பொறிமுறையில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் சகல துறைகளுக்கும் தாக்கம் செலுத்தும். ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அமுல்படுத்தபட்ட வரிக்கொள்கைகள் காரணமாக நாட்டில் தொழில் துறைகள் வீழ்ச்சி கண்டிருந்த நிலையில் 2019 நவம்பர் 16 ஆம் திகதிக்குப் பின்னர் அவை மீண்டும் தலையெடுக்க முயற்சிக்கும் போது கொரோனா, வைரஸ் பரவல் அதற்குத் தடையாக அமைந்துவிட்டது என்றார். (ப-இ)

## இதுவரை 262,378 பேருக்கு பி.சி.ஆர் சோதனை

கொழும்பு, செப்.20
தற்போது முப்படையினரால் நிருவகிக்கப்படும் 59 தனிமைப்படுத்தல் மையங்களில் 5,895 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும், 262,378 பி.சி.ஆர் பரிசோதனைகள் இதுவரை நாடாளவிய ரீதியாக நடத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வெளிநாட்டிலிருந்து வந்தவர்களைத் தவிர வேறு எந்த சாதகமான சம்பவங்களும் சமூகத்திலிருந்து பதிவாகவில்லை என்பதால், அனைத்து இலங்கையர்களும் தங்கள் சுகாதார நடைமுறைகளைத் தொடரவும், சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களின்படி அதன் பரவலைத் தடுக்கவும் உதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ப-இ)






# வவுனியாவில் அனுமதியின்றி நடத்தப்படும் உணவகம்

## மூடியே தீருவேன் என்கிறார் திலீபன் எம்.பி.

வவுனியா,செப். 20

**வவுனியாவில் உள்ள உணவகம் ஒன்று தொடர்பில் வவுனியா வடக்கு பிரதேச சபை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நீண்ட நேர விவாதம் இடம்பெற்றது.**

அந்த உணவகம் அனுமதியற்ற முறையில் இயங்குகிறது என்றும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும், அந்த உணவகத்தின் செயற்பாடுகளை நிறுத்த முடியவில்லை என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் அந்த உணவகத்தை விடப்போவதில்லை என்று ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கு. திலீபன் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கு. திலீபன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது கனகராயன்குளம் பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்று தொடர்பாக வவுனியா, வடக்கு பிரதேசசபைத்தவிசாளர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். "2018ஆம் ஆண்டிலிருந்து குறித்த உணவகம் அனுமதியின்றி இயங்கிவருகின்றது. காணிக்கான உரித்துத் தொடர்பான பத்திரம் அல்லது அதனை வாடகைக்குப் பெற்றிருந்தால் அதன் உரிமையாளரின் சம்மதக் கடிதம், மற்றும் கட்டட அனுமதி போன்றன உணவக உரிமையாளரிடம் இல்லை. இவற்றை மையப்படுத்தி பிரதேச சபையால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றம் உத்தரவிட்டால் மாத்திரமே சபையால் உணவகத்தை மூடமுடியும். குறித்த உணவகத்தை சபையின் செயலாளர், தொழில்நுட்ப அதிகாரி சகிதம் கடமை நிமித்தம் ஒருமுறை நாம் பார்வையிட்டபோது தமது உணவகத்துக்குள் அத்துமீறி நுழைந்ததாக எம்மீது பொலிஸில் முறைப்பாடு அளித்தனர். எமக்கு விசாரணைகளும் இடம்பெற்றிருந்தன" - என்றார்.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த சுகாதாரப் பரிசோதகர் உணவகத்தில் உணவுச் சட்டத்தின் கீழ் அனுமதியற்ற முறையில் வியாபாரம் செய்தல் என்ற விடயத்தை முன்வைத்து 2018 ஆம் ஆண்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தோம். அதற்கமைய உணவகத்தை நடத்த நீதிமன்றால் இடைக்காலத் தடை பிறப்பிக்கப்பட்டது. சில நாள்களின் பின்னர் நீதிமன்று உணவகம் நடத்துவதற்கு அனுமதி வழங்கியது. தற்போது வழக்கு இடம்பெற்று வருகின்றது எமது கடமையை நாம் செய்கிறோம் என்றார். "நீதிமன்றின் நடவடிக்கைகளை நாம் பார்ப்பதுடன் இவ்விடயத்தை நான் அப்படியே விட்டு விடப்போவதில்லை" என ஒருங்கிணைப்புக் குழு தலைவர் கு.திலீபன் தெரிவித்தார்.

(ப-110)

# முசலி ஒருங்கிணைப்பில் பல விடயங்கள் ஆராய்வு

மன்னார், செப் 20

மன்னார், முசலி பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பல பிரச்சினைகள் ஆராயப்பட்டு, தீர்மானங்களும் எடுப்பட்டுள்ளன.

முசலி பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் தலைமையில் முசலி பிரதேச செயலாளர் ஆர்.ரஜீவனின் ஒழுங்குபடுத்தலில் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது, கிராம ரீதியான ஆயுள் வேத வைத்தியசாலையொன்றை அமைத்தல், வன திணைக்கள மற்றும் கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவித்தல், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் குடிதண்ணீர்ப் பிரச்சினை, வெளி மாவட்டங்களில் இருந்து வந்து அத்துமீறி மீன் பிடித்தல், பிரதேச சபையூடாக கிராமங்களுக்கான வீதி விளக்குகளைப் பொருத்துதல், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மக்களின் எதிர்பார்ப்பும் கோரிக்கையும், மின்இணைப்பு, நீர் விநியோகத்திட்டம், தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டப் பிரச்சினைகள், சட்ட விரோத மண் அகழ்வு, இலங்கை போக்குவரத்து சபை சம்பந்தமான விடயங்கள் எனப் பல விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன. (ப-213)

# மாணவர், ஆசிரியருக்கு கொவிட் - 19 செயலமர்வு



யாழ்ப்பாணம், செப்.20

பாதுகாப்பான பாடசாலை எனும் தொனிப்பொருளின் கீழான கொவிட் -19 தடுப்பு செயலமர்வு ஒன்று அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின், யாழ். கிளை அலுவலகத்தால் கல்லூரி மாணவத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இந்தச் செயலமர்வு முன்னெடுக்கப்பட் டது.

இதில் வளவாளர்களாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர் செ.பிரகாஷ் மற்றும் முதலுதவி போதனாசிரியர் ந.இலங்கேஸ்வரன், திட்ட இணைப்பாளர் வி.பிரதீஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர். கொவிட் - 19 தடுப்பு பொறிமுறைக்கான தனி நபர் பாதுகாப்புக்கான ஒரு தொகுதி உபகரணங்களும் இதன் போது கையளிக்கப்பட்டன. (ப-422)

# கொடிகாமம் சந்தை பகுதியில் மதுபோதையில் அட்டகாசம்

## தவிசாளரிடம் முறைப்பாடு

கொடிகாமம், செப்.20

கொடிகாமம் சந்தைப் பகுதியில் மாலை வேளைகளில் மதுபோதையில் காணப்படுவோர் பொது மக்களைத் தகாத வார்த்தைகளால் பேசுகின்றனர் என தவிசாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்காடி வியாபாரிகள் வியாபாரம் செய்த இடத்தில் மாலை வேளையில் குடிபோதையில் இருப்போர், பொதுமக்கள் செல்லும்போது தகாத வார்த்தைகளால் பேசுகின்றனர் எனவும் மக்கள் தெரிவித்தனர் பிரதேச சபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது. அந்த விடயம் சபையில் ஆராயப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தவிசாளர்;

இந்த விடயம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கும் பொறுப்பதிகாரிக்கும் முறையிட்டும் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. பொலிஸ் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது தவிர்க்கப்படலாம். பொது இடங்களில் இப்படியான செயற்பாடுகள் செய்கின்றமை பிழையான விடயம். அண்மைக் காலமாக பிரதேச சபைகளின் தவிசாளர், செயலாளர் போன்றோர் தாக்கப்படுகின்றமை தொடர்பாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன. பாதுகாப்பற்ற நிலையில் அரச உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டியுள்ளதால் சந்தையில் கடமையில் இருக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இதனைத் தடுக்க முடியாத நிலை காணப்படுகிறது. பொலிஸார், சந்தையில் வர்த்தகத்தில் மற்றும் வியாபாரத்தில் ஈடுபடுவோர் இதனைத் தடுக்க முயற்சிக்கலாம் - என்றார்.

(ப-159,9)

# விபச்சார குற்றச்சாட்டு: மூன்று பெண்கள் கைது

வவுனியா, செப்.20

வவுனியா நகரில் விபச்சார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூன்று பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரில் விபச்சாரம் அதிகரித்து வருகிறது என்ற குற்றச்சாட்டை அடுத்து அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக வவுனியா பொலிஸார் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப-18)

# உலக நோயாளர் பாதுகாப்பு தினம் கிளிநொச்சியில் கடைப்பிடிப்பு

கிளிநொச்சி, செப்.20

"உலக நோயாளர் பாதுகாப்பு தினம்" நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் கடைப்பிடிக்கப்பட்டது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக "சுகாதார ஊழியர்களின் பாதுகாப்பினூடாக நோயாளர் பாதுகாப்பை உறுதிப் படுத்தல்" எனும் தொனிப்பொருளில் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.



கொவிட் - 19 தொற்றானது, சுகாதார ஊழியர்களின் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் அதன் மூலமே நோயாளர் பாதுகாப்பை மேலும்முன்கொண்டு செல்ல முடியும் என்பதையும் தெளிவாக உணர்த்தியுள்ளது. அதன்படி "சுகாதார ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி நோயாளர் பாதுகாப்பை உயர்வடையச் செய்வோம்" என கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை ஊழியர்கள் நேற்று சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர். (ப-222)



# இன்றைய நாள்

**மேடம்:** தைரியம் கூடும் நாள். வியாபார முயற்சிகள் வெற்றி அடையும். பணியாளர்களுடைய முயற்சி வெல்லும். உடன்பிறந்தவர் உதவுவர். வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திகொள்வீர்கள்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். வியாபாரத்தில்ஓரளவு லாபம் சம்பாதிப்பீர்கள். பணியாளர்களின் ஆலோசனைகள் மேலதிகாரியால் ஏற்கப்படும். இரண்டு நாள்கள் இருந்த மனக்குழப்பம் நீங்கும்.

**மிதுனம்:** பணியாளர்கள் மேலதிகாரியின் கோபத்தைக் கிளற வேண்டாம். கடனை அடைப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். குடும்பத்தாரின் ஆதரவு உண்டு.

**கடகம்:** மகிழ்ச்சியும், விரக்தியும் கலந்த நாள். உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். உடன்பிறப்புகளின் முன்னேற்றத்தில் அக்கறை எடுத்துக்கொள்வீர்கள். முயற்சிகள் வெற்றி பெற பொறுமை வேண்டும்.

**சிம்மம்:** நிம்மதி கூடும். எளியோருக்கு வருமானம் திருப்தி தரும். முன்னேற்றம் கூடும் நாள். தொழில் வளர்ச்சி உண்டு. கொள்கை பிடிப்போடு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

**கன்னி:** இனிய நாள். வியாபாரிகளின் திட்டம் ஒன்று நிறைவேறும். பணியாளர்களின் வருமானம் மெல்ல உயரும். திருமணத்துக்கு காத்திருப்போருக்கு நல்ல வரன் வரும்.

**துலாம்:** குடும்பத்தினரின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி தடைபடும். பாராட்டு கூடும் நாள். வெளியூரிலிருந்து வரும் தகவல் மகிழ்ச்சி தரும். கொடுத்த தொகை திரும்பி வரும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். சுபநிகழ்ச்சி பற்றி உறவினர்களின் ஒத்துழைப்பு உண்டு. பணியாளர்கள் புதிய நிறுவனத்தின் அழைப்பை ஏற்பது பற்றி யோசியுங்கள்.

**தனுசு:** வெற்றி கிடைக்கும் நாள். பணியிடத்தில் நல்ல தகவல்கள் வரும். சுபநிகழ்வுக்கான பணக்கவலை தீரும். பிரபலமானவர்களின் நெருக்கம் உற்சாகத்தைத் தரும்.

**மகரம்:** வெளியுலகத் தொடர்புகள் அதிகரிக்கும் நாள். யோசித்துச் செயல்பட வேண்டும். உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்கள் விட்டுக் கொடுத்துச் செல்வது மனக்குழப்பத்தைத் தரலாம்.

**கும்பம்:** பணியாளர்கள் நிலுவைப் பணிகளை முடிப்பீர்கள். சேமிப்பு மெல்ல உயரும். விலகிச் சென்ற நண்பர்கள் இணைவார்கள். வளர்ச்சி கூடும்.

**மீனம்:** ஊர் மாற்றம் பற்றி சிந்திக்க வேண்டாம். சொல்லைச் செயலாக்க முடியாமல் சிரமம் ஏற்படக்கூடும். குடும்பத்தினரின் தேவைகள் அதிகரிக்கும்.

# மஞ்சள் உற்பத்தியில் 2021 இல் தன்னிறைவு!

கொழும்பு, செப்.20

2021 ஆம் ஆண்டுக்குள் இலங்கை மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் என்று விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் சுபஹீன்கெந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இதுவரை ஆயிரத்து 500 ஹெக்ரெயர் பரப்பில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. 2021 பெப்ரவரி மாதத்துக்குள் சுமார் 22 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மஞ்சள் அறுவடை செய்யப்படும்.



அறுவடையில் இருந்து 4 ஆயிரம் மெற்றிக் தொன் விதைகள் அகற்றப்பட்டாலும், மீதமுள்ளதைக் கொண்டு நாட்டின் மஞ்சள் தேவையைப் பூர்த்திசெய்ய முடியும்.

நாட்டில் ஆண்டுதோறும் மஞ்சள் நுகர்வு 7 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் ஆகும். 2019ஆம் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மஞ்சளின் அளவு ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மட்டுமே. ஏனைய தேவைகளைப் பூர்த்திசெய்ய கடந்த ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மஞ்சளின் அளவு 5 ஆயிரத்து 382 மெற்றிக் தொன் ஆகும். அதற்காக ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

தற்போது மஞ்சள் இறக்குமதி செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்குத் தீர்வாக உள்ளூர் விவசாயிகள் மஞ்சள் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள்- என்றார். (ஏ-இ)


## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு 6,952 மேன்முறையீடுகள்

கொழும்பு,செப்.20

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு, இதுவரை 6 ஆயிரத்து 952 மேன்முறையீடுகள் கிடைத்துள்ளன.

அதில் 2,365 முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு நேரடியாகக் கிடைத்துள்ளன என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. 2015 முதல் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச சேவையில் இடம்பெற்றது எனக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய, பிரதமர் ஆணைக்குழுவை நிய மித்திருந்தார்.

அந்த ஆணைக்குழுவின் முதற்கட்ட அறிக்கை அண்மையில் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (க-இ)



## அவன் பயணம்

கனவுகள் பறிக்கப்படும் இருளில்
அவன் நினைவுகள் மட்டுமே
தீக்குச்சிபோல
கையில் அகப்படுகிறது
அடிவானத்தின் மீது
நம்பிக்கை தொலையாதிருக்க
மீண்டும் மீண்டும்
பனையின் உயரத்தில்
அவன் முகம் ஒளிர்கிறது
மௌனம் அடைகாக்கும்
அவன் வார்த்தைகளை
தாவீதின்
கூழாங்கல்லாகவும்
காலம் கோதுடைக்கலாம்
கால தேவனின் பீடத்தில்
கற்பூரமாய் தோன்றியவன்
கொடிய இருள் நாளில்
இருளை வெட்டும் மின்னலாயும்
கனவுகளை காத்து
வழித்துணையும் ஆவான்
ஆன்ம பலத்தின் அவதாரம்
கல்லில் தூங்குமெனும்
நப்பாசையில்
இருளின் கனவழிக்கும்
வெறித்த பார்வை
பன்னிருநாள் காத்திருக்குமாம்
குரலிழந்தோரின்
குமுறலின் அடியில்
அவன் முப்பத்தி மூன்றாண்டுகள்
சீவித்திருக்கிறான்
எல்லா விழிகளின் வழியேயும்
இருள் மறைக்க முனையும்
தன் நல்லூர் தூபியை
பார்த்தபடி கடக்கிறான்
இருள் மறையுமெனும்
நம்பிக்கைதான்
அவன் பயணம் இனியும்

பொன்.காந்தன்

## தேயிலைக்கான கேள்வி 45 வீதமாக வீழ்ச்சி

கொழும்பு, செப்.20

உலக சந்தையில் தேயிலைக்கான கேள்வி 65 வீதத்திலிருந்து 45 வீதமாக குறைவடைவதற்கு தரம் குறைவான தேயிலை உற்பத்தி காரணமாக அமைந்துள்ளது என தேயிலை சபையின் தலைவர் ஜயம்பதி மொல்லிகொட தெரிவித்துள்ளார்.




தொழிற்சாலை உரிமையாளர்கள், ஏற்றுமதியாளர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டில் 705 தேயிலை தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 45 தொழிற்சாலைகளில் முறையற்ற செயற்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் 18 தொழிற்சாலைகளின் உற்பத்திகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. கழிவுத் தேயிலை மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தி தேயிலை உற்பத்தியை மேற்கொள்ளும் நிறுவனங்களை சுற்றி வளைப்பதற்கு புலனாய்வுத் துறையினரின் தகவல்களின் அடிப்படையில் பொலிஸ் விசேட படையணி மற்றும் பொலிஸாரினால் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நாட்டுக்கு கிடைக்கும் வருமானத்துக்கோ தேயிலை கைத்தொழிலுக்கோ தரம் குறைவான தேயிலை உற்பத்தி தடையாக அமைவதற்கு இடமளிக்கக்கூடாது எனத் தெரிவித்தார். (வ-இ)

# பார்த்தீபனுடன் 12 நாள்கள்





## தியாகதீபம் திலீபன் நல்லூர் வீதியில் நிகழ்த்திய அகிம்சை வேள்வி பற்றிய நேரடி அனுபவங்கள்

■ மு.வே.யோ.வாஞ்சிநாதன்

அதிகாலையில் ஓர் அதிசயம் நிகழ்ந்திருந்தது. ஆம்! இன்று திலீபன் காலை 5 மணிக்கே படுக்கையைவிட்டு எழுந்து விட்டார். அதுமட்டுமன்றி தான் சிறுநீர் கழிக்கப்போவதாகக் கூறினார். அவர் இருக்கும் நிலையிலே படுக்கையை விட்டு எழுந்து செல்வது என்பது முடியாமல் இருந்ததால் படுக்கையிலேயே சலப் போத்தலைக் கொடுத்தேன்.

ஆனால் சலம் போகவில்லை. வயிறு வலிப்பதாகவும் சலம் போவதற்குக் கஷ்டமாக இருப்பதாகவும் கூறினார். சிகிச்சையின் மூலம் கொஞ்சமாவது சிறுநீர் கழிக்க முடியும். ஆனால் அதைப்பற்றி பேசினாலே எரிந்து விழுவார் என்பதற்காக ஒன்றும் பேசாமல் இருந்தேன்.

நாலைந்து நாள்களாகப் படுக்கையிலே கிடப்பதாலும் நீர் அருந்தாமல் இருப்பதாலும் அவரது சலப்பை பாதிக்கப்பட்டிருக்கலாம்..... இதை அவரிடம் எப்படிக் கூறுவது? தூண் மறைவிடம் சென்று சிறுநீர்கழிக்கப் போவதாகக் கூறினார். அவரின் விருப்பத்துடன், அவரைக் கைத்தாங்கலாகப் பிடித்து இறக்கி மேடையின் பின்பக்கம் கொண்டு சென்றோம். பதினைந்து நிமிடங்களாக வயிற்றைப் பொத்திக் கொண்டு மிகுந்த கஷ்டப்பட்டார்;.

அதன்பின் ஆச்சரியப்படுமளவுக்கு சுமார் அரை லீற்றர் அளவு சலம் போனது. எனக்கு அது மிகுந்த அதிர்ச்சியைத் தந்தது. ஐந்து நாள்களாக எதுவும் குடிக்காமல் இருக்கும் ஒருவரால் இது எப்படிச் சாத்தியமாக முடியும்? அன்று வைத்திய நிபுணர் சிவகுமார் அவர்களிடம் இது பற்றி மறக்காமல் கேட்டேன். அவர் எந்தப் பதிலுமே கூறாமல் மௌனமாக சிரிப்பை உதிர்த்துவிட்டுச் சென்றார்.

அன்று மத்தியானம் எமது இதயத்துக்கு மகிழ்ச்சியைத் தரும் ஓர் இனிய செய்தி எனது செவிகளில் விழுந்தபோது இனந்தெரியாத நிம்மதி என்னிடம் குடிவந்தது. கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரகத்திலிருந்து ஒரு முக்கிய நபர் இன்று வரப்போகிறாராம். அவர் நமது அரசியல் பிரிவினருடன் திலீபனைப் பற்றிப் பேசப் போகிறாராம்.....

என் பிரார்த்தனை வீண்போகாது திலீபனின் உயிர் காப்பாற்றப்படப் போகின்றது...... இந்தியத் தூதுவரகத்திலிருந்து யாராவது வருவதானால் நிச்சயமாக பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆலோசனைப்படிதான் வருவார்கள்..... அப்படி வருபவர்கள் உணர்ச்சி பொங்கும் தாய்க்குலத்தின் கண்ணீரைக் கண்டாவது இரங்கமாட்டார்களா?

திலீபனை எண்ணித் துடிதுடித்துக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் மனங்களுக்கு அந்த ஆறுதல் செய்தி நிச்சயம் சாந்தியளிக்கத்தான் செய்யும். திலீபா ! நீ ஆரம்பித்து வைத்த அகிம்சைப் போர் எங்களது ஆயுதங்களுக்கு மதிப்பில்லாமல் செய்யப்போகிறது. போலும்? உன் அகிம்சைப் போரினால் அப்படி ஒரு நிலை எமக்கு வருமானால் அதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம். எமக்கு மட்டும் ஆயுதங்களை தூக்கிக் கண்டபடி சுட்டுத் தள்ள வேண்டும் என்று ஆசையா என்ன? முப்பது வருடங்களாக எமது மூத்த அரசியல் தலைவர்கள் தந்தை "செல்வா" தலைமையில் முயன்று முடியாத நிலையில்...... எமது தமிழ்ச் சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்றத்தானே வேறு வழியின்றி ஆயுதம் ஏந்தினோம்.நாம் அகிம்சைக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் நம் எதிரி அகிம்சையைப் பற்றி ஒன்றுமே தெரியாதவன்.... அவனுக்கு அது புரியாதது. அவனுக்குத் தெரிந்ததெல்லாம் கத்தியும், துப்பாக்கியும்தான்....

ஒருவன் கத்தியையும், துப்பாக்கியையும் தன் பலமாக எண்ணும்போது அவனெதிரில் நிற்பவனால் என்ன செய்ய முடியும். நீண்ட கசப்பான அனுபவங்கள் தான் எமது கரங்களில் துப்பாக்கிகளைத் தந்தன. 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் நாளில் இருந்து, சிங்கள இனவாதிகளால் தமிழர்கள் காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு வருகின்ற கொடுமை எப்பொழுது முடியும்? தங்கத் தமிழர்கள் வாழ்வில் பொங்கும் மகிழ்வும், பூரிப்பும் எப்பொழுது மலரும்?

அண்ணல் காந்தி அகிம்சைப் போரிலே வெற்றிகண்டார் என்றால் அதற்கு அவர் கையாண்ட அகிம்சைப் போராட்

## ஆறாம் நாள்

டங்கள் மட்டும் காரணமல்ல. காந்தியின் போராட்டத்தளம் இந்திய மண்ணிலே இருந்தது... காந்தியின் போராட்டத் தளத்திலே மனிதநேயம் மிக்க ஆங்கிலேயர்கள் இருந்தார்கள்... ஆகவே அகிம்சையைப் புரிந்து கொள்வதற்கு அந்த வெள்ளைக்காரர்களால் முடிந்தது.

ஆனால் நமது மண்ணில் அப்படியா?

எத்தனை சந்தர்ப்பங்களில் எமது தலைவர்கள் குண்டாந்தடிகளால் தாக்கப்பட்டிருப்பார்கள்? எத்தனை இனக் கலவரங்களில் எமது இனத்தவர்களின் தலைகள் வெட்டப்பட்டு தார்ப் பீப்பாக்களுக்குள் போடப்பட்டிருக்கும்? எத்தனை பெண்கள் தம் உயிரினும் மேலான கற்பை இழந்திருப்பர்?

அப்போதெல்லாம் நாம் ஆயுதங்களையா தூக்கினோம்? அகிம்சை ! அகிம்சை ! அகிம்சை !

இந்த வார்த்தைகள் தான் எங்கள் தாரக மந்திரமாக இருந்தது. இந்தத் தாரக மந்திரத்தைத் தூக்கி எறிந்து விட்டு எமது கைகளிலே ஆயுதங்களைத் தந்தவர்கள் யார்? நாமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களாகத்தான் தந்தார்கள்..... மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தான் தந்தன..... தலைவர் பிரபாகரனின் பின்னே ஆயிரமாயிரம் வேங்கைகள் அணிதிரண்டு நிற்பதற்குக் காரணம் யார்? சிங்களப் பேரினவாதம்தான் !

இன்று காலையிலிருந்து நல்லூர்க் கந்தசாமி கோயிலில் திலீபன் பெயரில் நூற்றுக்கணக்கான அர்ச்சனைகள் செய்யப்பட்டு அவை பொதுமக்கள் மூலம் மேடைக்கு வந்தவண்ணமிருந்தன. பிற்பகல் மூன்று மணியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியிலிருந்து சனங்கள் பஸ்களில் வந்து குவியத் தொடங்கினர். எங்கே பார்த்தாலும் மக்கள் அலைகள் தான் !

தளபதி கிட்டு அண்ணாவின் தாய், திலீபனை வாரி அணைத்து உச்சி முகர்ந்து அழுத காட்சி என் நெஞ்சைத் தொட்டது. துரோகிகளினால் வீசப்பட்ட வெடிகுண்டினால் தன் மகன் ஒரு காலை இழந்தபோது அந்தத் தாய் கூறிய வார்த்தைகள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. "ஒரு கால் போனால் என்ன? இன்னும் ஒரு கால் இருக்கு இரண்டு கையிருக்கு.... அவன் கடைசி வரையும் போராடுவான்..."

போர் முனையில் தன் மகனின் மார்பில் வேல் பாய்ந்திருப்பதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் விட்ட வீரத் தமிழ்த்தாயின் கதையை இது எனக்கு நினைவூட்டியது.

இந்திய உதவித் தூதுவர் கென் அவர்கள் விமான மூலம் பலாலிக்கு வந்து விட்டாராம்.... அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அன்ரன் பாலசிங்கமும், மாத்தயாவும் போயிருக்கின்றனர்.... என்ற செய்தியை 'சிறி' வந்து சொன்னபோது மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தேன். திலீபனுக்கும் அதைத் தெரிவித்தேன்.

காலையில் சிறுநீர் கழித்ததால் திலீபன் சற்றுத் தெம்பாக இருந்தார். பேச்சுவார்த்தை முடிந்து அதில் சாதகமாக முடிவு கிடைக்குமானால்...... உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டு திலீபனை யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்க வேண்டும்... அங்கே அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்குவேண்டிய சிகிச்சைகளை உடனடியாக அளிக்கத் தொடங்கினால்... இரண்டு மூன்று நாள்களில்



திலீபன் வழக்கம்போல் எழும்பி நடக்கத் தொடங்கிவிடுவார்.இப்படி எனக்குள்ளேயே கணக்குப் போட்டுக்கொண்டேன். இயக்க உறுப்பினர்கள் திலீபனுடன் பேசிக்கொண்டிருந்தனர். அவரைச் சந்திக்க வந்த மகளிர் அமைப்பு உறுப்பினர்கள், தம்மைக் கட்டுப்படுத்த முடியாமல் விம்மி விம்மி அழுதமை என் நெஞ்சைத் தொட்டது.

தளபதி சூசை, பிரபா, ரகு அப்பா, தளபதி புலேந்திரன், தளபதி ஜொனி போன்றோர் கண்கலங்கி திலீபனின் தலையை வருடி.... பேசி விட்டுச் சென்றனர்.

அவர்கள் போனதும் திலீபன் என்னை அழைத்தார்.

" கிட்டண்ணையைப் பார்க்க வேணும்போல இருக்கு...."

என்று மெதுவாகக் கூறும்போது அவர் முகத்திலே 'ஏக்கம் படர்ந்திருந்தது. ஒரு கணம் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கிட்டண்ணா, குட்டிசிறி ஜயர்.... இவர்கள் எல்லாரும் இந்தியாவில் இருக்கின்றனர்.

திலீபனுக்கு என்ன பதில் சொல்லதென்று தெரியாமல் தவித்தேன்..... கிட்டு அண்ணர் இந்தியாவில் தெரியும்... ஆனால் இந்த நிலையில், அவர் கிட்டு அண்ணாவைக் காண விரும்பியது நியாயம்தான்.

இரவு வெகுநேரம்வரை போச்சுவார்த்தையின் முடிவு வரும் வருமென்று பார்த்துக்கொண்டிருந்தோம்... ஆனால், அது வரவேயில்லை. இன்று மாலை சிறிலங்கா நவ சமசமாசக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் வந்து திலீபனைப் பார்த்துவிட்டுச் சென்றனர். இரவு வெகுநேரம் வரை எனக்குத் தூக்கமே வரவில்லை.. ஆனால், திலீபன் தன்னை மறந்து நன்றாக உறங்கினார்.

**அவரின் இரத்த அழுத்தம் - 85. 60**
**நாடித்துடிப்பு - 120**
**சுவாசம் - 22**

*- தியாகம் தொடரும்*

# கலைசார் பிரதிநிதித்துவம்



சி.பாக்கியராஜ்
4 ஆம் வருடம்
நுன்கலைத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

### அறிமுகம்

இக்கட்டுரையானது முக்கியமான மூன்று கட்டுரைகள் மூலமாக பிரதிநிதித்துவம் தொடர்பான விளக்கத்தை பெறுவதற்கு எத்தணித்தலாகும். இதற்கு பிரதிநித்துவம் என்பது தொடர்பான அடிப்படை அவசியமாகிறது.

பிரதிநிதித்துவம்என்பது ஒருவிடயத்தினைவெளிப்படுத்தல்அல்லதுஎடுத்துக்காட்டல்.பிரதிநிதித்துவமானது எந்தவொருவிடயத்திணைசார்ந்தும்காணப்படலாம். ஏதோ ஒரு விடயம் தொடர்பாக சார்பாக பேசப்படல் அல்லது செயற்படுதலைக் குறிக்கும். ஒரு நபரை அல்லது ஒரு விடயம் தொடர்பாக ஒரு விதத்தில் விளக்கம் கொடுத்தல் அல்லது சித்தரித்துக் காட்டுவதாகும். இப் பிரதிநிதித்துவமானது கருத்துநிலை ஏற்பட்ட விடயங்களைக் கொண்டமைந்தது. இக் கருத்து நிலையானது சமூக ஊட்ட வளர்ச்சி மூலமான உருவான கருத்துக்களின் தொகுதியாகும்.

பிரதிநிதித்துவமானது கலையுடன் பெரும் தொடர்பு கொள்வதோடு கலை உணர்வுகளை உருவாக்குவதோடுஅறிகுறிகளினைஅடியாகக்கொண்டமைந்த ஒன்றாகவும் காணப்படுகிறது. படைப்பின் மூலமாக வெளிக்கொணரப்படும் பிரதிநிதித்துவம் என்பது வெறுமனே படைப்பில் உள்ள விடயத்தினை மட்டும் பிரதிநிதித்துவம் செய்யாது படைப்பாளியினையும் பிரதிநிதித்துவம்செய்கிறதுஒருவர்இன்னொருவரை சார்ந்து ஒரு படைப்பை பிரதிநிதித்துவம் செய்யும் போது அதில் இன்னொருவரின் வெளிப்பாடாகவே காணப்படும். அந்த வகையில் பிரதிநிதித்துவம் இருவகையில் காணப்படும்.

1. Speak for
2. Speak with

Speak for என்பது நாம் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறோம் அதாவது அவர்களுக்கு பதிலாக நாங்கள் என்றும் Speak with என்பது நாங்கள் அவர்களோடு இணைந்து அவர்களை பிரதிநித்துவம் செய்கிறோம் என்றும் கொள்ளலாம்.

பிரதிநித்துவம் என்பது ஒரு வகையான பதிவாகும். இதில் ஒரு உடல் அல்லது பொருள் பற்றிய உணர்ச்சி தகவல்கள் ஒரு ஊடகத்தில் விபரிக்கப்படுகிறதா? ஒரு கலை பிரதிநிதித்துவம் எந்த அளவிற்கு பிரதிநிதித்துவப்படுத்தும் பொருளை பிரதிபலிக்கும் என்பது ஒரு தீர்மானம் சார்பானதாகும். இது வார்த்தை குறிக்கோள் என்பவற்றில் தங்காது.

இத்தகைய பிரதிநித்துவம் என்பதை பின்வரும் கட்டுரைகளில் எவ்வாறு வெளிப்படுகிறதென ஆராய்வோம். அந்தவகையில் பாக்கியநாதன் அகிலன் அவர்களின் கருத்து நிலையும் விக்ரவியலும், ஐந்தாம் குரவலரான ஆறுமுகநாவலர் என்னும் கட்டுரையினை எடுத்துக் கொண்டால், இக்கட்டுரை ஆறுமுக நாவலரின் விக்கிரவியல்தொடர்பானதொருஆய்வினைமேற்கொள்ளல். இங்கு ஆறுமுகநாவலராக பிரதிநிதித்துவம் செய்யப்பட்டிருப்பவர் ஆறுமுக நாவலர் தானா? என்ற வினாவை கேட்கின்றனர். நான் இக்கட்டுரையின் மூலமாக புரிந்து கொண்டதன் அடிப்படையில் இன்று நடைமுறையில் காணப்படும் ஆறுமுக நாவலரின் விக்ரவியல் என்பது குறிப்பிட்ட சிலரின் கருத்துநிலை மூலமாக உருவாக்கப்பட்டதும் பண்பாட்டு சமய நெறிகளை பிரதிநித்துவம் செய்யும் ஒரு ஆறுமுகநாவலர் போல் உள்ள ஒரு பிரதியை வடிவமாகவே காணப்படுகின்றது.

நாவலர் வாழ்ந்த சம காலப்பகுதிகளில் புகைப்படக் கலை காணப்பட்டு அதிகமாயிருந்தபோதிலும் அக்காலத்தில் நாவலரின் புகைப்படமோ அல்லது ஓவியமோ வெளிவந்ததாக கூறப்படவில்லை.

இருபதாம் நூற்றாண்டு முற்பகுதிக்குள் அச்சுப்பிரதியங்களில்ஆறுமுகநாவலரின்விக்கிரவியல்திடீர்எனத் தோன்ற மூலம் என்ன? எவ்வாறு இது உருவாக்கப்பட்டது? என்பதை யோசிக்க தோன்றுகிறது? இவ்வாறு இன்று நாம் காணுகின்ற ஆறுமுகநாவலரின் விக்கிரவியல் என்பது உண்மையில் ஆறுமுக நாவலரை பிரதிநிதித்துவம் செய்கின்றதா? அல்லது இன்றைய ஆறுமுகநாவலர் விக்ரவியலில் சிலர் குறிப்பிடப்பட்டவர்கள் மூலமாக உருவாக்கப்பட்டதா?அவ்வாறு உருவாக்கப் பின்புலம் என்ன? என்ற பல சந்தேகங்கள் உருவாகின்றன.



இன்று என் கண்முன் தென்படும் நாவலரின் விக்கிரம் என்பது நாவலரின் சொந்தங்கள், நாவலரோடு சமகாலத்தில் வாழ்ந்தவர்கள், கலை ஆசிரியர்கள் என்போரின் கருத்து நிலைகளை கருத்திற்கொண்டு ஆறுமுக நாவலரை போன்ற தோற்றம் கொண்ட ஒருவரை (ஆழனநட)ஆககொண்டுஉருவாக்கப்பட்டவடிவமேஆகும். இங்கு ஆறுமுகநாவலரின் விக்கிரம வடிவமானது அவரின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்திய அனைவரையும் மறைமுகமாக பிரதிநிதித்துவம் செய்கிறது. இன்றுநாம் காணும் அனைத்து நாவலர் வடிவங்களும் மொட்டை தலையுடன் உருத்திராட்ச மாலைகள், 3 குறி விபூதி பூச்சுடனும், மேலாடையற்று வேட்டி கட்டிய நிலையிலேயே காணப்படுகின்றது. ஒரு பிராமணரை போல காண்பிக்கப்படுகிறது.

நாவலருக்கு இயற்கையிலேயே முடியில்லையா? என எண்ணத் தோன்றுகிறது. ஏன் ஒரு நிண்ட வடிவம் கூட கிடைக்கப்பெறவில்லை? வாழ்நாள் முழுவதும் இருந்தபடி தான் இருந்தாரா? இல்லைநின்றுகொண்டிருந்தநிலையில்எவரும்காணவில்லையா? இவ்வாறாக தொடரும் கேள்விகளுக்கு பதிலாக காணப்படுவது பிரதிநிதித்துவம் ஆம் ஆறுமுகநாவலரை விக்கிரவியல் படுத்தியவர்கள் ஒவ்வொருவரின் பிரதிநித்துவம் காணப்படுகின்றது. நிர்வாண தீட்சையின் பின்னரான தோற்றம் மூலம் மொட்டை அடிக்கப்பட்ட நாவலர் திரிவுண்டர் வகை விபூதிப் பூச்சு, சைவ பண்பாட்டினை பிரதிபலிப்பதோடு சைவ விதிப்படி ஆண்கள் மேலாடை அணியக்கூடாது எனும் கருத்திற்கேற்ப வேட்டியுடன் உருத்திராட்ச மாலைகளுடன், இந்து பண்பாட்டினை பிரதிநித்துவம் செய்யும் வடிவமாகவே நாவலரின் விக்கிரவியல்; கொண்டுவரப்பட்டது. நாவலரின் விக்ரவியலில் நாவலர் எப்போதும் இருப்பதற்கு காரணம் கைலாசபிள்ளை கூற்றுப்படி சமயம் சார்பான விடயங்கள் இடங்களில் இருந்தும், ஏனைய பௌதீக விடயங்களில் நின்று கொண்டும் சொற்பொழிவு செய்தல் மரபென கூறுகிறார்.

இதனால் விக்கிரவியலை உருவாக்கியவரின் முக்கிய நோக்காகசமயம்என்றஎண்ணக்கருகாணப்பட்டிருக்க வேண்டும். ஆகவே நாவலர் இருந்த நிலையில் விக்ரப் படுத்தி விட்டனர்.

இதன் மூலமாகவே நாவலரின் விக்கிரவியில் நல்லதொரு சமய வாழ்வை பிரதிநிதித்துவம் செய்கிறது. கையில் காணப்படும் நூல் மூலமாக கற்றதொரு சைவ சமயம் உருவாக்கும் முயற்சியாக இருந்திருக்கலாம்.

ஆறுமுக நாவலரின் விக்கிரவியல் என்பது ஆறுமுக நாவலரை பிரதிநிதித்துவம் செய்யவில்லை மாறாக அக்கால பண்பாட்டினையும், உற்பத்தி செய்தவர்கள் கருத்துநிலைக்காண விக்கிர வடிவமாகவும் வாசிக்கலாம். இருபதாம் நூற்றாண்டு ஆரம்பப் பகுதிகளில் உருவாக்கப்பட்ட இந்த நாவலரின் விக்கிரவியல் அருகி சென்று கொண்டிருந்த சைவசமய பண்பாடுகளை எழுச்சியுற செய்யவும் தமிழ் கலாச்சார பழக்கவழக்கங்களை வளர்ச்சி அடையச் செய்யவும் உற்பத்தியாளர்களால் எத்தணிக்கப்பட்டிருக்கலாம்.



இதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட கருப்பொருள் ஆறுமுக நாவலர். இவர் சமய ஈடுபாடுகளில் அதிக கவனம் கொண்டவராகவும் ஓர் உயர்வான நிலையில் காணப்பட்டதாலும்ஆறுமுகநாவலரைமையப்படுத்திய விக்கிரவியலானது அதனை உருப்பெற எத்தணித்தவர்களின்;அனைவரினதும்கருத்துநிலைகளைபிரதிநிதித்துவம் செய்தபடி இன்று காட்சி தருகின்றது.

அடுத்ததாக காண்பியமாக்கப்பட்ட பெண் உடல் ஜோர்ச் கீற்றின் ஓவியங்களில் மரபும் நவீனத்துவமும் எனும் தலைப்பிலானத.சாநாதன்அவர்களின்கட்டுரையினை எடுத்துக்கொண்டால் ஜோர்ச் கீற்றின் ஓவியங்களில் பெண்களின் பிரதிநிதத்துவம் எவ்வாறு காணப்படுகின்றது என்பது தொடர்பான கருத்தாடலாக இக்கட்டுரை காணப்படுகின்றது.

இக்கட்டுரை மூலமாக நான் விளங்கிக் கொண்டதற்கு அமைவாக ஜோர்ச் கீற்றின் ஓவியங்கள் மூலமாக ஓவியத்தில் காட்டப்படும் உருவவியலை வாசிப்பதை விட ஓவியம் மூலமாக ஜோர்ச் கீற்றின் பிரதிநிதித்துவத்தை வாசிப்பதே சிறந்தது ஆகும். அதாவது ஜோர்ச் கீற்றின் ஓவியங்களில் காட்டப்படும் பெண்கள் மூலமாக அவர்கள் காட்டப்படும் விதங்கள் (நிர்வாணம், கவர்ச்சி) மூ... மாகவும் ஜோர்ச் கீற்றின் மனவிம்பம், விருப்பம், காம... இச்சை பெண்கள் மீதான பிரியப்பாடு என்பவற்றை... இவரின் ஓவியங்களைபிரதிநிதித்துவப்படுத்துகின்ற...



மிகுதி அடுத்த வாரம்

# கடலரிப்பு, கடலரிப்பு!

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய கரையோரப் பிரதேசங்களில் தற்சமயம் கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளது.


ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள இக்கடலரிப்பு அனர்த்தம் ஒலுவில், நிந்தவூர், பொத்துவில் அறுகம்பை பிரதேசங்களை வெகுவாகப் பாதித்துள்ளது. ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான மதிற் சுவர்கள், தற்காலிக வேலிகள், நிலப்பரப்புகள் என்பனவும் இக்கடலரிப்பினால் காவு கொள்ளப்பட்டுள்ளன. கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் திணைக்களத்தின் கவனத்திற்கு கடலரிப்பு விடயம் கொண்டு வரப்பட்டுள்ளது.

**கிடைக்குமா நிரந்தரத் தீர்வு?**

■ அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து....






## ஆட்சியாளர்களே!

அம்பாறை கடல் வளப் பாதுகாப்பு ஒன்றியம் ஆட்சியாளர்களை விழித்து அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

"ஆட்சியாளர்களே! திருக்கோவில், அக்கரைப்பற்று, பொத்துவில், பிரதேசங்களில் கனியவளத்தை வெளிநாட்டிற்கு விற்பதை நிறுத்தி, - ஒலுவில், நிந்தவூர், திருக்கோவில், அறுகம்பை கடலரிப்புக்கு உடனடியாகத் தீர்வு வழங்கு!"- என இந்த சுவரொட்டிகளில் வாசகங்கள் காணப்படுகின்றன.

**உரியவர்களின் கவனத்தை ஈர்க்குமா இச்சுவரொட்டிகள்?**

## வேண்டும் முதலமைச்சர்!

"37 உறுப்பினர்களைக் கொண்ட கிழக்கு மாகாண சபையில் 40 வீதமான தமிழர்கள் இம்முறை ஒற்றுமையாக ஒரு சின்னத்தில் போட்டியிட்டு 15 இற்கும் மேற்பட்ட ஆசனங்களைப் பெற்று, முதலமைச்சர் ஒருவர் தமிழராகவும், ஏனைய இரு தமிழ் அமைச்சர்களையும் பெற வாய்ப்புக்கள் உள்ளன."

இவ்வாறு, முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், பத்மநாபா மன்றம் - ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி முக்கியஸ்தருமான இரா. துரைரெத்தினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

"எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் தமிழர்களுக்கெதிராக தமிழர்கள் பலவீனமடையக்கூடியவாறு, மாகாண சபைப் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கு (பொதுத் தேர்தலில் கருணாவை அம்பாறை மாவட்டத்தில் நிறுத்தியது போன்று), தமிழர் முதலமைச்சராக வருவதைத் தடுப்பதற்கும், சதிகள், அரங்கேறவுள்ளன" எனவும் அவர் எச்சரித்துள்ளார்.


**"கோடரிக்காம்புகள் குறித்து கவனம் கொள்வோம்."**




## பொது பட்டமளிப்பு!

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 13ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா கடந்த 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. பல்கலைக்கழக ஒலுவில் வளாக மரநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழா, 5 அமர்வுகளாக இடம்பெற்றதுடன், இதன்போது 1013 பேர் பட்டம் பெற்றதாகவும் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் தெரிவித்தார்.

கொவிட்19 வைரஸ் தொற்று ஆலோசனைகளுக்கு அமைவாக ஒவ்வொரு பீடங்களுக்கும் தனித்தனியாகப் பட்டமளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.



## ஆளுநரின் ஆளுமை!

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், கிழக்கிலுள்ள மாவட்டங்கள் தோறும் நேரில் சென்று மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளைக் கேட்டறிவதுடன் தீர்வுகளையும் வழங்கி வருகின்றார். மாதாந்தம் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பொதுமக்கள் தினங்களை ஒதுக்கி ஆளுநர் மக்கள் சந்திப்புகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை நிந்தவூருக்கு பயணம் மேற்கொண்ட ஆளுநர், அனுராதா யகம்பத், நிந்தவூர் பிரதேச செயலக மண்டபத்தில் பொது மக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார்.

**மக்கள் சேவைக்கான ஆளுமை இது!**

## ஒரு கொடியின் கீழ்!

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழர் தரப்பினர் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் ஒரு கொடியின் கீழ், ஒரே சின்னத்தில் போட்டியிட்டு பிரதிநிதித்துவங்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அன்புக்கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் உதயமான அம்பாறை மாவட்ட தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இந்த முயற்சியில் களமிறங்கியுள்ளது.

தமிழர் தரப்புக் கட்சிகள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் பலர் இந்த முயற்சிக்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

**"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"!**




## பன்னாட்டு கவிஞர்!

நிந்தவூரைச் சேர்ந்த பிரபல இலக்கியப் படைப்பாளியும், கவிஞரும், பன்னூலாசிரியருமான ராஜகவி ஏ.ஸி.றாகில் "பன்னாட்டு கவிஞர்" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட சுதந்திர ஊடக கண்காணிப்பு மையம் இப்பட்டத்தை அவருக்கு வழங்கியுள்ளது.

நிந்தவூர் மீரா நகர் ஆர்.கே. மீடியா பணிமனை மண்டபத்தில் நடைபெற்ற பட்டம் வழங்கும் நிகழ்வில் இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

**பட்டம் சொந்தமானது!**

# தேன்சுவைக்காத தேனீக்கள்



ஆசி கந்தராஜா

பட்டப் பின்படிப்புக்கு புலமைப்பரிசில் பெற்று, நளாயினி யப்பான் வந்து ஆறுமாதமாகிறது. பாஷை இன்னமும் சரியாகப் பிடிபடவில்லை. இதனால் மொழியில் பயிற்சி பெறவென யப்பானியச் சிறார்களுடன் வலிந்து ஒட்டிக்கொள்வாள்.

அன்று பல்கலைக் கழகத்திருந்து நளாயினி வீடு திரும்புகையில் யப்பானியச் சிறுமிகள் இருவர் சாமான் நிரம்பிய பைகளுடன் நடந்து வந்தார்கள். வயது பத்தும் பன்னிரண்டுமாக இருக்கலாம். நிச்சயம் பதினைந்தைத் தாண்டாது. பைகளின் சுமை அவர்களின் முகங்களில் தெரிந்தது.

'நான் உதவட்டுமா...?' என நளாயினி பேச்சை ஆரம்பித்தாள். பெரியவள் பதிலுக்குப் புன்னகைத்தாள். சின்னவளோ நளாயினியை ஏக்கத்துடன் பார்த்தாள்.

'இப்படிக் கொடு நான் தூக்கி வருகிறேன்' என்று சின்னவளின் கையில் இருந்த பைகளை நளாயினி தன் கைகளுக்கு மாற்றிக் கொண்டாள்.

'உன் பெயரென்ன...?'

'கெய்கோ' என்றாள் பெரியவள்.

'என் பெயர் சடகோ' என்றாள் சின்னவள், நளாயினி கேட்காமலே அவளுக்கு நன்றி தெரிவிக்கும் பாவனையில்.

'இந்த வீதியில் உங்கள் வீட்டுக்கு முன்னால்தான் எங்கள் வீடும் இருக்கிறது. உங்களை ஓரிரு நாள்கள் உங்கள் வீட்டின் முன்னே கண்டிருக்கிறேன்' என சம்பாஷணையைத் தொடர்ந்தாள் கெய்கோ.

சாமான் வாங்குவதற்கு வீட்டில் பெரியவர்கள் இல்லையா...?

அவர்கள் மௌனமாக நடந்தார்கள்.

'அம்மா வேலைக்குப் போய்விட்டாளா...?' நளாயினி தொடர்ந்து கேட்டாள்.

அம்மா தொழிற்சாலை விபத்தொன்றில் இறந்து போனாள். அப்பாவுக்கு இன்று இரண்டு நேர 'சிப்ட்' (Shift), வீட்டுக்கு வர நேரமாகும்' என்றாள் பெரியவள் மெலிந்த குரலிலே.

அவளுக்கு மனசும் பையும் கனத்திருக்க வேண்டும். 'நப்கின்' பெட்டியை பையிருந்து எடுத்து தங்கை சடகோவிடம் கொடுத்தாள்.

'நப்கின் யாருக்கு...?' நளாயினி விடாது கேட்டாள். இதை விடுப்பு என்றும் சொல்ல முடியாது. ஏதோ ஒரு உந்துதல்.

'தம்பிக்கு. அவனுக்கு மூன்று வயதாகிறது. இன்னமும் நப்கின் கட்டவேண்டும். ஆனாலும் சுட்டிப்பயல்...' என்றாள் சின்னவள்.

'அது சரி, எங்களைப் பற்றியே கேட்கிறீர்கள், உங்களைப் பற்றி சொல்லவில்லையே? ஆங்கிலம்தான் உங்கள் மொழியா?' என பெரியவள் மீண்டும் உரையாடலில் நுழைந்தாள்.

'அப்படியல்ல, ஆங்கில மொழியை நன்றாகப் பேசுவேன். அதனைத் தாய்மொழி போன்றுதான் கற்றிருக்கிறேன். ஆங்கிலம் கற்றுக் கொள்ள உங்களுக்கு விருப்பமா?' என நளாயினி கேட்டாள்.

'நான் பாடசாலையில் ஆங்கிலமும், பிரெஞ்சும் படிக்கிறேன். எனக்கு இன்று ஆங்கிலத்தில் நிறையவே வீட்டுப்பாடம் இருக்கிறது. வீட்டில் வேலை முடிந்தபின்பு உங்களிடம் வந்தால் உதவுவீர்களா?'

'நிச்சயமாக. அது சரி நீதான் வீட்டு வேலைகளையும் செய்து, உன் தம்பியையும் கவனித்துக் கொள்வாயோ...?'

அப்பா வேலை செய்யும் தொழிற்சாலையில், பிள்ளை பராமரிப்பு நிலையமுண்டு. ஆனால் அங்கு பாரிய இட நெருக்கடி. அதனால் அரை நாள் மாத்திரம் அவன் அங்கு போக அனுமதி. நான் பாடசாலையில் இருந்து திரும்பும்போது அவனை வீட்டுக்குக் கூட்டி வந்து விடுவேன். என்றாள் கெய்கோ பெரிய மனுஷத் தோரணையில். அவர்களது வீடு நெருங்கியது!

'மாலை வீட்டுக்கு வருகிறேன்' என்று கூறி, கெய்கோ தங்கையுடன் விடைபெற்றாள்.

அங்குள்ள வீடுகளில் பெரும்பாலானவை மரப் பலகைகளால் செய்யப்பட்டவை. இடநெருக்கடி காரணமாக எல்லாமே பரப்பளவில் சிறிய வீடுகள். தொடர்மாடிக் குடியிருப்புகளும் அப்படித்தான்.

நளாயினியின் வாடகைக் குடியிருப்பில் ஒரு அறை மாத்திரம்தான். இரவில் அதைப் படுக்கை அறையாகப் பாவிப்பாள். பாயைச் சுருட்டி வைத்துவிட்டால் பகலில் அது வரவேற்பறை. அறையுடன் இணைந்து சிறிய கழிப்பிடம். அறையின் ஒரு பகுதியை சமையல் செய்வதற்குத் தோதாக மூங்கில் கழிகளால் தடுத்திருந்தார்கள். இந்த புறாக்கூட்டுக்கே நளாயினி தன் புலமைப்பரிசில் பணத்தின் பெரும்பகுதியை வாடகையாகச் செலுத்த வேண்டியிருந்தது. யப்பானுக்கு புறப்படும்போது யாரும் இத்தகைய இடர்ப்பாடுகள் பற்றி அவளுக்குச் சொல்லவில்லை. இங்கு படிக்க வாய்ப்புக் கிடைத்தபோது சொர்க்கத்தின் வாயில் திறந்ததாகவே நளாயினி துள்ளினாள். பளபளக்கும் அழகிய கார்களும், நுட்பமான எலெக்ரோனிக் சாமான்களும் வலுவான பொருளாதாரமும்தான் அவள் யப்பானைப் பற்றி அறிந்து வைத்திருந்தவை.

நளாயினியின் வதிவிடம், தொழிலாளர் வாழும் பகுதியில் அமைந்திருந்தது. அங்குள்ளவர்கள் உழைப்புகளுக்கும் கஷ்டங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். இருபதடிக்கு பத்தடி விஸ்தீரணமுள்ள குடியிருப்புகளிலே தொழிலாளர்கள் முணுமுணுப்பின்றி வாழ்ந்தார்கள். குளியல் அறையில்லாத வீடுகள் ஏராளம். அந்தக் குறைபாட்டினைப் பெரிதுபடுத்தாது, இயல்பாக அவர்கள் வாழ்ந்ததுதான் நளாயினிக்கு ஆச்சரியமாக இருந்தது. குடியிருப்பினுள்ளே எடுத்துச் செல்லக்கூடிய பிளாஸ்ரிக் தொட்டிகளில் தண்ணீரை நிரப்பி அதற்குள் குந்தி இருந்து குளித்துக் கொள்வார்கள். சம்பிரதாய முறைப்படி முதலில் வீட்டுத் தலைவனின் முறை. பின்னர் பிள்ளைகள் குளிப்பார்கள். இறுதியில் வீட்டுத் தலைவி, அவர்கள் அனைவரும் குளித்த தண்ணீரில் தன் உடம்பை சுத்தம் செய்து கொள்வாள். தண்ணீரை வீணாக்காத முறைதான் இதுவென்றாலும், இத்தகைய 'காக்காக்' குளிப்புக்கு நளாயினி பழக்கப்பட்டவளல்ல. இதனால் அவள் பெரும்பாலும் பல்கலைக்கழக குளியல் அறையில் ஆசைதீரக் குளித்துக் கொள்வாள்.

மணி பத்தைத் தாண்டிவிட்டது. வழமையாக எட்டு மணிக்குப் படிக்கவரும் கெய்கோ இன்னமும் வரவில்லை. நளாயினி பாயை விரித்துப் படுக்கைக்கு தயாரானாள். முன்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. நளாயினி கதவைத் திறந்தாள். கெய்கோ நின்றாள். மன்னிப்புக் கேட்கும் பாவம் முகத்தில் அப்பியிருந்தது. வீட்டில் அதிக வேலைகள்போலும். படிக்க வரச் சுணங்கி விட்டது. யப்பானியர்கள் கணக்குச் செய்யப் பாவிக்கும் 'Sorban' எனப்படும் மணிகள் கோர்க்கப்பட்ட மரத்தாலான மணிச் சட்டம் புத்தகங்கள் சகிதம் வந்திருந்தாள். யப்பானிய வழக்கப் படி முட்டிபோட்டு குதிகளில் பிட்டத்தை தாங்கி, அறையின் நடுவேயுள்ள குட்டையான மேசையின் முன் அமர்ந்து கொண்டாள்.

கெய்கோ வழமைபோல இன்றும் சிக்கலான கணக்குகள் நிறையவே வைத்திருந்தாள். சூழல்பாடத்திலும் வீட்டு வேலைகள் உண்டு. அத்துடன் தினமும் ஐம்பது புதிய ஆங்கிலச் சொற்களையாவது மனனம் செய்ய வேண்டுமென்ற பழக்கத்தையும் மேற்கொண்டிருந்தாள். அவளது ஆசையெல்லாம் பல்வேறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்று வெளிவிவகார இலாகா ஒன்றில் பணியாற்ற வேண்டுமென்பதே. அதற்கான வெறியும் வேகமும் அவளின் படிப்பில் தெரிந்தது. மணிச்சட்டத்தை பயன்படுத்தி கெய்கோ கணக்குகளைச் செய்யத் துவங்கினாள்.

நளாயினி யப்பான் வந்த புதிதில், யப்பானியர்கள் தேனீக்களைப் போன்று சுறுசுறுப்பாக உழைப்பதும், கலாசார விழுமியங்களுக்கு மதிப்பளித்து வாழ்தலும் மிகவும் பிடித்துப் போயின. இருப்பினும் எலெக்ரோனிக் யுகத்தின் உச்சத்தை அடைந்துள்ள நாட்டில், பலர் கல்குலேற்றர்களை நாடாது இன்னமும் 'Sorban' என்னும் மணிச்சட்டத்தைப் பயன்படுத்துவது நளாயினிக்கு ஆச்சரியம் தந்தது. இதுபற்றி கெய்கோவிடம் கேட்டாள்.

'என்னதான் விதம்விதமான இயந்திரங்களை நாம் உற்பத்தி செய்தாலும் யப்பானிய சமூகம் பழைமை பேணவும் விரும்புகிறது. இதனால்தான் ஆரம்ப பாடசாலைகளில் 'Sorban' பாவித்து கணக்குச் செய்யக், கற்றுத் தருகிறார்கள்' என்றாள் கெய்கோ நாட்டுப்பற்றும் கலாசார ஈடுபாடும் தொனிக்க.

வழமைபோல நாளையும் கெய்கோவுக்கு காலை ஏழுமணிக்குப் பாடசாலை துவங்கும். ஐந்து மணிக்கு எழுந்தால் தான் வீட்டு வேலைகளை முடித்து பாடசாலைக்கு செல்லலாம். இன்றைய வீட்டுப்பாடங்களை முடிக்க நிச்சயம் நள்ளிரவை தாண்டிவிடும். அவளின் சிறிய கண்கள் அசதியினால் மேலும் சிவந்து இருந்தன. சப்பையான தன் முகத்தை பஞ்சு விரல்களினால் அடிக்கடி அழுத்தி 'மஜாஜ்' செய்தவாறே, தான் செய்த கணக்குகளை மீளாய்வு செய்து கொண்டிருந்தாள். கெய்கோவை பார்க்க நளாயினிக்குப் பரிதாபமாக இருந்தது. களைப்பைப் போக்க யப்பானிய பச்சை தேநீர் தயாரித்து வந்து அவள் முன் அமர்ந்து கொண்டாள். கெய்கோவின் வீட்டுப்பாடம் அவளது வயதுக்கும் தரத்துக்கும் அதிகமானதாகவே நளாயினிக்குத் தோன்றியது. யப்பானிய கல்வித்திட்டம் மிகத் தரமானவர்களை வடித்தெடுக்கும் வகையில் கடினமாக்கப் பட்டிருப்பதையும் அவள் அறிவாள்.

'வீட்டுப்பாடத்தை முழுதாக முடிக்காமல், நாளை வகுப்புக்கு போனால் என்ன நடக்கும்..? என நளாயினி யப்பானிய பாடசாலைகளின் நடைமுறைகள் பற்றி அறியும் ஆவலில் கேட்டாள்.

'முடிக்காமல் போவதா...? உங்கள் நாட்டில் நீங்கள் அப்படியும் செய்வதுண்டா? என விசித்திரமாக நளாயினியைப் பார்த்து கேள்விகளைத் தொடுத்தவள், நேரத்தை வீணாக்காது தேநீரை அருந்தியவண்ணம் ஆங்கிலச் சொற்களை மனனம் செய்ய ஆரம்பித்தாள்.

கெய்கோ எதிர்பார்த்திருந்த போட்டிப் பரீட்சையும் நெருங்கியது. யப்பானிய ஆரம்ப பாடசாலைகளின் இறுதி ஆண்டில் இத்தகைய போட்டிப் பரீட்சைகள் மூலம் தான், மாணாக்கரை தரம்பிரிப்பார்கள். எல்லோரும் விரும்பியபடி பல்கலைக் கழகத்துக்கோ தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கோ செல்வது அங்கு இயலாத காரியம். இவர்களின் தலைவிதி இவ்வாறு ஆரம்ப பாடசாலைகளிலேயே தீர்மானிக்கப்படுவது முறைதானா என்ற கேள்வி, வந்த நாள் முதல் நளாயினியின் மூளையை குடையும் விடையங்களில் முதன்மையாக இருந்து வருகிறது. இது குறித்து பல்கலைக்கழக அதிகார வட்டத்தினரிடமும் பேசியிருக்கிறாள். இருப்பினும் இதுபற்றிய நேர்மையானதும் தெளிவானதுமான விளக்கங்களை எவராலும் தர முடியவில்லை.

பரீட்சையை எதிர்நோக்கி கெய்கோ நித்திரையையும் மறந்து தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தாள். பாடங்களில் விளக்கம் கேட்க நளாயினியின் வீட்டுக்கும் அடிக்கடி வந்து போனாள். இதனால் இவர்களிடையே உள்ள நட்பு மேலும் கனிந்தது.

யப்பானியச் சிறார்களில் அதிகமானோர் பரீட்சைக் காலங்களில் ஒருவகை மன அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டிருப்பர். பரீட்சை பற்றிய பயம் இயல்பாகவே கெய்கோவையும் பீடித்திருந்தது. இதனால் அவள் பரீட்சையில் வெற்றி பெற வேண்டுமென, நளாயினி தான் வணங்கும் இந்துக் கடவுளிடம் வேண்டிக்கொண்டாள்.

பரிட்சை முடிந்தது! செய்த உதவிக்கு நன்றி தெரிவித்து கெய்கோ தான் தனது கைபடத் தயாரித்த அழகான வாழ்த்து மடல் ஒன்றை, தங்கை சடகோவிடம் கொடுத்தனுப்பியிருந்தாள். மன அழுத்தங்களில் இருந்து விடுபட அவளுக்கு ஓய்வுதேவை என்ற எண்ணத்தில் நளாயினியும் அவளது வீட்டுக்குப் போய்த் தொந்தரவு செய்ய விரும்பவில்லை.

அன்று மாலை பல்கலைக்கழகம் போகவென நளாயினி வீதியில் இறங்கினாள். கெய்கோ வீட்டுவாசலில் அயலவர்கள் கூடி நிற்பது தெரிந்தது.

கெய்கோ போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்று விட்டாளோ...?

அறியும் ஆவலில் 'கெய்கோ எங்கே...?' என வாசல் நின்ற கெய்கோவின் தந்தை கமாடாவிடம் கேட்டாள். கமாடா எதுவும் பேசாது தலையைக் குனிந்து கொண்டார். கெய்கோவின் தம்பியை தன்மடியில் வைத்திருந்த கிமோனா அணிந்த யப்பானிய பெண் ஒருத்தி, நளாயினியை தனியாக அழைத்துச் சென்று விஷயத்தைச் சொன்னாள்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# நேரம் தவறாமை உயர்வு தரும்

செ. முருகேசு





சொன்ன நேரத்தில் வேலையை முடித்துக் கொடுப்பது, ஒப்புக் கொண்ட நேரத்தை மதிப்பது... இவையெல்லாம் உங்கள் மீதான நம்பிக் கையை அதிகரிக்கும்.

கடலின் அலையும், நகரும் நேரமும் எவருக்காகவும் காத்திருப்பதில்லை என்பார்கள். எவரிடமும் வாங்க முடியாத, எவருக்கும் கொடுக்க முடியாத ஓர் உன்னத பொருள் 'நேரம்'.

உங்கள் கடிகாரத்தைக் சிறிது நேரம் உற்றுப் பாருங் கள். எவ்வளவு நேர்த்தியாக வினாடிகள், நிமிடங்கள், மணிகள் என ஓடிக் கொண்டே இருக்கின்றது. காலை யில் வேகமாகவும், மதியம் சோர்வாகவும், மாலையில் தூங்கியபடியும் அது ஓடுவதில்லை. ஆனால் நாங்கள் எங்களுடைய மனநிலைக்கு ஏற்ப, 'நேரம் வேகமாகப் போகிறதே', 'நேரம் போகவே இல்லை' என காலத்தைக் குறை சொல்லுகின்றோம்.

ஒன்பது மணிக்குத் தொடங்கும் அலுவலகத்துக்கு எத் தனை பேர் சரியான நேரத்தில் வருகிறார்கள்? ஒன்பது மணிக்கு நடைபெறும் கலந்துரையாடலுக்கு எத்தனை பேர் தாமதமின்றி வந்து சேர்கிறார்கள்? 'பத்து நிமிடம் தாமதமாகப் போனால் ஒன்றும் ஆகாது' என்பதுதான் பலருடைய மனநிலை?

'மூன்று மணி நேரம் சீக்கிரமாகச் செல்வது, ஒரு நிமி டம் தாமதமாகப் போவதை விட மிகச் சிறந்தது' என்கி றார் ஷேக்ஸ்பியர். நேரம் தவறாமையை அவர் எந்த அளவுக்கு மதித்தார் என்பதற்கு இந்த ஒரு வரியே உதாரணம்.

'பங்சுவாலிற்றி' என்பது ஏதோ அலுவலக வேலைக்கு மட்டுமானதல்ல. குடும்பத்திலும், சமூகத்திலும் தினம் தினம் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒரு செயல் தான் அது. சரியான நேரத்துக்கு ஒரு மாத்திரை சாப்பிடுவது கூட இதன் ஒரு அங்கம்தான்.

நேரம் தவறாமை ஒரு சின்ன விடயம் போலத் தோற் றமளித்தாலும், பாறையைப் பிளக்கும் உளி போன்ற வலிமை அதற்குண்டு. நேரம் தவறாமல் இருக்கும் நபரை மற்றவர்கள் அதிகமாக மதிப்பார்கள். தனது வாழ்க்கையைச் சரிவர வாழத் தெரிந்தவரே நேரம் தவறாமையைக் கடைபிடிப்பார். அவர் நேர மேலாண் மையில் அதி அக்கறை கொண்டவர் என நிர்வாகம் அவரைக் கண்ணியத்துடன் கவனிக்கும்.

பிறரை நீங்கள் மதிக்கிறீர்கள் என்பதன் முதல் அடை யாளம் நேரம் தவறாமை. ஒரு சந்திப்புக்காகவோ, வேலைக்காகவோ சரியான நேரத்தில் நீங்கள் கலந்து கொள்கிறீர்களானால் எனில் சந்திப்பில் கலந்து கொள் ளும் அனைவரையும் நீங்கள் மதிக்கிறீர்கள் என்பது அதன் வெளிப்படையான பொருள்.

உங்களுக்காக எவரும் காத்திருப்பதும் நல்லதல்ல, எவருடைய நேரத்தையும் நீங்கள் வீணடிப்பதும் நல் லதல்ல. காலம் தவறாமை சொல்லும் இன்னொரு விடயம், 'நீங்கள் அந்தச் சந்திப்பை முக்கியத்துவம் வாய்ந்தது' என்று நினைக்கின்றீர்கள் என்பதுதான்.

நேரம் தவறாமல் சரியான நேரத்தில் வரும் நபரொருவர் எப்போதுமே திறமைசாலியாகவும், தன்னம்பிக்கை உள் ளவராகவும் இருப்பார். அவருக்கு பெரிய பொறுப்புகள் வந்து சேரும்.

காலம் தவறாமை உங்களை நம்பிக்கைக்குரிய நபராக அடையாளம் காட்டும். சொன்ன நேரத்தில் வருவது, சொன்ன நேரத்தில் வேலையை முடித்துக் கொடுப்பது, ஒப்புக் கொண்ட நேரத்தை மதிப்பது... இவையெல்லாம் உங்கள் மீதான நம்பிக் கையை அதிகரிக்கும்.

'டயானா டிலோன்சர்' எனும் எழுத்தாளர் 'நெவர் பி லேட் எகெய்ன்' எனும் நூலை எழுதினார். இந்த நூலில் அவர் குறிப்பிட்டுள்ள கருத்து மிக்க சுவாரசியமானது. 'நேரம் தவறாமையை பின்பற்றாத மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் எல்லா விடயங்களிலும் தாமதத்தையே தொடர் கிறார்கள். நல்லதோ கெட்டதோ, எங்குமே அவர்களால் சரியான நேரத்தில் இருக்கவே முடிவதில்லை' என்கிறார் அவர்.

தாமதமாய் வருவது தவறு, அந்தப் பழக்கத்தை மாற்ற வேண்டும் எனும் சிந்தனை உங்கள் மனதில் முளைக்க வேண்டியது முதல் தேவை. அப்போதுதான் உங்களு டைய நாளாந்த நடவடிக்கைகளை நீங்களே கொஞ்சம் ஆராய்வீர்கள். காலையில் ஏன் தினமும் தாமதமாகி றது? கொஞ்சம் சீக்கிரமாக எழுந்தால் என்ன? போன்ற சிந்தனைகள் உங்களிடம் அப்போதுதான் எழும்.

'சரியான நேரத்தில் கலந்துகொள்ள வேண்டும்' என எப்போதுமே நினைக்காதீர்கள். பத்து நிமிடம் முன்ன தாக இருக்க வேண்டும் என்று நினையுங்கள். அப் போது தான் சரியான நேரத்திலாவது உங்களால் குறித்த இடத்தில் இருக்க முடியும்.

நேரம் தவறாமை எமது திட்டமிடுதலைச் சார்ந்தே இருக் கிறது. உதாரணமாக, இரண்டு மணி நேரத்தில் செய்ய வேண்டிய வேலைகளுக்கு ஒரு மணிநேரத்தை ஒதுக் காதீர்கள். முடிக்க முடியாத அளவுக்கு நெருக்கமான கால இடைவெளிகளில் நிகழ்வுகளை வைத்துக் கொள் ளாதீர்கள். அது எப்போதுமே உங்களைச் சிக்கலில் தள்ளி விடும்.

பலருக்கும் உள்ள மிகப்பெரிய கெட்ட பழக்கம் கடைசி நிமிடத்தில் ஏதாவது ஒரு வேலையைச் செய்யத் தொடங் குவது. திடீரென ஒருமுறை மின்னஞ்சலைப் பார்த்து விடுவோம், ஒரு நபருக்கு 'போன்' செய்து முடித்து விடு வோம் என கடைசி நிமிட பரபரப்பை உருவாக்குவார்கள். உங்களைத் தாமதப்படுத்தும் மிக முக்கியக் காரணியே இந்தக் கடைசி நிமிட திடீர் வேலைதான் என்பதைக் கவ னத்தில் கொள்ளுங்கள்.

முக்கியமான ஒரு நிகழ்வுக்கு முன்னும் பின்னும் முக்கி யமற்ற செயல்களைத் திட்டமிடுங்கள். அப்போதுதான் முக்கியமான நிகழ்வை எந்தவித பதட்டமும் இல்லாமல் முடிக்க முடியும்.

எதிர்பாராத வேலைகளுக்காக என்று கொஞ்சம் நேரத்தை எப்போதுமே ஒதுக்கி வைத்திருங்கள். போகும் வழியில் போக்குவரத்து நெரிசல் இருக்கலாம், டயர் பஞ்சராகலாம், எதிர்பாராத ஓர் அழைப்பு வரலாம், இப் படி எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து கொஞ்சம் 'கூடுதல்' நேரத்தை ஒதுக்கி வையுங்கள்.

தற்போதைய தொழில் நுட்பம் உங்களுக்கு ஏகப்பட்ட வசதிகளைச் செய்து தருகிறது. தொலைபேசி அலா ரம், ரிமைண்டர்கள், கணினி மென்பொருள்கள் மூலம் பணிகளை திட்டமிடும் வசதி போன்ற இவற்றில் எதை வேண்டுமானாலும் பயன்படுத்தி உங்கள் நேரத்தைத் திட்டமிடலாம். அதே போல வீட்டில் எல்லா அறைகளி லும் ஒவ்வொரு கடிகாரம் இருக்கும்படி பார்த்துக் கொண் டால் உங்களுக்கு அது நன்றாகவே உதவும்.

சீக்கிரமே போய்விட்டால் என்ன செய்வது என்ற எண் ணம் பல வேளைகளில் தாமதத்தை உருவாக்கிவிடும். அந்தக் காத்திருப்பு நேரங்களில் என்ன செய்யலாம் என யோசித்து வையுங்கள். ஒரு புத்தகம் படிப்பது கூட உங்களை உற்சாகம் அடையச்செய்யும்.

தாமதமாய் வருவது பெரிய நபர்களுக்கே உரிய தகுதி என்றோ, தாமதமாய் வந்தால் நீங்கள் பெரிய நபராகப் பார்க்கப்படுவீர்கள் என்றோ தயவு செய்து நினைத்து விடாதீர்கள். உண்மையில், நேரம் தவறாமைதான் உங் களை தலைமைப் பண்பு உடையவராகச் சித்தரிக்கும். பல வாய்ப்புகளின் கதவுகளையும் அது சத்தமில்லாமல் திறந்து வைக்கும்.

சிலவேளைகளில் தாமதம் தவிர்க்க இயலாததாகி விடும். அந்த நேரத்தில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தகவல் தெரிவித்து விடுங்கள். தாமதமாய் நுழையும் போது, மன்னிப்புக் கேட்கவும் மறக்க வேண்டாம். ஒரு வேளை கலந்து கொள்ளவே முடியாத சூழல் ஏற்பட்டு விட்டது என்றால் 'மன்னிக்கவும்' என முன்னரே மறுத்து விடுதல் நல்லது.

சிலருடைய தாமதத்துக்கான காரணங்கள் சிறுபிள் ளைத் தனமானவை. உங்கள் மீதான மதிப்பைக் குறைக்கும் காரணிகள் என்பதை நினைவில் கொள் ளுங்கள்.

சின்ன வயதிலிருந்தே குழந்தைகளுக்கு நேரம் தவறா மையைக் கற்றுக் கொடுங்கள். குழந்தைகள் பெற்றோ ரைப் பார்த்துத்தான் எதையும் கற்றுக் கொள்வார்கள். சரியான நேரத்துக்குத் தூங்குவது, சாப்பிடுவது, படிப்பது என எல்லாவற்றையுமே பெற்றோரைப் பின்பற்றியே பிள்ளைகள் நடப்பார்கள். நீங்களே குழந்தையைப் பள்ளிக்கூடத்துக்கு தாமதமாய் கொண்டு விட்டீர்கள் என் றால் குழந்தையும் அதையேதான் கற்றுக் கொள்ளும் என்பதை மறக்காதீர்கள்!

கடைசியாக, நேரம் தவறாமையை நீங்கள் பழக்கப்ப டுத்திக் கொண்டால், தேவையற்ற பல மன அழுத்தங்க ளையும், மன உளைச்சல்களையும் நீங்கள் வென்று விடலாம். சொன்ன வாக்கைக் காப்பாற்றி விட்டோம் எனும் ஆழ்மன நிம்மதியும், மகிழ்வும் உங்களை உற் சாகமாகச் செயல்பட வைக்கும்.

**காலம் தவறா ஆச்சரியம்**
**வெற்றிக் கிளையில் பூச்சொரியும்!.**

---

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

'பரீட்சையில் தோல்வியுற்றதால் கெய்கோ, இரவு தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டாளாம். அவளின் உடலை அவளது தந்தை பணிபுரியும் தொழிற்சாலை நிர்வாகம் வழமைபோல அப்புறப்ப டுத்தி விட்டதாம். அவர்களே அனைத்துச் செலவுகளை யும் பொறுப்பேற்றுச் செய்வார்களாம். இன்று மாலை சவஅடக்கம் நடைபெறும்' என சகல விபரங்களையும் சொன்னாள்.

நளாயினிக்கு வாய்விட்டு அழவேண்டும் போல் இருந் தது. அடக்கிக் கொண்டாள். சிறிது நேர மௌனத்தின் பின் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு 'தங்கை சடகோ எங்கே...?' எனக் கேட்டாள்.

'பாடசாலைக்குச் சென்று விட்டாள்', என வெகு இயல் பாகவே அந்த யப்பானிய பெண்மணி பதிலளித்தாள். கெய்கோவின் முகத்தை ஒரு தடவை பார்க்க வேண்டும் போல் இருந்தது. எங்கே அவளது இறுதிச்சடங்கென தந்தை கமாடாவிடம் கேட்டாள்.

'தொழிற்சாலைக்கு அருகிலுள்ள சவச் சாலையிலே, இன்று இரண்டாவது சிப்ட் (Shift) முடிந்தவுடன் நடைபெ றும். வேலை முடிந்தவுடன் மாலை ஆறுமணிக்கு நான் சவ அடக்கத்துக்கு வந்து விடுவேன். நீங்களும் அங்கு வாருங்கள்' என்றார் கமாடா கண்களில் நீர் ததும்ப.

வழமைபோல இன்று மாலை சவ அடக்கத்தின் பின் னர், கெய்கோவின் பெயரும், இம்மாத தற்கொலைப் பட்டியலில் பத்தோடு பதினொன்றாக பதிவு செய்யப்ப டும். மறுகணம் யப்பானின் அதிநவீன இணையத்தில், உயிர் ஒன்று புள்ளி விபரக் கணக்காகி விடும்.

# திலீபனை நினைவுகூருவதற்கு நீதிமன்று ரவிகரனுக்கும் தடை

முல்லைத்தீவு, செப்.20

**வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் அவர் சார்ந்த குழுவினர் இம்முறை 18.09.2020 தொடக்கம் 26.09.2020 வரையான காலப்பகுதியில், தியாகதீபம் திலீபனுடைய நினைவேந்தலையோ, உண்ணாவிரத நிகழ்வுகளையோ முன்னெடுக்கமுடியாது என முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் தடைக்கட்டளை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.**

முல்லைத்தீவு தலைமைப் பொலிஸ் பரிசோதகரால் இதுவிடயம் தொடர்பில், முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு அமைய நீதிமன்றம் இந்த தடைக்கட்டளை பிறப்பித்துள்ளது. நேற்று முன்தினம் ரவிகரனுடைய வீட்டுக்குச் சென்ற முல்லைத்தீவு தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நீதிமன்றத்தின் குறித்த தடைக்கட்டளை உத்தரவை அவரிடம் கையளித்தார்.

தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினராக இருந்த திலீபன் எனப்படும் இராசையா பார்த்தீபன் என்பவரை நினைவுகூரும் முகமாக துரைராசா ரவிகரன் ஆகிய உங்களால் உண்ணாவிரத நினைவு வைபவத்தையும், ஒன்றுகூடல் கூட்டத்தையும், 18.09.2020 தொடக்கம் 26.09.2020ஆம் திகதி வரையான காலப் பகுதியில் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்டு நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அரசால் தடைசெய்யப்பட்ட அமைப்புத் தொடர்பில் பெயர் குறிப்பிடப்பட்ட நீவீர் எவ்விதமான உண்ணாவிரத நிகழ்வுகளையோ, நினைவேந்தல் கூட்டங்களையோ, வேறு ஏதேனும் வைபவங்களையோ 18.09.2020 தொடக்கம் 26.09.2020 வரையான காலப்பகுதியில் நடத்துவதற்கு 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் 106(1) (3) பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் தடை செய்து கட்டளையாக்குகின்றேன். என்று அந்த நீதிமன்றத் தடைக் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ப-246,19)

# போதையை ஒழிப்பதற்கு மற்றுமொரு பிரேரணை

*சாவ. சபையில் கொண்டுவரப்பட்டது*

கொடிகாமம், செப். 20

சாவகச்சேரி பிரதேசத்துக்குட்பட்டு இடம்பெறும், போதைப் பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பிரதேச சபை அமர்வில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட பிரேரணையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மற்றுமொரு பிரேரணை சபையில் கொண்டுவரப்பட்டது.

கடந்த வருடம் சாவகச்சேரி பிரதேசசபை அமர்வொன்றின் போது, போதைப் பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே இதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்து, நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை அமர்வில் மற்றுமொரு பிரேரணை சபைக்குக் கொண்டுவரப்பட்டது. சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் அந்தப்பிரேரணையைக் கொண்டுவந்தார்.

எமது பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் காணப்படும் பாடசாலைகள், பதிவு செய்யப்பட்ட மத அனுஷ்டான இடங்கள், அரச வைத்தியசாலைகள், பஸ் நிலையங்கள், சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற இடங்களில் இருந்து 500 மீற்றர் வரையிலான தூரத்தில் உள்ள விற்பனை நிலையங்களில் சிகரெட், பீடி, சுருட்டு உட்பட ஏனைய எந்தவிதமான புகையிலைசார் உற்பத்தி மற்றும் இலங்கை அரசினால் போதைப் பொருள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள எந்த விதமானபோதைப் பொருள்கள் மற்றும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்துதல், ஏதேனும் விளம்பரங்கள், பரிசுப் பொருள்கள், சான்றிதழ்கள் காட்சிப்படுத்துதல் தடைசெய்யப்பட வேண்டும் என்ற தீர்மானம் கடந்த வருடம் சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அது இன்னும் ஒழுங்குமுறைக்கு வரவில்லை. என்வே குழு ஒன்றை நியமித்து கள ஆய்வு ஒன்றை மேற்கொண்டு சட்டத்தை மீறும் நபர்கள், மீறுதலுக்குத் துணையாக இருக்கும் நபர்களின் வியாபார நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ப-159)

# மீள் சுழற்சிக்கான குப்பைகள் தேக்கம்

சாவகச்சேரி,செப்.20

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொடிகாமம் கட்டைபறித்தான் மயானத்துக்கு அருகாமையில், மீள் சுழற்சிக்கு வழங்கவென சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருள்கள் நீண்ட காலமாகக் குவிக்கப்பட்டுள்ளன.

அவற்றை பறவைகளும், கால்நடைகளும் கிளறி, சூழலை அசிங்கப்படுத்தியுள்ளன.

மழை காலம் ஆரம்பித்தால், கழிவுப்பொருள்கள் வெள்ளத்தில் தேங்கும். இதனால் டெங்கு போன்ற நோய்கள் அயற்கிராமங்களைத் தாக்கும். எனவே அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கு-9,159)





யா/பண்ணாகம் வடக்கு அ. மி. த. க. பாடசாலையின் மாணவத் தலைவர்கள் மற்றும் வகுப்பு முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பாடசாலை அதிபரின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் ஸ்ரீபன் றெக்ஸ் கலந்து சிறப்பித்தார். (ப)

# இயற்கைச் சமநிலையை பேணுவதற்கு மர நடுகை

*சாவ. பிரதேச சபை உறுப்பினர்கள் திட்டம்*

கொடிகாமம், செப். 20

சாவகச்சேரி பிரதேச சபையின் 31 உறுப்பினர்களும் தங்களது ஞாபகார்த்தமாக பிரதேச சபைக்கு முன்னால் ஏ9 வீதியின் இருமருங்கிலும் நிழல்தரு மரக்கன்றுளை நடுகை செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை அமர்வின்போது உறுப்பினர்கள் ஏகமனதாக இவ்வாறு தீர்மானித்தனர். இயற்கைச் சமநிலையைப் பேணும் நோக்கில் ஒவ்வொரு உறுப்பினரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற விழாவின்போது, ஏ-9 வீதியின் இரு மருங்கிலும், ஒவ்வொரு மரங்களை நடவுள்ளனர். அவ்வாறு நடும் மரங்களை அவர்களே பராமரிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப-159)

# அபிவிருத்திக்கு தயாராகும் பளை மருத்துவமனை

*ரூ. 80 மில்லியன் ஒதுக்கீடு*

பளை மருத்துவமனைக்கு 80 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ். சரவணபவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பளை மருத்துவமனையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொண்டு, பௌதீகவியல் வளங்களை உருவாக்கி, மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்கத் தயாரான நிலையில் உள்ளோம். கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணியகத்துக்கு சுகாதார அமைச்சால் வழங்கப்படும் நிதியை பூநகரி, கிளிநொச்சி, கண்டாவளை, பளை போன்ற பிரதேசங்களில் உள்ள மருத்துவமனைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். அந்த வகையில் அண்மையில் கிடைத்த நிதியில் பளைப் பிரதேச மருத்துவமனையில் அவசியமான அபிவிருத்தி வேலைத்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம். நிதியின் அளவுக்கேற்ற வகையில் மருத்துவ விடுதி , தாதியர் வதிவிடம் மற்றும் சமையலறை போன்றவற்றை அமைக்கவுள்ளோம். இதேவேளை மருத்துவமனையில் மேலும் மருத்துவர் வதிவிடம், பிரேத அறை உள்ளிட்ட தேவைகள் காணப்படுகின்றமையால் அடுத்த வருடம் கிடைக்கும் நிதியில் அவற்றை மேற்கொண்டு ஏ 9 வீதியுடன் இணைந்துள்ள பளை மருத்துவமனையில் மேலும் வசதிகளை ஏற்படுத்தி மக்களுக்குச் சேவைகளை ஆற்றவுள்ளோம் - என்றார். (ப-9)

# வெடிபொருள்கள் திருட்டு; கிளாலியில் இருவர் கைது

கிளிநொச்சி, செப். 20

கண்ணிவெடி அகற்றப் படாத பகுதிக்குள் சென்று வெடிபொருள்களைத் திருடினர் என இருவர் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலிப் பகுதியிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பளை பொலிஸாரின் புலனாய்வுப் பிரிவினர் அவர்களைக் கைதுசெய்தனர். கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் வசித்து வரும் ஒருவரும், கண்டி வீதி அரியாலை எனும் முகவரியில் வசித்து வரும் மற்றுமொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ப-6)



## மணமகள் தேவை

யாழ் .இந்து கௌரவ 1991 இல்
பிறந்த அரச தொழில் புரியும்
மணமகனுக்கு மணமகள் தேவை.

**077 794 3406**

## அறை வாடகைக்குண்டு

செட்டித்தெரு, நல்லூர் கோயிலுக்கு
அருகில் சகல வசதிகளுடன் கூடிய
அறை வாடகைக்குண்டு.

**077 6218 505, 021 222 4691**

## காணி தேவை

வியாபாரக்கட்டடம் அல்லது
வெற்றுக்காணி 1 முதல் 1.5
LACHAMS, 40 அடி வீதி முகப்புடன்
பெரிய கடைப்பகுதியில் அல்லது
**K.K.S** வீதியில் தேவை.

**077 629 3710**

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஓட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்ஸா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## தெஹிவளையில் வீடு வாடகைக்குண்டு

**Dehiwala Initiom Road** இல் **Galle Road** இல் இருந்து 1 நிமிட நடைத் தூரத்தில் 1 ஆம் மாடியில் **3 Bedroom (2 Bedroom with A/c) 2 Bathroom , one Parking** வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு தமிழ் இந்து குடும்பத்தினர் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை. இன்று ஞாயிற்றுகிழமையில் பார்வையிடலாம் வாடகை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**077 888 8314**

## ஆட்டோமேட்டிக் கார் உடனடியாக தேவை

1. வஜிர ஹவுஸ் யாழ்ப்பாண கிளையில் (நல்லூர் கச்சேரி வீதி) வேலைபார்க்கும் எமது பொறியியலாளர் ஒருவருக்கு (ஆட்டோமேட்டிக் கார்) வாகனம் உடனடியாக தேவை
2. சிறிய ஆட்டோமேட்டிக் கார் (சிறய வேன்,வேகன் ஆர் கார்) ஒன்று தேவை
3. மாத வாடகை 45,000 ஒரு வருடத்திற்கு 6 இலட்சம் மூன்று வருடத்திற்கு 40 இலட்சம்
4. நாங்கள் நல்ல நிலையில் கவனித்துக்கொள்ளுவோம்






தமிழ் பேசும் முகவர் யாழ்பாணம் மட்டக்களப்பு
சப்திக்கா டிஷனோ

தொடர்புக்ளுக்கு உடனே அழையுங்கவள்

**070 4312356**

யாழ்ப்பாண கிளை
54/11,கற்பக பிள்ளையார் கோவில் கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம்

1916 ம் ஆண்டு தொடக்கம், 104 வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையினர்

**வஜிர ஹவுஸ்**

தலைமை அலுவலகம்:23, டீல் பிளேஸ் A , கொள்ளுபிட்டி

## விற்பனைக்கு

NP,QD - 6 X X 7- வாகன இலக்கம் சிவப்பு நிறமுள்ள ஆட்டோ விற்பனைக்குண்டு. லீசிங்கில் வாங்குவோர் விரும்பத்தக்கது.

**076 449 9590, 075 653 3415**

## Homework help

**உயர்தரம் கணிதப்பிரிவில் (English medium)இல் கல்வி கற்கும் மாணவனுக்கு கற்ப்பிக்க உயர்தரத்தில் நல்ல சித்தியடைந்த / பல்கலைக்கழக மாணவர்களை எதிர்பார்கின்றோம்**

**077 810 3798 / 077 871 5430**

## காணி தேவை

எழுதுமட்டுவாழ்,முகமாலை,பளை,
இயக்கச்சி,பூநகரி ஆகிய இடங்களில்
தென்னை பயிரிடுவதற்கு
உகந்த காணி தேவை.

**077 239 2626**

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

### கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்.**

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## நாகபூஷணி திருமண சேவை

பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்
**(மணமகள்களுக்கு மட்டும்)**
(19.09.2020 இலிருந்து 21.09.2020 வரை)
நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப்பொருத்தமாக உடன் தரப்படும்.

**021 222 9306, 077 138 7596**

இல, 5, ஐந்தாம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(பேபி ஸ்ருடியோவுக்கு பக்கத்து லேன்)

**7 நாட்களும் திறந்திருக்கும்.**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட
**தேங்காய் எண்ணை** உற்பத்தி ஆலைக்கு

- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா
- மட்டக்களப்பு
- முல்லைத்தீவு
- திருகோணமலை

போன்ற பிரதேசங்களில் இருந்து விற்பனை விநியோகஸ்தர்கள் தேவை

**0771712336, 0762556333**

## கொம்பியூட்டர் சோரும் தேவை

சுண்டுக்குளி யாழ். கச்சேரி பிரதான பாதை அருகில் கொம்பியூட்டர் சோரூம் 1000 சதுரஅடி அல்லது றோட் அருகில் சோரூமாக பாவிக்ககூடிய வீடு தேவை.

godwin.ozee@gmail.com

**077 222 0912, 077 222 1537**

## வேலையாள் தேவை

**செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு ஆண்,பெண்**
இரு வேலையாள்களும் தேவை.

**077 937 0000**

## வாடகைக்கு

கோணாவளை கொக்குவில் கிழக்கு, 1ஆம் ஒழுங்கை கருவப்புலம் ஒழுங்கையில் ஒரு படுக்கை அறை, சமையலறை, ஒரு சாப்பாட்டு அறை, ஒரு விசிற்ரேஸ் அறை, தனிப்பட்ட குளியலறை தண்ணீர் தொட்டி கழிவு அறையும் அமைந்த வீடு வாடகைக்கு உடன் உண்டு

வாடகை-15000/=

**077 732 8370**

## வேலைவாய்ப்பு

**யாழ் சுண்டிக்குழி,அல்லைப்பிட்டி** போன்ற
இடங்களில் Hotel களை நடத்திய
Treatooo Hotel நிறுவனம்
**மட்டக்களப்பிலும் நுவரெலியாவிலும்**
நான்கு கிளைகளுடன்
இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.
Chef / Cook Asst Cook
Room Boys Helper போன்ற
வெற்றிடங்கள் உள்ளதால்
தகுதியுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
உணவு தங்குமிடவசதிகள்
Free யாக தரப்படும்.
Hotel அனுபவங்களை படிக்க
விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**077 992 4599, 077 350 3826, 077 992 5540**

## வல்வை ஆண்கள், பெண்கள் முதியோர் இல்லம்

**ஊரிக்காடு வல்வெட்டித்துறையில்**
**ஆண்கள் முதியோர் இல்லம்,**
**பெண்கள் முதியோர் இல்லம்**
ஆகியன தனித்தனியாக கடந்த சில ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. கொரோனாவிற்கு முதல் தொடர்பு கொண்டவர்களும் தற்போது இணைந்து கொள்ளலாம். நியாயமான மாதக் கொடுப்பனவு செலுத்தி இந்த இல்லத்தில் இணைய விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.

**021 226 5551, 077 154 2067, 077 810 6857**
**ஊரிக்காடு வல்வெட்டித்துறை.**

## கட்டடம் தேவை (அவசரத்தேவை)

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் ஹோட்டல் முகாமைத்துவ கற்கையில் முதன்மை வாய்ந்த இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின்(SLITHM) யாழ் நகரக்கிளைக்கான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள பின்வரும் வசதிகளுடன் கூடிய கட்டடம் ஒன்று யாழ் நகர எல்லைக்குள் வாடகைக்கு தேவைப்படுகின்றது.

- 25அல்லது30 மாணவர்களை உள்ளடக்கக்கூடிய 03/04குளிரூட்டி வகுப்பறைகள்
- வீடு பராமரிப்பு (House Keeping)கற்கையின் செயன்முறைக்கற்கையை(Pratical)மேற்கொள்ள பொருத்தமான வசதிகளுடன் கூடிய அறை ஒன்று.
- சமையலறைக்கற்கை மற்றும் உணவு பான பரிமாற்றக் கற்கை நெறிகளின் செயன்முறைக்கற்கையை (Pratical)மேற்கொள்ளப்பொருத்தமான சமையலறை(Kitchen)வசதிகள் மற்றும் உணவக வசதிகள்(Restaurant)
- ஒரு அலுவலக அறை
- வசதிகளுடன் கூடிய 2 மலசலகூடங்கள்

- விருந்தினர் இல்லம் (Guest House)அல்லது சிறிய விடுதிகள் முழுதாக வாடகைக்கு விடப்படும் எனின் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்
- மேலதிக வசதிகளுடன் யாழ்நகர எல்லைக்குள் (Town Area) கட்டடம் கிடைக்கபெறுமாயின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு - 077 595 6119
**11/10/2020 முன் கேள்வி மனுக்கோரலை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்**

**திருமதி நிரஞ்சலா அலைக்ஸ்**
**SLITHM**
**இல.450.பிரதான வீதி**
**சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்.**


# Canada VISA

**நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்**

**STUDENT VISA** Study, Work & Settle
- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.



**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்
**10 வருட கால நம்பிக்கையான சேவை**

flex Institute
Step Towards a Bright Future

**Hotline: 0777-761 346**
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
**www.flexinstitute.lk**

FLEX Graphic


அறிமுகமாகின்றது
Clogard
Fluoridated Toothpaste
நச்சுரல் சோல்ட்
இயற்கை உப்பு, சின்க் எக்டிவ் மற்றும் ப்ளோரைட் ஆகியவற்றின் பலமானது, பல் வேர்களை தாங்கும் ஈறுகளை பாதுகாத்து பற்களை மிக வலுவுள்ளதாக்கும். மின்ட் சுவையில் முழு குடும்பத்திற்கும்.
ஆரோக்கியமான ஈறுகள் + வலுவான பற்கள்
NEW
Cool Fresh Mint
HEALTHY GUMS + STRONGER TEETH
Clogard
Natural Salt
ரூ. 50/- இலிருந்து
வேர் காக்கும் உப்பின் பலம்

## வீடு வாடகைக்கு உண்டு

**Temple Road - Hospital Road**
சந்திக்கு அண்மையில்.

**பகுதி வீடு**
வாடகைக்கு உண்டு.

**TELE: 076 657 3168**

## தேவை

பதவி :- Junior Accounts Executive
தகைமைகள்:
CIMA, CA, ACCA, Part Qualified
கணக்கியல் துறைசார்ந்த (Accounting Field) வேலையில் 2 வருட அனுபவம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
Email- Address - msra5690@gmail.com

**074 004 9933**

## தேவை

யாழ் நகரில் இயங்கும்
பிரபல Hardware நிறுவனத்திற்கு
மின்சார உபகரணங்கள் திருத்துவதற்கு
அனுபவமுள்ள வேலையாள் தேவை.

**077 007 4903**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**

**076 568 4346**

## வாடகைக்கு

யாழ். கன்னாதிட்டி லேனில் 12 படுக்கை அறைகள் கொண்ட பெரிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. கொட்டேல் ஆகவோ அல்லது லொஜ் ஆகவோ நடத்துவதற்கு உகந்ததாக உள்ளது.

தொடர்புகளுக்கு:**077 199 5709**

## வேலை வாய்ப்பு

புங்குடுதீவு, சுழிபுரம் ஆகிய இடங்களில் கட்டட நிர்மாண வேலை செய்வதற்கு,

* **மேசன்**
* **தச்சு வேலை (சட்டறிங்) செய்பவர்கள்**
* **கூலியாட்கள்**

உடன் தேவை.

தொடர்புகளுக்கு
**077 712 0945, 076 826 4857**

## Hiace வான் விற்பனைக்கு

1991 பதிவு, 53-8356,
*5L இன்ஜின்,* A/C,* Full Options,
*2வது உரிமையாளர்.* வீட்டுப்பாவனை.
* **இன்ஜின், Body 100%**

தெடர்புகளுக்கு: **077 844 7978**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 உத்தரட்டாதி கி.பா 17 1/4 சொந்த தொழில் புரியும் மணமகனிற்கு மணமகள் தேவை.

நேரடித் தொடர்பிற்கு
**077 449 6275**

## உடனடி வேலை வாய்ப்பு

**O/L, A/L** படித்து முடித்த வர்களான முழுநேர பகுதிநேர வேலைவாய்ப்பு

**077 241 7007**

## காணி விற்பனைக்கு

சந்தா தோட்டம்
பருத்தித்துறையில்
**8 1/2** பரப்புக்காணி உடன்
விற்பனைக்கு.

**077 355 2500**

## தேவை

இணுவிலிலுள்ள **புத்தகசாலை** ஒன்றிற்கு பணிபுரிவதற்கு பெண் பணியாளர் ஒருவர் தேவை.
வயது எல்லை 20 - 45 வரை

**077 517 0178, 077 135 9679**

## வேலையாள் தேவை


யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மோட்டேஸ் உதிரிப்பாக கடை ஒன்றுக்கு வேலையாள் தேவை.
**வயது: 18-30**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்கு பணிப்பெண் தேவை. தங்கி இருந்து வேலை செய்யக்கூடியவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: **077 401 8545**


# பழி தீர்த்தது சென்னை



கடந்த ஆண்டு ஐ.பி.எல். இறுதி ஆட்டத்தில் மும்பையிடம் தோல்வியைத் தழுவிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, நடப்பு ஆண்டின் முதலாவது ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியைத் தோற்கடித்து பழிதீர்த்துக் கொண்டது.
கொரோனா இடருக்கு மத்தியில் அபுதாபியில் ஆரம்பமான ஐ.பி.எல். தொடரின் முதலாவது ஆட்டத்தில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தி சென்னை அணி அசத்தியது.
நேற்றைய ஆட்டத்தின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற மகேந்திர சிங் டோனி, சென்னை அணிக்கு தலைமை தாங்கினார்.
முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணி, குயின்ரன் டி கொஹ் மற்றும் திவாரி ஆகியோரின் நிதான துடுப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.
சவுரப் திவாரி 42 ஓட்டங்களையும் குயின்ரன் டி கொஹ் 33 ஓட்டங்களையும் கிரன் பொலார்ட் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.
பந்துவீச்சில் சென்னை அணி சார்பில், லுங்கி நெகிடி மூன்று விக்கெட்டுகளையும் தீபக் சாகர், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.
163 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாட களமிறங்கி சென்னை சுப்பர் கிங்ஸ் 19.2 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றியைப் பெற்றது.
சென்னையின் துடுப்பாட்டத்தில் அம்பாத்தி ராயுடு 48 பந்துகளில் 71 ஓட்டங்களையும், பப்டூ ப்ளசிஸ் ஆட்டமிழக்காது 44 பந்துகளில் 55 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். மும்பையின் பந்துவீச்சில் ட்ரென்ட் போல்ட், ஜேம்ஸ் பட்ரின்சன், ஜஸ்விந்தர் பும்ரா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர். (ஒ,5)





## SME துறையில் நிதி ஆலோசகராக இருப்பதற்கான வாய்ப்பு

SEVA Consultancies என்பது சணச இன்டர்நெஷனல் வடிவமைத்த நிதி ஆலோசனை சேவையாகும். இது சிறு குறு தொழில்முனைவோருக்கு (SME) சந்தை சார்ந்த நெகிழ்வுடன் கூடிய நிதி அல்லாத சேவைகளையும் வழங்குகிறது.
சிறு குறு தொழில்முனைவோருக்கென(SME) தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட இச்சேவை பெக்கேஜ்களை மாதாந்திர கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் வாடிக்கையாளர் தேவைப்படும்போது இச்சேவைகளை தனித்தனியாகவும் பொருத்தமான கட்டணங்களினூடக பெற்றுக்கொள்ள முடியும்.
வட மாகாணத்தில் எம்முடன் இணைந்து சிறு குறு தொழில்முனைவோருடன் பணியாற்றுவதற்கு கணக்கியல் அல்லது வங்கியியல் தொடர்பான தகுதியான நபர்களை சணச இன்டர்நெஷனல் அழைக்கிறது.

**ஆர்வமுள்ள நபர்கள் பின்வரும் தகுதிகளையும் திறன்களையும் கொண்டிருக்க வேண்டும்**

1. கணக்கியல்தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது டிப்ளோமா அல்லது தொழில்முறை தகுதி (AAT,CIMA,CA)
2. வங்கியியல் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது டிப்ளோமா அல்லது தொழில்முறை தகுதி
3. தொழில்முனைவோர் மற்றும் மக்களுடன் பணிபுரியும் ஆர்வம் அத்துடன் சிறந்த தொடர்பாடல் திறன்

**ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை (CV) பின்வரும் email முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**
**பகுதிநேரமாக பணியாற்ற விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்**
**Email: sanasainternational@gmail.com**

தொடர்புக்கு:
**SANASA INTERNATIONAL**
SANASA INTERNATIONAL (Pvt) Ltd.,
7/7, Pragathipura Road, Madiwela,
Kotte, Sri Lanka.
Contact : +94 775361042


# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 02 . 12 . 1952 | 19 . 09 . 2020 |

## சுப்பிரமணியம் சிறீஸ்கந்தராஜா
### (கதிரமலை)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிறீஸ்கந்தராஜா நேற்று (19.09.2020) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னலச்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சாந்தமலரின் அன்புக் கணவரும், நர்த்தனன் (கனடா), காலஞ்சென்ற நக்கீரன், ஜசிந்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாம்பிகை, சிறிக்குமார் (ஜேர்மன்), கமலராணி, செல்வக்குமார் (ஜேர்மன்), செல்வராணி, காலஞ்சென்ற சசிக்குமார், ரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோபிகா, அஸ்வின், சேயோன், செந்திவேல், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும், றுஜாந்தி (கனடா), ரீத்தா, நினேஸ் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 2230 657**

# தட்சண சகாப்தம் கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், செப். 20
தட்சண சகாப்தம் என்னும் தொனிப் பொருளிலான நம் முன்னோரின் அருங்கலை ஒளிப்பட கண்காட்சி வட்டுக் கோட்டை தெற்கு காக்கையம் பதி காளிஅம்மன் கோவிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடை பெறவுள்ளது.
சோமசுந்தரம் நாதன் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலா ளர் திருமதி பி. பிரேமினி, கௌரவ விருந்தினராக வலி. மேற்கு உதவிப் பிரதேச செய லர் திருமதி கே. செந்தூரன், உதவித் திட்டப் பணிப்பாளர் செல்வி வி. தர்சினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.
(த)

# விபத்தில் சிக்கி சிப்பாய் சாவு

வவுனியா, செப். 20
அநுராதபுரம் கெப்பிற்றிகொல்லாவா பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த சிப் பாய் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கெப்பிற்றிகொல்லாவை பகுதியில் மோட்டார் சைக் கிளில் சென்றுகொண்டிருந்த அந்தச் சிப்பாயை இலகு ரக வாகனம் ஒன்று மோதியதில் விபத்து இடம்பெற்றது. காயமடைந்த சிப்பாய் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனி னும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.
கெப்பிற்றிகொல்லாவ பகுதியைச் சேர்ந்த அமர சேன (வயது 28) என்பவரே உயிரிழந்தார். (த110)

# ஆவரங்காலில் இருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 20
4 கிராம் கஞ்சா வைத்திருந்தனர் என்ற குற் றச்சாட்டில் இளைஞர்கள் இருவரை காங்கே சன்துறை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் கைதுசெய்து அச்சுவேலி பொலிஸ் நிலையத் தில் ஒப்படைத்தனர்.
நேற்று சனிக்கிழமை இரவு 8.30 மணிய ளவில் புத்தூர் நவக்கிரி பகுதியில் வைத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் ஆரங்கால் பகுதியைச் சேர்ந்தவர்கள்.
விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிவா னிடம் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த422)

## மரண அறிவித்தல்



**திருமதி நடராசா கண்மணி**

சங்குவேலி வடக்கு, மானிப்பாயை பிறப்பிட மாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நடராசா கண்மணி நேற்று (19.09.2020) சனிக் கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09. 2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி யளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக சங்குவேலி காட்டுப் புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சோமசுந்தரம் நகுலேஸ் (நவம்)**

மயிலிட்டி, வீரமாணிக்கதேவன் துறையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சோம சுந்தரம் நகுலேஸ் (நவம்) நேற்று (19.09.2020) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் சிவக் கொழுந்து (திருப்பதியம்மா) ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற ஸ்ரீதேவியின் கணவரும், இலட்சுமிதேவி, நேசமலர், முருகவேல் (சோதி), காலஞ்சென்ற பரமகுரு மற்றும் சத்தியேஸ்வரி, சகுந் தலாதேவி, சித்திராதேவி, இன்பகுரு, கனகாம்பிகை ஆகியோரின் சகோதரனும், வேல்நாயகம், காலஞ்சென்றவர்களான சித்திவிநா யகம், செல்லச்சாமி மற்றும் கருணாநிதி, செல்வநாயகம், பவளநா தன், சிவனருட்சோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2020) ஞாயி ற்றுக்கிழமை மாலை 3.00 மணியளவில் சகோதரியின் இல்லத்தில் (கோண்டாவில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரன் (முருகவேல்)
அம்மன்வீதி, கோண்டாவில்.
T.P: 076 760 0222

**திருமண சேவை**
எம்மிடம் உள்நாடு, வெளிநாடு, அரச, தனியார் துறை உத்தியோகத்தர்கள் மற்றும் அனை வருக்கும் ஏற்றமணமக்களை தேர்ந்தெடுக்க
தொடர்புக்கு: 077 302 0874

**வேலை வாய்ப்பு**
பிரபல்யமான கம்பனிக்கு O/L தகமையுடன் ஆண், பெண் இரு பாலா ருக்கும் வேலை வாய்ப்பு.
தொடர்புக்கு: 076 112 4145

**வேலையாள் தேவை**
வீட்டுத் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. இடம்: பண்டியந்தாள்வு.
தொடர்பு: 077 086 8132


**வேலையாள் தேவை**
மிக்சர், சிற்றுண்டி வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை. (பெண்கள்)
076 841 9217

# கரப்பந்தாட்ட தொடர் நேற்று ஆரம்பம்!



யாழ்ப்பாணம், செப்.20
இளவாலை வருத் தப்பாதாத வாலிபர் சங்கத்தினால், ஆண்டுதோறும் சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக மின்னொளியி லான கரப்பந் தாட்டத் தொடர் நடத்தப்பட்டு வரு கின்றது. 2020 ஆம் ஆண்டுக்கான கரப்பந் தாட்டத் தொடரின் போட் டிகள் நேற்று ஆரம்பமா கின. முதல் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கீரி மலை சிவானந்தா அணி மோதியது.
இந்தச் சுற்றில் 15:10 என்ற கணக்கில் நவஜீ வன்ஸ் அணி வெற்றி யைத் தனதாக்கிக் கொண்டது.
2 ஆவது தெரிவுப் போட்டியில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து நாயன்மார்கட் டு பாரதி அணி மோதி யது.
5 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட் டியில், புத்தூர் வளர்மதி அணியின் அதிரடி யான ஆட்டத்தால் 3:0 என்ற கணக்கில் வெற் றியைத் தனதாக்கி காலிறுதிக்குள் நுழைந் தது.
அடுத்த போட்டிகள் நாளை திங்கட்கிழமை இளவாலை மத்திய விளையாட்டுகழக மைதானத்தில் இடம்பெ றவுள்ளன.
(ம-இ)

## மரண அறிவித்தல்



**திருமதி சரஸ்வதி (பவளம்) சின்னத்துரை**

யாழ். வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி (பவளம்) கடந்த (17.09.2020) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான குருசாமி பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மரு மகளும், வல்லிபுரம் சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், பரராசசிங்கம், பத்மநாதன், குணசிங்கம், மனோரஞ்சிதம், நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயகேந்திரவதி (மலர்), சந்திராதேவி, தங்கராசா, லோகேஸ்வரி, விஜய குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, சுப்பிரமணியம், மகேஸ்வரி, துரைராசா, நடராசா, ஆகியோரின் மைத்துனியும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்க ளான கந்தையா மகேஸ்வரி, தம்பித்துரை ஆகியோரின் சகலையும், பிரசாந், பிரதிஸ்ரா, பிரவீணா, பிரதீபா, நிரோஜன், பாமினி, பவித்திரா, வினோத், சபேஸ், சந்தோஷ், வினோஜிதன், விதுசன் ஆகியோரின் பேர்த்தியும், அஸ்னா, அனாஸ், ஷாக், ஷிம்ரியா, இஷானா, ஆர்யானா, அபிலாஷா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு (கனேடிய நேரம்) நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பரராஜசிங்கம்-கனடா
001-416 68409262
தங்கராசா - கனடா
001-4167254659
நிர்மலாதேவி - கனடா
001-9056 727919
பத்மநாதன் - பிரான்ஸ்
0033-761922503

தகவல்:
குடும்பத்தினர்.

குணசிங்கம் - சுவிஸ்
0041-789519185

# யாரை அஞ்சலிப்பதென தீர்மானிப்பது தமிழரே!

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.12.1931 | 18.09.2020 |

### சேனாதிராஜா சாந்தி

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராஜா சாந்தி நேற்று முன்தினம் (18.09.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜாவின் அன்பு மனைவியும், நவரட்ணம் (இலங்கை மின்சார சபை - ஓய்வு நிலை சாரதி), செல்வரட்ணம் (இலங்கை மின்சாரசபை - ஒப்பந்த அடிப்படை வாகன சாரதி. திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயும், ந.சதானந்தேஸ்வரி, செ.தயாளினி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - பொது வைத்தியசாலை - திருகோணமலை) ஆகியோரின் மாமியும், செந்தூரன் - பிரியந்தி (கனடா), துவாரகன் பிரியதர்ஷினி (கனடா)யின் பேர்த்தியும், அஸ்மிதா, பிரவிஷன், வர்ஷா, நிலா (கனடா) வின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகாக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி வடக்கு,
அராலி.

தகவல்:
S. நவரட்ணம் - மகன்
S. செல்வரட்ணம் - மகன்
077 815 3614

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 04 1938 | 18 09 2020 |

### திரு. கதிரித்தம்பி குணராஜசேகரம்

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு,கனடா,உடுப்பிட்டி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்டிருந்த க.குணராஜசேகரம் அவர்கள் 18.09.2020 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி- சின்னத்தங்கச்சி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி-கனகாம்பிகை தம்பதியினரின் மருமகனும் சௌபாக்கியலக்ஷ்மியின் அன்புக் கணவரும், தர்மினி (கனடா), மதிவதனி (பிரான்ஸ்), அமரர் பவானி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகராஜா(கனடா), உதயசேகர் (பிரான்ஸ்), ஜெயலால் ஆகியோரின் அன்பு மாமனாரும் சஹானா(கனடா), நுசிதன்(கனடா), திவங்க ஹர்ஸஜித் ஆகியோரின் ஆருயிர் பேரனும், அமரர் சற்குணம், தர்மசேகரம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20.09.2020 ஞாயிற்றுக்கிழமை காலை உடுப்பிட்டி இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக பூதவுடல் உடுப்பிட்டி எல்லாங்குள இந்து மயானத்திற்கு மு.ப 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.**

தகவல்
குடும்பத்தினர் "பொன்னாவில்லா" இமையாணன், உடுப்பிட்டி.
(உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்க தலைமையகம் எதிரில்)
தொ.பே- 0094715721637

## நான்காம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கார்த்தி சுப்பிரமணியம்**

| உதிப்பு | உதிர்வு |
|---|---|
| 26.05.1932 | 04.10.2016 |

திதி: புரட்டாதி வளர்பிறை திருதியை

அயராது எமக்காக உழைத்த அன்புத் தந்தையே
ஆண்டுகள் நான்கு ஆனாலும் ஆறவில்ல எம்துயரம்
இங்கு உங்கள் அன்பை இழந்து நாம் தவிக்கின்றோம்
ஈரவிழிகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

அரசடிச் சந்தி,
கல்வயல், சாவகச்சேரி.

குடும்பத்தினர்

## பதினாறு ஆண்டுகளாய்
## பாசத்தின் பரிதவிப்பில்...



தோற்றம்
17.04.1953

மறைவு
18.09.2004

அமரர் **திலகவதி குமரவேல்**
(முன்னாள் பொது முகாமையாளர்
ப.நோ.கூ.ச. சுன்னாகம்)

திதி: சதுர்த்தி (20.09.2020)

பக்குவமாய் காத்த அம்மா
பதைபதைக்க விட்டு எம்மை
பாதியிலே சென்றதேனோ?
பதினாறு ஆண்டுகளாய்
பாசத்தின் பரிதவிப்பில்
பந்தங்கள் நாமிங்கே.....
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்**
"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

## தென்னிலங்கையல்ல என்கிறார் சுரேன்

யாழ்ப்பாணம், செப். 20
தமிழ் மக்கள் யாரை அஞ்சலிக்க வேண்டும் என்பதை தமிழ் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டுமே தவிர, தென்னிலங்கை சிங்கள அரசியல்வாதிகளோ அல்லது அதிகாரிகளோ அல்லர் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் சுரேந்திரன் குருசுவாமி தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
மேலாதிக்க போக்கை கடைப்பிடிக்கும் பேரினவாதம் தமது மக்களை மகிழ்விப்பதாக நினைத்து தாம் சார்ந்த மக்களை பிறரின் உணர்வுகளை புரிந்துகொள்ளாத அடிப்படை மனிதநேயமற்ற இனமாக வழிநடத்த முற்படுகின்றது.
சுய அரசியல் இலாபங்களுக்காக பெரும்பான்மை மக்களை திசைதிருப்பும் இந்த அரசியல் நாகரிகம் எதிர்காலத்தில் நாட்டுக்கு பெரிய சவாலாக மாறும். பின்னர் தலைவர்கள் தம்மை மாற்றிக்கொண்டாலும் மக்களை மாற்ற முடியாத நிலை உருவாகும். இதனால் காலாகாலத்துக்கும் இந்த நாடு இனவாத அரசியலையே நம்பியிருக்க வேண்டி வரும்.
எனவே அனைத்து தமிழ் கட்சிகளும் அமைப்புகளும் ஒன்றிணைந்து எமக்கான உரிமைகளை வென்றெடுக்க தொடர்ந்தும் போராட வேண்டியுள்ளது. என்றுள்ளது.

(கு)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03.03.1935 | 21.08.2020 |

எமது புலோலி கல்வி நிறுவனத்தின் இயக்குனர்களான திரு.திருமதி. சிவலிங்கம் - சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமி மற்றும் பாசமிகு தாயாருமான

### அமரர் மீனாட்சிப்பிள்ளை - தருமலிங்கம்

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்
கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம்.**

**ஆசிரியர்கள்,
புலோலி கல்வி நிலையம்.**
(P.E.C)

# மாணவர் விடயத்தில் பொலிஸார் அசமந்தம்

## வவு. நகரசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

**வவுனியா,செப்.20**

**பாடசாலை வேளையில் கனரக வாகனங்கள் பயணிக்கத் தடை விதிக்க நகரசபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பொலிஸாருக்கு அறிவித்த போதிலும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று வவுனியா நகரசபை உறுப்பினர் சு. காண்டீபன் குற்றஞ்சாட்டினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
வவுனியாவில் நகர்ப்பகுதியில் பாடசாலை வேளையில் அதிகளவான வாகன நெரிசல் ஏற்பட்டு வரும் நிலையில் கனரக வாகனங்களின் பயணமும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இதன் காரணமாக வவுனியா நகரசபையில் பல தடவைகள் பாடசாலைஆரம்பிக்கும் நேரம்மற்றும்பாடசாலைமுடிவடையும்நேரங்களில்டிப்பர் போன்ற கனரக வாகனங்களை நகருக்கு அப்பால் ஒரு மணி நேரம் நிறுத்தி வைப்பது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
எனினும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காமையால் பாடசாலை நேரங்களில் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. விபத்துக்கள் சம்பவிக்கும் நிலை காணப்படுகின்றன.
வவுனியாவில் மாவட்டச் செயலராக திருமதி சார்ள்ஸ் கடமையாற்றியபோது இந்த நடைமுறையைப் பின்பற்றியிருந்தார். எனினும் அவரது இடமாற்றத்தின் பின்னர் மீண்டும் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்த வேண்டும் -என்றார்.

(ஐ-110)

## போதையில் சாரத்தியம்; இருவர் கைது

கிளிநொச்சி,செப் .20
மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் இருவர் பளை போக்குவரத்துப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ9 வீதியில் வைத்து மோட்டார் சைக்கிள் சாரதி மற்றும் பட்டா ரக வாகனச் சாரதி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.
இரு வாகனங்களும் பளைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டன. சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்எனபளைபொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ-6)

## பொதுக்கூட்டம்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட நுணாவில் மேற்கு வான்மதி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.
தலைவர் க.தர்மலிங்கம், உப தலைவர் க.தவச்செல்வம், செயலாளர் செ.ராஜதீபன், உதவிச் செயலாளர் ச.வடிவழகன், பொருளாளர் ந.லயனகுமார் தெரிவு செய்யப்பட்டனர்.
இவர்களுடன் 6 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-9)

## மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு

கொடிகாமம்,செப்.20
மறவன்புலவு கமக்கார அமைப்பு அலுவலகமும் அதனோடு இணைந்த உரக் களஞ்சியமும் மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10.30மணிக்குநடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன்கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி எஸ்.உஷா, யாழ்ப்பாணம் கமநல திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஆர்.நிசாந்தன் மற்றும் உதவி ஆணையாளர் திருமதி பி.தெய்வநாயகி, கைதடி கமநலசேவைகள்நிலையபெரும்போக உத்தியோகத்தர்கே.கோகுலன், சீலக்ஸ் காற்றாலைநிறுவனத்தின்உயர்அதிகாரிகளான நிர்வாக இயக்குநர் ஜெயந்த கமகே, பணிப்பாளர் சமீர கனேகொட, ஆலோசகர் எஸ்.சிறீதரன் மற்றும் திட்ட முகாமையாளர் பி.ஜேம்ஸ் ரவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-159)

## சதுர்த்தி உற்சவம்

கோப்பாய்,செப்.20
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
அன்றைய தினம் மாலை 5 மணிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் உள் வீதி வலம் வருதலும் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## கிணற்றில் இருந்து 13 முதலைகள் மீட்பு





வவுனியா,செப்.20
நிலவும் வறட்சி காரணமாக நீர்நிலைகளைத் தேடியலைந்த பன்னிரெண்டு குட்டி முதலைகளும், தாய் முதலையும் வவுனியா குருந்துபிட்டிப் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு காட்டுப் பகுதிக்குள் விடுவிக்கப்பட்டன.
வவுனியா குருந்துபிட்டிப் பகுதியில் உள்ள தோட்டக் காணி ஒன்றின் உரிமையாளர் தனது தோட்டத்திலுள்ள கிணற்றை நேற்று சுத்தம் செய்வதற்காகச் சென்றபோது கிணற்றில் ஒரு முதலை இருப்பதைக் கண்டார். பின்னர் அப்பகுதி மக்களின் உதவியுடன் முதலை மீட்கப்பட்டுள்ளது. எனினும் கிணற்றினுள் மேலும் 12 முதலைக் குட்டிகளும் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. அவையும் பத்திரமாக மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட முதலைகள், மக்களால், பாதுகாப்பாக காட்டுப் பகுதியில் விடுவிக்கப்பட்டன. (ஐ-110)

## மன்னார் சவேரியார் வித்தியாலய 150 ஆவது யூபிலி நிறைவு நிகழ்வு

மன்னார்,செப்.20
மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 ஆவது யூபிலியைநிறைவுசெய்யும்முகமாக இறுதி நிகழ்வுகளை டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி நடத்தஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளனஎனபாடசாலை அதிபர்அருட்.சகோ.ச.இ.றெஜினோல்ட்தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
எமது கல்லூரி ஜனனமாகி 150 ஆவது அகவையை நாம் அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாடி நினைவுகூரும்வகையில்பலசெயற்பாடுகளைகடந்த வருடத்தில் இருந்து மேற்கொண்டு வருகின்றோம்.
யூபிலியைநிறைவுசெய்யும்முகமாகஇறுதிநிகழ்வுகள் டிசம்பர் 3 ஆம் திகதி நடத்தப்படவுள்ளன.
நிகழ்வின்போது150ஆவதுயூபிலிநினைவுமலர்ஒன்றையும் நாம் வெளியிடத் திட்டமிட்டுள்ளோம்.
யூபிலிமலர்முழுமையானதாகவும்,கருத்தாக்கம்உள்ளதாகவும் அமைவதற்கு அனைவரது காத்திரமான ஒத்துழைப்பு மிகவும் அவசியமாக உள்ளது.
பாடசாலைசம்பந்தப்பட்டபடங்கள்,மற்றும்கருத்தாழம் மிக்க ஆக்கங்கள் என்பவற்றை எதிர்பார்க்கின்றோம். இவைகளை யூபிலி நினைவு இதழில் பதிவிட விரும்புகின்றோம்.
ஆகவே தங்கள் வசம் உள்ள புகைப்படங்கள் மற்றும் உங்களால்எழுதப்பட்டதரமானஅனுபவப்பகிர்வுகள், மற்றும் ஆக்கங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் broyohansoys@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.
மேலதிக விவரங்களுக்கு 0773824255, 0718296105 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை மேற்கொள்ளலாம் -என்றார். (ஐ-56)





பொன்னாலை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் நேற்று சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

# தனியார் வகுப்புக்களை ஞாயிறுகளில் நடத்தாதீர்!

## பெற்றோர் கோரிக்கை

வவுனியாவில், ஞாயிறு விடுமுறை தினங்களில் தனியார் வகுப்புக்களை நடத்துவதற்கு தடைவிதிக்குமாறு மாணவர்களின் பெற்றோர் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஞாயிறு தினங்களில் மாணவர்களின் நலன் கருதி தனியார் வகுப்புக்கள் நடத்துவதற்கு பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இதற்கு அமைவாக மாவட்டச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டு அது நடைமுறையிலிருந்தது.

கொரோனா தொற்று நோயின் அச்சத்துக்குப் பின்பு தனியார் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது சில தனியார் கல்வி நிலையங்கள் வகுப்புக்களை நடத்துவதால் அறநெறிப் பாடசாலை மற்றும் கலை கலாசார மற்றும் விளையாட்டு செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடமுடியாத நிலை உருவாகியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புக்களை நடத்தும் தனியார் கல்வி நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-402)

# மக்கள் வாழ்விடங்களில் தற்போதும் வெடிபொருள்கள்

## முல்லையில் இந்த நிலை

**முல்லைத்தீவு, செப்.20**

**போர் நடைபெற்று பத்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் முல்லைத்தீவில் இன்றும் வெடிபொருள்கள் மக்கள் வாழ் இடங்களில் காணப்படுகின்றன என்று சுட்டிக் காட்டப்படுகிறது.**



முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின்போது புதைக்கப்பட்ட மிதிவெடிகள் இன்னும் முழுமையாக அகற்றப்படாத நிலையில் தற்போதும் அது தொடர்பான அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பிரித்தானியாவை மையமாகக் கொண்டு செயற்படுகின்ற ஹலோ ட்ரஸ்ட் மனிதாபிமான மிதிவெடி அகற்றும் நிறுவனத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட குமுழமுனை, தண்ணிமுறிப்பு, கொக்குத்தொடுவாய் ஆகிய இடங்களில் புதிதாக மிதிவெடி அகற்றுதல் தொடர்பான தெளிவூட்டல் மாவட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மிதிவெடி அகற்றும் நிறுவனத்தின் கடந்த கால திட்டங்கள், செயற்பாடுகள் மற்றும் எதிர் காலச் செயற்பாடுகள் தொடர்பாக தெளிவூட்டப்பட்டுள்ளது.

ஹலோ ட்ரஸ்ட் மனிதாபிமான மிதிவெடி அகற்றும் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் மற்றும் அதிகாரிகள், குறித்த துறையுடன் தொடர்புடைய இராணுவ பொலிஸ் அதிகாரிகள், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், சமூக மட்ட பிரதிநிதிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-19)



# பெயர்பலகை நடுகை

கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலைக்கு மும்மொழியிலான பெயர்ப் பலகை நடும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஏ.ஐ.ஏ இன்சூரன்ஸ் நெல்லியடிக் கிளையினர் 10 ஆயிரம் ரூபா பெறுமதியில் இந்தப் பெயர்ப் பலகையை பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கினர். (ஐ-159)

# வீதிகளுக்கு விளக்குகள் பொருத்தக் கட்டணம்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 150 வீதி விளக்குகள் பொருத்த ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபா கட்டணமாகச் செலுத்துமாறு இலங்கை மின்சார சபையினர் அறிவித்துள்ளனர் என தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

சாவகச்சேரிப் பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற அமர்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த வருட சபையின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபாவுக்கு சபையின் வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக மின்சார சபைக்கு அறிவித்த போது மின் வீதி விளக்குகள் பொருத்த கட்டணமாக குறித்த தொகை செலுத்தப்பட்ட பின்னர் வீதி விளக்குகள் பொருத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது" என தவிசாளர் மேலும் தெரிவித்தார். அத்துடன் வீதிகளில் பொருத்தப்பட்டு பழுதடைந்த 21 வீதி விளக்குகள் திருத்துவதற்கு 56 ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டது. (ஐ-9)

## தொடர்ச்சிகள்....

### ஜே.வி.பியினருக்கு ....

அடக்க முடியாது. தடைசெய்ய முடியாது. உங்கள் கொள்கை விளக்க உரையின்போது 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்று உரையாற்றிருக்கின்றீர்கள். இது ஒரே நாடு என்றால் அந்தச் சட்டமும் ஒரே சட்டமாக இருக்கவேண்டும். தெற்கில் ஜே.விபியினர் தமது ஆயுதப் போராட்டத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருகின்றார்கள். வடக்கில் இருக்கும் தமிழ் மக்கள், ஆயுதப் போராட்டத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதை எப்படி மறுக்க முடியும் என்று ஜனாதிபதியிடம் கேட்க விரும்புகின்றேன். இவ்வாறு தமிழ் மக்கள் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சியின் காலத்தில் நினைவேந்தல் நிகழ்வுக்ளை தமிழ் மக்கள் சுதந்திரமாகக் கடைப்பிடித்தார்கள். நினைவேந்தல்களை நீதிமன்றத்தின் ஊடாக தடுத்து நிறுத்துவது அடிப்படை மனித உரிமை மீறல். நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு பயங்கரவாதிகளை நினைவுகூரல் என்று இந்த அரசு பெயர் சூட்டுகின்றது. அப்படியாயின் நாட்டின் சட்டத்திலேயே பயங்கரவாதிகள் என்ற பெயர் வழங்கிய மக்கள் விடுதலை முன்னணியினர் கூட தெற்கில் சுதந்திரமாக நினைவேந்தல்களை கடைப்பிடிக்கின்றார்கள். அப்படியாயின் இது எந்த வகையில் நியாயமானது? தமிழர்களின் நினைவேந்தல்களை பயங்கரவாதிகளை நினைவுகூரல் என்று கொச்சைப்படுத்துவதை ஏற்க முடியாது.

சாத்வீக போராட்டத்துக்கு மக்கள் நலன் கருதி அது நல்வகையில் அமைந்தால் அந்தப் போராட்டத்தை தமிழ் முற்போக்குக் கூட்டணி மனப்பூர்வமாக ஆதரிக்கும். இந்த அரசின் கெடுபிடிகளுக்கும் தடையுத்தரவுகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் சாத்வீக ரீதியில் போராட்டத்தை நடத்துவார்களாயின் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவையும் பங்களிப்பையும் வழங்குவோம், என்றார். (ஒ.5,22,44)

### தமிழ்தலைவர்கள்....

கையெழுத்திட்டுள்ளனர். அந்தக் கடிதம் மின்னஞ்சல் ஊடாக உடனடியாகவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நினைவேந்தலை கடைப்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு அரசுக்கு காலக்கெடு விதிப்பது என்றும் அவ்வாறு தடை நீக்கப்படாவிட்டால், அதற்கு எதிராக தொடர் போராட்டங்களை முன்னெடுப்பது என்றும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து முடிவு எடுத்திருந்தன.

தடையை நீக்குவதற்கான கோரிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் முன்வைப்பது என்றும் தீர்மானித்திருந்தன.

இதற்கு அமைவாக, வடக்கு மாகாண அவைத் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானத்தின் அலுவலகத்தில் கடிதம் நேற்றுத் தயாரிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, துணைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரனும், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் மூத்த சட்டத்தரணி ந.சிறீகாந்தாவும், எம்.கே.சிவாஜிலிங்கமும், ரெலோ சார்பில் க.சுரேனும், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் சார்பில் திருமதி அனந்தி சசிதரனும், புளொட் சார்பில் பா.கஜதீபனும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் த.சிற்பரனும், பி.சிவநாதனும், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் சார்பில் பொ.ஐங்கரநேசனும் கையெழுத்திட்டுள்ளனர். (ஒ.5)

### இறுதி நேரத்தில் ....

குடையில் முதல் தடவையாக ஒன்றிணைந்துள்ளன.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்க்கும் ஜனநாயக நடவடிக்கையை எப்படி முன்னெடுப்பது என்பது தொடர்பில் கடந்த 15ஆம் திகதி முதலாவது கூட்டம், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவின் தலைமையில் நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முதலாவது கூட்டத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன பங்குபற்றவில்லை. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி பங்கேற்றிருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளவில்லை.

இந்த நிலையில், நினைவேந்தலுக்கான தடையை நீக்க ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரும் கடிதம் வரையும் பணி நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு ஆதரவு வெளியிட்டனர். அத்துடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செயலர் செல்வராஜா கஜேந்திரன் இருவரும் கையெழுத்தும் இட்டுள்ளனர்.

இந்தக் கடிதத்தில் கையெழுத்திடுவதற்காக ஏனைய அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும், வடக்கு மாகாண அவைத் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானத்தின் அலுவலகத்தில் ஒன்று கூடினர். அங்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர்களான ந.காண்டீபன் மற்றும் க.சுகாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் ஆகியோரிடம், இந்தக் கடிதம் கொண்டு சென்று கையெழுத்து வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## இராணுவ ...

டுள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் 19ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டு, 20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படுமானால் தமிழ் மக்கள் இந்த நாட்டிலேயே வாழ முடியாத சூழல்தான் ஏற்படும். இராணுவ சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துவதே 20ஆவது திருத்தச் சட்டம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி வர்த்தமானியில் வெளியிடப்பட்டு விட்டது. எனினும் இது தொடர்பான சர்ச்சைகள் பரந்த அளவில் இடம்பெற்று வருகின்றன. எதிர்க்கட்சிகள், ஆளுங்கட்சியில் ஒரு சிலர் விமர்சனங்களுக்கு இச்சட்டவரைவு உட்பட்டு வருகிறது.

அதேவேளையில் ஊழல் மோசடிக்கு எதிரான சர்வதேச அமைப்பான 'ட்ரான்பரன்சி இன்ரநெசனல்' 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பான கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ஏற்கனவே 19ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்தில் சுதந்திர ஆணைக்குழுக்களை நியமிக்கும் நாடாளுமன்றத்தின் அதிகாரம் 20ஆவது திருத்தச்சட்டவரைவில் ஜனாதிபதியின் கைகளுக்கு கொண்டுவரப்படுவதன் மூலம் ஒரு தனிநபர் சர்வாதிகாரத்தை நோக்கி நாடு செல்லும் அபாயம் ஏற்படுமென அவ்வமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. அது மட்டுமின்றி அதிலுள்ள பல ஜனநாயக விரோத சரத்துகள் நாட்டை ஒரு சர்வாதிகாரப் பாதைக்கு இட்டுச் செல்கின்றது எனப் பல தரப்பினராலும் குற்றஞ்சாட்டப்பட்டுவருகிறது.

இந்நிலையில் சட்டவரைவை மீளாய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்படவுள்ளதாகவும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அது சமர்ப்பிக்கப்பட்டு அதன் முடிவுகள் பரிசீலிக்கப்படும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் பொதுஜன பெரமுனவிலுள்ள முக்கியமான நபர்கள் அச்சட்டம் நிச்சயமாக நடைமுறைப்படுத்தப்படும் என உறுதியாகத் தெரிவித்து வருகின்றனர். ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே உள்ள அதிகாரப் போட்டியே இத்தகைய சர்ச்சைகளுக்கு காரணமென்றும் சில தரப்பினரால் கூறப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் 20ஆவது அரசமைப்பு சட்டவரைவின் மூலம் மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்டுவிடுமென தமது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர். ஆனால் 19ஆவது அரசியல் திருத்தம் நடைமுறையில் இருக்கும் நாள்களிலே ஜனநாயக மீறல்கள் தங்குதடையின்றி இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக பாதுகாப்புச் செயலர், இராணுவத்தளபதி உட்பட பல அதிகாரம் கொண்ட பதவிகள் போர்க்குற்றங்கள் தொடர்பாகவும் மனித உரிமைமீறல்கள் தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையால் குற்றம் சுமத்தப்பட்டவர்களேநியமிக்கப்பட்டுள்ளனர். இந்த இருவரும் இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பலிகொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதல்களை நடத்திய படையணிகளின் பொறுப்பதிகாரிகளாவார். சர்வதேச மட்டத்தில் போர்க்குற்றங்கள் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்ட இவர்கள் 19வது திருத்தச்சட்டம் நடைமுறையிலிருந்த போதே அதிகாரமுள்ள பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.

அது மட்டுமின்றி 20ஆவது அரசியல் திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே தமிழ் மக்களுடைய ஜனநாயக உரிமைகள் கண்முன்னால் தினமும் பறிக்கப்படுகின்றன என்பது கவனிக்கப்பட வேண்டும். தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டுத் தலங்களான வெடுக்குநாறி ஈஸ்வரன் ஆலயம், குருந்தமலை வைரவர் ஆலயம் என்பன தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக அங்கு வழிபாடுகளை நடத்துவதற்கு தடைகள் விதிக்கப்படுகின்றன. அவ்வாறே நீராவிப்பிட்டி பிள்ளையார் ஆலயமும் பௌத்த மதவெறியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதுபோன்றே மணலாற்றுப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் விளைநிலங்களும் மகாவலி அபிவிருத்தி சபையால் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. புல்மோட்டையில் முஸ்லீம்களின் 500 ஏக்கர் காணி தொல்பொருள் மையம் எனக் கூறப்பட்டு அங்கு மூன்று விகாரைகள் அமைக்கப்பட்டு அவற்றைச் சுற்றி சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்குரிய வழிபாட்டுத்தலங்கள், விளைநிலங்கள், மீன்பிடி மையங்கள் என்பன தொல்பொருள் திணைக்களத்தாலும், வன வள பாதுகாப்பு பிரிவினராலும் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள மயப்படுத்தப்பட்டு வருகிறது.

அதைவிட தற்சமயம் தியாகி திலீபனின் நினைவஞ்சலி நிகழ்வுகளை கொண்டாடத்தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் பயங்கரவாதிகளை நினைவு கூர ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என பாதுகாப்புச் செயலர் கமால் குணவர்த்தன சவால் விடுத்துள்ளார். தங்களுக்காக உயிரை அர்ப்பணித்த ஒருவரை அஞ்சலிக்கும் உரிமைகூட தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டது. இப்படியாக தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள் அனைத்தும் ஐக்கிய தேசியக் கட்சியினராலும் ஏனைய எதிர்க்கட்சியினராலும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் சட்டம் எனக் கூறப்படும் 19ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இருக்கும் போதே மேற்கொள்ளப்பட்டுவருகிறது. எனவே 20ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைக்கு வருமானால் இதைவிடப் பன்மடங்கு ஒடுக்குமுறைகளுக்கு தமிழ் மக்கள் முகங்கொடுக்க வேண்டிய அவலநிலை ஏற்படும்.

ஏற்கனவே ஜனநாயகத்தைக் கோரி நிற்கும் சிங்கள அரசியல் சக்திகளுக்கு பின்னால் இழுபட்டு 20ஆவது அரசியல் சீர்திருத்தத்தை மட்டும் எதிர்க்கும் போராட்டத்துக்குள் தமிழர்கள் தங்களை மட்டுப்படுத்தாமல் 6ஆவது திருத்தச்சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு ஆதாரமாக விளங்கும் சட்டங்களை எதிர்த்து எமது போராட்டத்தை விரிவுபடுத்தவேண்டும். இனியும் நாம் சிங்களத் தரப்பினரால் பயன்படுத்தப்படும் சக்திகளாக இன்றி தமிழ் மக்கள் உட்பட நாட்டுமக்கள் அனைவரும் சந்திக்கும் நெருக்கடிகளுக்கு எதிராகப் போராடும் வழிமுறையை கைக்கொள்ள வேண்டும். அதுவே தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய விமோசனத்துக்கான ஒரே வழியாகும், என்றுள்ளது. (ஓ.5)

## தமிழருக்கு .....

விதான நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும். இவ்வாறு தென்னிலங்கையிலுள்ள மூத்த இடதுசாரி தலைவர்கள் அறிவிப்புவிடுத்துள்ளனர்.

### சிறிதுங்க

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய, தமக்காக அறவழியில் போராடி உயர்நீத்தவரை தேசிய வீரராகவே தமிழ் மக்கள் கருதுகின்றனர். அதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. இதற்கு எதிர்ப்பை வெளியிடுவதற்கும், தடைவிதிப்பதற்கும் கொழும்பு அரசுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது.

தமிழ் மக்களுக்கான உரிமைகளை இந்த அரசு மிகவும் சூட்சுமமான முறையில் பறித்துவருகின்றது. இது ஆரம்பம் தான், இதன் இறுதி கட்டம் என்பது கழுத்துக்கே கைகள் வரும். எனவே, ஆரம்பத்திலேயே அடக்குமுறைகளை தமிழர்கள் உடைத்தெறியவேண்டும். தேர்தலில் தனித்துப்போட்டியிட்டால் பரவாயில்லை, உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுங்கள் என தேர்தலுக்கு முன்னரே தமிழக்கட்சிகளுக்கு நான் அழைப்பு விடுத்திருந்தேன். எனவே, வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும். எமக்கு சார்பான அமைப்புகள், தொழிற்சங்கம் என அத்தனை பிரிவுகளினதும் ஆதரவு உள்ளன என்பதை கூறிக்கொள்கின்றேன், என்றார்.

### விக்கிரமபாகு

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நவ சமசமாஜக்கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன கூறியதாவது, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும், தியாகிகளை நினைவுகூரு வதற்காகவும் தமிழ்க் கட்சிகள் கூட்டாக முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு எமது முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் எதிர்ப்பு நடவடிக்கையொன்று இடம்பெறவுள்ளது. இதன்போது திலீபன் விவகாரம் குறித்து கேள்வி எழுப்புவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

ஜே.வி.பி., தியாகிகள் தினத்தை கடைப்பிடிக்கின்றது. அப்படியானால் அந்த உரிமை தமிழ் மக்களுக்கும் இருக்க வேண்டும். எமது கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அத்தனை அமைப்புகளும் இதற்கு முழு ஆதரவு என்பதை நேசக் கட்சிகளுக்கு கூறுகின்றோம். அச்சமுன்றி சமராடுங்கள், என்றார்.

(ஓ.5,44)

## எத்தனை நாளைக்கு .....

திலீபனின் நினைவேந்தலை கடைப்பிடிப்பதற்கான அனுமதியை அரசு வழங்காவிடின் தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

'ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு, வீதிகளில் பேரணிகளை நடத்துவதற்கு பொலிஸாரின் அனுமதி தேவை. பொலிஸாரின் அனுமதியுடன்தான் அதனைச் செய்யமுடியும்' என்றார்.

அப்படியானால் அவர்கள் கடையடைப்பு ஹர்தாலை முன்னெடுத்தால் என்ன செய்வீர்கள் என்று மீளவும் கேட்டபோது, அதனை எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் எத்தனை நாளைக்கு கடையடைப்பை ஹர்தாலை முன்னெடுப்பார்கள் என்று அவர் கேள்வி எழுப்பினார். (ஓ.5,22)

## சாத்வீக .....

னெடுக்கும் சாத்வீகப் போராட்டங்களுக்கு முஸ்லிம் சமூகம் எப்போதும் ஆதரவு வழங்கும். இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன கூட்டாகத் தெரிவித்துள்ளன.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு அரசிடம் கூட்டாகக் கோரியுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள், தடை நீக்கப்படாவிடின் சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுப்போம் என்று அறிவித்துள்ளன.

இது தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீன் 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்ததாவது,

இந்த அரசில் தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான அடக்கு முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. அதில் ஒன்றுதான் நினைவேந்தலுக்கான தடை. அரசு தனது நடவடிக்கைகளை நேரடியாகச் செய்யாமல், மறைமுகமாக பொலிஸார் மற்றும் நீதிமன்றம் ஊடாக நிறைவேற்றுகின்றது. நினைவேந்தல் தடை உத்தரவும் நீதிமன்றம் ஊடாக பிறப்பிக்கப்பட்டுள்ளது. எந்த இனமும், தமது இனத்தினுடைய உரிமைக்காக உயிர் நீத்தவர்களை நினைவுகூருவதற்கு அந்தந்த இனத்துக்கு உரிமை உண்டு. இதில் தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற வேறுபாடுகள் இருக்கக் கூடாது. ஒரே நாடு ஒரே சட்டம் என்று இந்த அரசு சொல்கின்றது. அப்படிச் சொல்லிக் கொண்டு நினைவேந்தலில் மாத்திரம் சட்டங்களை வேறுபடுத்திக் காட்டுவது ஏன்? எனவே நல்லாட்சி அரசு வழங்கிய சுதந்திரத்தை இந்த அரசும் வழங்கவேண்டும். சாத்வீக ரீதியில் தமிழ் மக்கள் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு, தமிழ் பேசும் மக்களின் நலன் கருதி ஆதரவு வழங்குவோம், என்றார்.

இந்த விடயம் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பர் தெரிவித்ததாவது, நினைவேந்தல் நிகழ்வுகளை தடுப்பது அடிப்படை மனித உரிமை மீறல். நினைவேந்தல்களை அந்தந்த மக்கள் நினைவு கூர ஆட்சியில் இருக்கும் எந்த அரசானாலும் அனுமதி வழங்கவேண்டும். தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி செவிசாய்க்காது விடின் அவர்கள் ஜனநாயக வழியில் உரிமைக்காக போராடுகின்றபோது அந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் போராட்டத்துக்கு எமது ஸ்தாபகத்தலைவர் அஸ்ரப் காலத்திலிருந்து ஆதரவு வழங்கி வருகின்றோம். எனவே சாத்வீக போராட்டத்துக்கு எங்கள் ஆதரவு எப்போதும் உண்டு. இந்த அரசில், தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அதிகரித்து வரும் நிலையில், அந்த அடக்குமுறைகளை நிறுத்தக் கோரும் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளை நாங்கள் வரவேற்கின்றோம்.

நாட்டின் தலைவர் என்ற ரீதியில் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஜனாதிபதி முன்வரவேண்டும், என்றார்.

(ஓ.5,22)

### நினைவேந்தலுக்கு....

இது தொடர்பில் அவர் சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய நேர்காணல் கேள்வி, பதில் வடிவில்,

**கேள்வி:** இறந்தவர்களை கூட்டாக நினைவு கூருவதற்கான உரிமை ஐ.நா. சாசனம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதே. அதனை சுட்டிக்காட்டியே, தியாக தீபம் திலீபனை நினைவுகூர அனுமதிக்கவேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் கோருகின்றனவே?

**பதில்:** இறந்தவர்களை நினைவு கூரலாம். அதற்கான உரிமை எந்த நாட்டிலும் உண்டு. ஆனால் பயங்கரவாதிகளை நினைவுகூரலாம் என்று ஐ.நா. சாசனமோ இலங்கை உள்ளிட்ட எந்த நாடுகளின் சட்டத்திலும் இடமில்லை.

**கேள்வி:** சரி, அப்படியாயின் இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியினர் அதாவது கடந்த காலங்களில் அரசுக்கு எதிராக கிளர்ச்சிகளில் ஈடுபட்ட ஜே.வி.பியினர் தங்கள் அமைப்பின் உறுப்பினர்களை இப்போதும் நினைவுகூருகின்றார்களே?

**பதில்:** ஜே.வி.பி. ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு ஜனநாயக வழிக்கு வந்த அமைப்பு. அந்த அமைப்பு அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இந்த நிலையில் அவர்கள் தங்கள் உறுப்பினர்களை நினைவுகூருகின்றார்கள். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஜனநாயகத்தை ஒருபோதும் விரும்பவில்லை. அவர்கள் ஆயுதப் போராட்டத்தை விரும்பி அதன் வழியே அழிந்தார்கள். அந்த அமைப்பு இன்று இல்லை. அதனை அழித்து விட்டோம். இந்த நிலையில் அவர்களை நினைவுகூர எவருக்கும் உரிமையில்லை.

**கேள்வி:** ஜே.வி.பியினர் பயங்கரவாதிகள் இல்லையா?

**பதில்:** (அதற்கு நேரடியாகப் பதில் இல்லை) இப்போது வடக்கில் விதிக்கப்பட்டுள்ள தடைகள் நீதிமன்றம் விதித்த தடைதான்.

**கேள்வி:** தடையை நீக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கோரிக்கை முன்வைத்துள்ளனவே?

**பதில்:** ஜனாதிபதி இந்த விடயத்தில் தலையிட முடியாதவர். இதற்கும் அரசுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. தற்போது நாட்டில் கொரோனா அச்சம் நிலவுகின்றது. அதனையும் முன்வைத்து பொலிஸார் நீதிமன்றத்தை நாடினார்கள். நீதிமன்றம், அந்தக் காரணத்தையும் முன்னிலைப்படுத்தி, பயங்கரவாத தடைச் சட்டத்தையும் காரணம் காட்டி தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. நீதிமன்ற உத்தரவை எவரும் சவாலுக்கு உட்படுத்த முடியாது. (ஒ.5,22)

### தமிழ்கட்சிகளின் ...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் தங்கள் இன விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூர உரிமையுண்டு. அதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. தற்போது தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை தமிழ் மக்கள் நினைவு கூருவதற்கு பொலிஸார் ஊடாக, நீதிமன்றத்தை வைத்து ராஜபக்ச அரசு தடை உத்தரவை பிறப்பித்துள்ளது. இதனை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகள் எடுத்துள்ள நடவடிக்கையை நான் வரவேற்கின்றேன். அந்தக் கட்சிகளின் கடிதத்தில் உள்ள கோரிக்கைகளை ஜனாதிபதி உடனடியாக நிறைவேற்ற வேண்டும். நினைவேந்தலை தமிழர்கள் சுதந்திரமாக்கடைப்பிடிக்க வழி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும், என்றார். (ஒ.5,22)

### மாகாண சபை ...

ஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அன்றிலிருந்தே எதிர்ப்பை வெளியிட்டு வருபவன் நான். ஏனெனில் அது இந்தியாவால் பலவந்தமாக திணிக்கப்பட்டதொன்றாகும். 13 இன் பின்னணியில் அரசியல் காரணிகள் இருக்கின்றனவேதவிர பொருளாதார நன்மைகள் இல்லை. நான் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சராக பதவியேற்றபோது, நீங்கள் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அன்றிலிருந்து எதிரானவர். தற்போது நிலைப்பாடு மாறிவிட்டதா என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். எனது நிலைப்பாடு மாறவில்லை, அவ்வாறே உள்ளது என்றுதான் குறிப்பிட்டேன். நான் மாகாணசபை முறைமையை ஒழிக்கவேண்டும் என்றோ, ஒழிக்கப்படவேண்டும் என்றோ ஒருபோதும் குறிப்பிடவில்லை, என்றார். இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் அழைப்பில் அங்கு சென்று சந்திப்பை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,44)

**முகாமையாளர் தேவை**
கிளிநொச்சியில் இயங்கும்
**புடைவையகத்திற்கு**
முகாமையாளர் தேவை.
077 373 4109

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
af பிரெஞ்சு மொழி
- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).


021 222 8093 17, Kandy Road, Jaffna

**வீதி நிர்மாண வேலை கிளிநொச்சியில் உடனடி வேலை வாய்ப்பு**
நன்கு நிறுவப்பட்ட வீதி கட்டுமான கம்பெனி ஒன்றிற்கு
* வேலை. மேற்பார்வையாளர் (supervisors)
* சமையலாளர் (Cook)
* வேலையாட்கள் (skill)
* அலுவலக தேவைக்கும், வேலையாட்கள் தங்குவதற்கும் கட்டடங்கள், வீடுகள் வாடகைக்கு உடனடியாகத் தேவை.
077 749 7095, 077 869 3113

**விற்பனை**
அலுவலக தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
(Computer table and chairs (DAMRO)
076 691 1081

**ஆண் வேலை ஆட்கள் தேவை**
கோழிப் பண்ணையிலும், கோழி இறைச்சிக் கடையிலும் வேலை செய்வதற்கு ஆண்கள் தேவை.
தொடர்பு: 077 271 8149
viber:004-177-9243687

**வேலையாட்கள் தேவை**
தென்னம் தோட்ட பராமரிப்பு மற்றும் பண்ணை பராமரிப்பிற்கு குடும்பத்துடன் தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை.
(தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.)
தொடர்பு: 071 378 5518

**வேலை வாய்ப்பு**
இலங்கையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி நிறுவனத்திற்கு அனுபவம் மிக்க
*Sales Officer தேவை.
தொடர்புகளுக்கு
021 228 4998, 077 543 3436
dnlankaservices@gmail.com

**உடன் தேவை**
**கணினியில் தமிழ், ஆங்கில ரைப்பிங்** செய்யக் கூடிய **ஆண், பெண்** இருபாலாரும் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் நேரில் பேசிதீர்மானிக்கப்படும்
மற்றும் **போட்டோ கொப்பி** செய்யக்கூடியவர்களும்
**பழக விரும்புபவர்களும்** தொடர்புகொள்ளவும்.
அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது
(மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்)
இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
077 952 2444

**பல்கலைக்கழக மாணவிகளுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு.**
Brown Road இல்
உள்ள வீடொன்றில்
அறைகள் பல்கலைக்கழக
மாணவிகளுக்கு
மாதாந்த வாடகைக்கு உண்டு.
077 078 2322,076 604 7532

**வேலையாள் தேவை**
வீடு ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண்ணொருவர் தேவை.
077 400 5023

**பணிப்பெண் தேவை**
யாழ். வீட்டில் தங்கியிருந்து வேலைசெய்ய பணிப்பெண் தேவை.
077 604 8865

**பொதியிடுபவர் (Packer) தேவை**
அச்சுவேலி கைத்தொழில்
பேட்டையில் இயங்கும் பிரபல உற்பத்தி
தொழிற்சாலைக்கு பொதியிடல்
வேலைக்கு பெண் ஊழியர்கள் தேவை.
077 339 5775

**காணி தேவை**
யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் அல்லது வீதிக்கு அருகில் சுன்னாகத்துக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் 4 அல்லது 5 பரப்புக் காணி தேவை.
077 768 4236

**வாடகைக்கு தேவை**
யாழ் நகரில் இருந்து
5 km தூரத்தில் வீடு
அல்லது கடை வாகனத்
தரிப்பிட வசதியுடன்
தேவை. (உணவகத்திற்கு)
தொடர்பு :
77 808 9622, 077 494 9979

**காணி விற்பனைக்கு**
காங்கேசன்துறையில் பருத்தித்
துறை வீதியில் துறைமுகத்துக்கு
அண்மையில் நல்ல சூழலில் 6 1/2
பரப்பு காணியும் சந்தியில்
வியாபார நோக்கம் கொண்ட
1 பரப்பு காணியும் கல்லூரி வீதியில்
8 1/2 பரப்பு காணியும் தையிட்டி
யில் 7 1/2 பரப்பு காணியும் உடன்
விற்பனைக்கு உண்டு.
நேரடித் தொடர்புகளுக்கு :
075 565 7595, 071 482 1946

Nivithra
Beauty Parlour & Training Academy
**தொழில் சார் கற்கை நெறிகள்!!!!**




**NVQ Level 3 & 4**
- ★ அழகுக்கலை (Beautician)
- ★ சிகையலங்காரம் (HairDresser)
- ★ தையல்கலை (Tailoring)
- ★ கேக் ஐசிங் (Cake Icing& Decorating)
- ★ அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் .....
- ★ கற்றலுக்கு பின் தொழில்வாய்ப்பு உறுதி...
- ★ வெளிநாடு செல்வதற்கு ஏற்ற சான்றிதழ்

யாழ்மண்ணில் முதற்தடவையாக மூன்றாம் நிலைக்கல்வி.
தொழிற்கல்வி (TVEC) ஆணைக்குழுவில் NVQ அங்கீகாரத்தை
பெற்றுக்கொண்ட ஒரே தனியார் கல்வி நிறுவனம்
"Nivithra Beauty Parlour &Traning Academy"
எமது கல்வி நிறுவனத்திலேயே கல்வி கற்று NVQ பரீட்சைகளை
எழுதி அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம்!!!!
**புதிய பிரிவுகள் ஆரம்பம் 01.10.2020**
**Nivithra Beauty Parlour & Training Academy**
281 1/1,Clock Tower Road, Jaffna. (ஆஸ்பத்திரி பின் வீதி)
077 771 2604



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது